Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර

பக்கம் 24 ரூபா 30.00

ஜூன் 12 - 18, 2014

# வாரமலர் தினமுரசு

…ASU … M… …EKLY முரசு 1070

JAFFNA


சினி விசிட்



# 13 ஆவது திருத்தம் மீண்டும் உயிர்பெறுகிறது!



# இலங்கை அரசும் தமிழர் தரப்பும்



## ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தேர்தல் முடிவுகள்

ஒரு அலசல்

இந்தியாவின் புதிய அரசும்

## கூட்டமைப்பின் நிலைப்பாடும்!

## பொன்மகள் அருள் கிடைக்கவேண்டுமா?

லட்சுமி என்றாலே செல்வம் என்று அர்த்தம். மகாவிஷ்ணு கூட லட்சுமியை துதிகளால் போற்றுவதாகச் சொல்கிறது தேவி பாகவதம். அட்சய திருதியை தினத்தில் லட்சுமியை வழிபடுவது மங்காத செல்வத்தையும், குடும்பத்தில் மகிழ்ச்சியையும் அதிகரிக்கச் செய்யும்.

தேவேந்திரன், குபேரன், எமன், மனு உத்தானபாதன், துருவன், தட்சன், காசியபர், வசிஷ்டர், மகாபலி, சூரியன், புதன், வள்ளி ஆகியோர் லட்சுமி பூஜைசெய்து பலன் பெற்றவர்கள். லட்சுமிதேவி எளிமையான பூஜையாலேயே சந்தோஷம் அடைபவள்.

தூயமனத்துடன் சுத்தமான உடை அணிந்து, சுத்தமான இடத்தில் திருவிளக்கேற்றி மனதார வணங்கினாலேபோதும், லட்சுமியின் கரம் உங்கள் வீட்டுக்கதவைத் தட்டுடி வீட்டினுள் லட்சுமிகரம் நிறையும். மனம் முழுக்க அலை மகளை நினைத்துத் துதியைச் சொல்லி வழிபடுங்கள். பொன்மகள் அருளால் உங்கள் வாழ்வில் புத்துணர்ச்சியும் குதூகலமும் பிறக்கும்.

## அன்பு செலுத்துகிறாயா?

ஆன்மீகம்

வாழ்க்கையின் போக்கை மாற்றி அமைப்பது அன்பின் அனுபவங்கள். சரியான அன்பு அனுபவம் நல்ல வாழ்க்கையையும், தவறான அன்பு அனுபவம் மோசமான வாழ்க்கையையும் தருவது நம் வாழ்க்கைப் பாடம். அன்பின் அனுபவம் சில பொறுப்புக்களையும் சில கடமைகளையும் நம் மேல் சுமத்திவிடுகிறது. அன்பில் உருவாகும் கடமையிலும் பொறுப்பிலும், பெண் ஒருத்தி தன் வாழ்க்கை முறையை மாற்றுகிறாள். அவ்வாறே அன்பில் உண்டான கடமையிலும் பொறுப்பிலும் ஆண் ஒருவன் தன் பழைய வாழ்க்கைகளை மாற்றுகிறான்.

பேதுருவும் இனி தன் வாழ்க்கையை மாற்றவேண்டும் என்பதை இயேசு உணர்த்துகிறார். "நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடிவந்தாய். உனக்கு முதிர்ந்த வயது ஆகும்போது நீ கைகளை விரித்துக் கொடுப்பாய். வேறொருவர் உன்னைக் கட்டி, உனக்கு விருப்பம் இல்லாத இடத்திற்குக் கூட்டிச்செல்வார்" விருப்பத்தில் மாற்றம், செயற்பாட்டில் மாற்றம், வாழ்க்கையில் மாற்றம்.

## அல்லாஹ்வை மறவோம்

அல்லாஹ்விடம் கஷ்டத்தின்போது கரம் ஏந்தும் மனிதன் துன்பம் நீங்கியதும் இன்பத்தில் அவன் மூழ்கி ஏனோ அல்லாஹ்வை மறந்துவிடுகிறான். இந்நிலை ஏற்படும்போது எவ்வளவு பயங்கரமான விளைவு ஏற்படும். அதாவது அவனது உள்ளத்தில் அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனை அறவே இருக்காது.

அதற்கப்புறம் அவனால் அவனது மரணத்திற்கு பின்னுள்ள வாழ்க்கைக்காக ஒருபோதும் செயற்பட முடியாது. புவியில் புத்திசாலி என்பவன் யார்? தனது உள்ளத்தைக் கட்டுப்படுத்தி அதில் அல்லாஹ்வை நிலைநிறுத்தி மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கைக்காக செயற்படுபவனே.

உள்ளத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி ஒருவரை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாற்றமாக செல்லாதிருப்பதற்கு உதவுவதோடு எந்நிலையிலும் அவர் அல்லாஹ்வை மறக்கமாட்டார்.

எம்.சி.கலீல், கல்முனை -05.

## கவிதைப்போட்டி 1067



### படியளப்புகள்

பா முதுமையிலெனை
ரா புராமரிப்பாளென முழு நம்பிக்கை
ட் தந்த மூத்தமகள் – தன்
டு பிள்ளைகளைத் தவிக்கவிட்டு
க் சொல்லாமல் கொள்ளாமல்
கு முள்ளிவாய்க்காலில்...
ரி போனாலும் – நான்
ய பேரனல்லவா???
து கைவிடலாமோ??
என்னைப் படைத்தவனுக்காவது
படியளக்க தெரிந்தால் சரி!

சுபாஷினி பிரணவன்.

### இரக்க பாசம்

அம்மா அமுதமூட்டி
அரவணைத்த இருவரிங்கு
அம்மப்பாவின் பராமரிப்பில்
அன்னையை இழந்தபின்
குழந்தைகள் இருவருமிங்கு
கூடியிருப்பது ஏன்?
இரட்டைக் குழந்தைகளின்
இரக்கப் பாசம்.

எம்.சி.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல 1070



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.06.2014

கவிதைப் போட்டி இல. 1070 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### வேண்டும்

அன்போடு பாலூட்ட
ஒரு அன்னை வேண்டும்
ஆசையோடு கட்டியணைக்க
தந்தை வேண்டும்
கைபிடித்து நடக்க ஒரு
அண்ணன் வேண்டும்
இல்லையேல் என்னைக் கொல்ல
ஒருவன் வேண்டும்.

ஜெ.ஜெயலக்ஷன். கோண்டாவில்.

### காத்திருக்கிறோம் நாங்கள்

யாருமற்ற அனாதைகள் நாங்கள்
தாத்தாவை விட்டால்
யாருமில்லாத நாங்கள்
பனை மரநிழலில்
வசிக்கிறோம் நாங்கள்
பசியோடு வாடும்
குழந்தைகள் நாங்கள்
இரங்குவார் யாருமற்ற நாங்கள்
கடவுள் கொடுக்கும்வரை
காத்திருக்கிறோம் நாங்கள்.

யே.ஒகஸ்ரா. கண்டி.

### தாயை தேடும் தடயங்கள்

விட்டுச்சென்றனரோ பெற்றோர்
விடலைகளைத் தன்னந்தனியே அல்லது
விட வைத்தனரோ கொடும்பாவிகள்!
விடியுமோ என்ற ஏக்கமதோ
விழிகளின் பார்வைதனிலே – எவ்வாறு
வீடேற்றுவேன் என்று பால்புட்டியோடு
தாயன்பைப் புகட்டும் தாத்தாவும்
தடம்புரண்டுபோன வாழ்வின்
தடயத்தைத் தேடும் சிறுமிகளும்!

கனகசாந்தி,
தம்பிலுவில் –02.

### இன்னும் எத்தனை நாட்கள்

பால் கொடுக்க
அன்னையும் இல்லை
பசிதீர்க்க என் மனைவியும் இல்லை
இயலாத என்னிடம்
இரு பிஞ்சுகள் அனைவரையும்
விட்டுவிட்டு
ஆண்டவனிடம் தஞ்சம் கொண்டதே
இரு ஜீவன்களும்....

இளம்பிறை யோகன்

## உங்கள் பக்கம்

### தன்னியக்க சேவை தேவை?

கொடிகாமம் பிரதேசத்தில் இயங்கும் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையில் வங்கிக் கணக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு பணத்தை பெற்றுக் கொள்வதற்கான தன்னியக்க சேவை (ATM இயந்திரம்) இல்லாதது பெருங் குறைபாடாகக் காணப்படுகின்றது.

அதாவது ATM இயந்திரம் இல்லாத காரணத்தினால் இப்பிரதேச வாடிக்கையாளர்கள் வங்கி நடவடிக்கை இல்லாத காலம் மற்றும் விடுமுறை தினங்களில் வைப்புச் செய்த பணத்தை அவசர தேவை நிமித்தம் பெற்றுக்கொள்வதற்கு சாவகச்சேரி இலங்கை வங்கி ATM இயந்திரத்திலே பணத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய சிரம நிலை காணப்படுகின்றது. கொடிகாமப் பிரதேச மக்கள் தூர பயணத்தை மேற்கொண்டே சாவகச்சேரிக்கு அல்லது வேறு இடங்களிலோ பண்த்தை எடுக்க வேண்டிய நிலை துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இலங்கை வங்கி வாடிக்கையாளர்களின் கருத்தை நலனில் கொண்டு கொடிகாமத்திலும் ATM இயந்திர சேவையை ஏற்படுத்துவது அவசியமானதாகும். இவ்வங்கியின் வாடிக்கையாளர் என்ற வகையில், இதை நான், உரிய அதிகாரிகளுக்கு தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாகத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். எனவே விரைவில் ATM இயந்திரத்தை கொடிகாமத்திலும் நிறுவ இலங்கை வங்கியின் அதிகாரிகள் சிரமேற்கொள்ள வேண்டும் எனக்கேட்டுக் கொள்கின்றேன்.

வாடிக்கையாளர்,
கொடிகாமம்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com





## வாசகர் சாலை

### அரசியலில் கலக்குகிறாய்

'சென்றவாரம் வெளியான, நைஜீரிய பயங்கரவாதமும் அமெரிக்கத் தலையீடும் என்ற இரண்டு பக்கக் கட்டுரை சிறப்பாக உள்ளது. அதுபற்றிய முழுத் தகவல்களையும் நீ விரிவாகத் தந்துள்ளாய். இதுபோன்று சில கட்டுரைகளை சிறப்பாகத் தந்துகொண்டிருக்கிறாய். அரசியலில் சிறப்பாக கலக்குகிறாய். எக்ஸ்ரே. கிழக்கான். ஹூசைன். மதியூகி போன்றவர்களின் அரசியல் கட்டுரைகள் சிறப்பு.

எஸ்.சுதாஜினி, யாழ்ப்பாணம்.

### வாழ்த்துக்கள்!

முரசு எனது கவிகள், வாசகர்சாலை என்பவற்றை பிரசுரிக்கின்றாய். என்போன்ற இளம் படைப்பாளிகளுக்கு வாய்ப்பு தருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இளம் படைப்பாளிகள் பலபேரை உருவாக்கிய பெருமை தினமுரசுக்கு உண்டு. பல படைப்பாளிகள் என்னிடம் சொல்லியும் உள்ளார்கள். அனைத்து பக்கங்களும் அறிவுக்கு வழிவகுப்பவை. முரசின் பணி என்றும் தொடரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

யானு, யாழ்ப்பாணம்

### கவனத்தில் கொள்வாயா?

முரசின் பக்கங்கள் நெஞ்சைத் தொட்டவை. சில பக்கங்கள் திறம்பட அமைந்திருந்தாலும் சில குறைகளை சுட்டிக்காட்ட தேவை வாசகனாகிய எனக்கும் உண்டு. நீ எனது குறைகளை ஏற்றுக் கொள்வாயென நினைக்கின்றேன். கட்டுரைகளின் எண்ணிக்கைதான் அதிகமாய் உள்ளதே தவிர அதில் சுவாரசியமான தகவல்கள் இல்லை. 24 ஆம் கொஞ்சமாவது முன்பு பிரசுரமானது. இப்பொழுது அதையும் காணவில்லை. முரசு இதை கவனத்தில் எடுக்கவேண்டும்.

எம்.பிரிந்தன்,
ஆனைக்கோட்டை.

### அமைதியின் சொற்கள்

உங்களால் ஆட முடியும் அற்புதம்தான். ஆனால், உள்ளத்தில் ஆடக் கற்றுக் கொண்டீர்களா?
உங்களால் பாட முடியும். அற்புதம்தான். ஆனால், உள்ளத்தில் பாடக் கற்றுக் கொண்டீர்களா?
உங்களால் விமானத்தின் பறக்க முடியும். உள்ளத்தில் பறக்கக் கற்றுக் கொண்டுவிட்டீர்களா?
இதைக் கற்றுக் கொள்ளவில்லை என்றால் இந்தப் பயணம் பூர்த்தியாகவில்லை என்பதுதான் அர்த்தம்.

- பிரேம் ராவத்

# சரியான தெரிவுகளே தெளிவான திசையைத் தீர்மானிக்கும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் தெரிவிப்பு



மக்களின் சரியான தெரிவுகளே எதிர் காலத்தில் அரசியல் நகர்வுகள் தெளிவான திசையில் இருக்கின்றதா, இல்லையா என்பதை தீர்மானிக்கப் போகின்றது.

தமிழர்களது ஆயுதரீதியான போராட்டம் ஒரு தலைமையின் கீழ்தான் இருக்கவேண்டும் என்றநிலை மறக்கமுடியாத வடுக்களுடன் முள்ளிவாய்க்காலுக்குள் முடிந்துவிட்டது.

எனவே, எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தி மக்கள்தான் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், இளவாலைப் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சரின் ஒருங்கிணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்கள் உங்களின் வாழ்வை ஒளிமயமாக்குவதற்காகவே காத்திருக்கின்றன.

1990களில் அமைச்சரால் ஆரம்பிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார அபிவிருத்தி என்ற கப்பல் அனைத்து இடர்களையும் தாண்டி இன்றுவரை வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. மக்களின் தேவைகளை முடிந்தவரை விரைவாகத் தீர்த்துவைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், மக்களாகிய உங்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் உங்களுக்கான அபிவிருத்திகளைத் தடுத்து வருகின்றன. சுதந்திரமாக பேசுவதற்கான சூழல் உருவாகியுள்ள நிலையில் சரியானவர்களைத் தெரிவுசெய்து அவர்களின் கரங்களைப் பலப்படுத்தவேண்டியது மக்களின் கரங்களிலேயே இருக்கின்றது. அதனூடாகவே இந்தச் சமூகம் தேவைகளைப் பூர்த்திசெய்து ஏனைய சமூகங்களுடன் தலைநிமிர்ந்து நிற்கும் என்று தெரிவித்தார்.

## தூர சேவை பஸ்கள் நிறுத்தும் உணவகங்களின் தரத்தை உயர்த்த காலக்கெடு!

தூர சேவை பஸ்கள் உணவிற்காக நிறுத்தும் உணவகங்களின் தரத்தை மூன்றுமாத காலத்தினுள் மேம்படுத்துமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர் ரேணுக பெரேரா உணவக உரிமையாளர்களுக்கு பணித்துள்ளார். தவறும் உணவகங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

தூர சேவை பஸ்கள் உணவுபெற நிறுத்தும் உணவகங்களின் தரத்தை உயர்த்துவது தொடர்பாக சுகாதார அமைச்சும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் இணைந்து ஏற்பாடு செய்த உணவக உரிமையாளர்களை தெளிவுபடுத்தும் செயலமர்வு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த ஆணைக் குழுவின் தலைவர், சுகாதார அமைச்சு மேற்கொண்ட கணிப்பீட்டின்படி தூரசேவை பஸ்கள் நிறுத்தும் உணவகங்கள் 'C' தரத்தில்தான் உள்ளன. இது மிகவும் குறைந்த தரமாகும். பயணிகளுக்கு சுத்தமான தரம்கூடிய உணவு வகைகளை வழங்கவேண்டும். மலசலகூட



வசதிகளும் உரியதரத்தில் இருக்கவேண்டும்.

சகல தூரசேவை சிற்றுண்டிச்சாலைகளையும் பதிவுசெய்யவும் இவற்றின் தரத்தை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். தனியார் பஸ்களினூடாக சிறந்த சேவை வழங்கப்படாததால், தனியார் பஸ் பயணிகள் தனியார் பஸ்களை விட்டும் தூரமாகிவருகின்றனர்.

சட்டங்களை முழுமையாக அமுல்படுத்தி உங்களை பயமுறுத்த நான் தயாராக இல்லை. பயணிகளுக்கு நிபந்தனையற்ற முறையில் தரமான உணவுகளை வழங்குவது உணவக உரிமையாளர்களின் பொறுப்பாகும். 3 மாத காலத்தினுள் 50 வீதமாவது ஹோட்டல்களை மேம்படுத்தி உரிய சேவை வழங்காவிடின் உரிய நடவடிக்கை எடுக்கநேரிடும், என்றார்.

அதேவேளை மிகவும் அதிகமான பயணிகள் நாள்தோறும் இரவுநேரப் பயணத்தில் ஈடுபடுகின்ற யாழ்-கொழும்பு பேருந்துச்சாலையில் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் நிறுத்தப்படுகின்ற உணவகங்களின் சுகாதார நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும், இவ்வீதியால் பயணிக்கின்ற ஆண் - பெண்கள் மலசலகூடத் தேவைகளுக்காக பெரிதும் அவதிப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் தீவிர கவனம் செலுத்தவேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## வடமாகாண சபையின் பொறுப்பின்மையால் நழுவியது இன்னொரு சந்தர்ப்பம்!



வடமாகாணத்தின் பல பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர் இல்லாமல் திண்டாடப்படுகின்ற நிலையில் உள்ளது. உடற்கல்வி என்பது, அனைத்து மாணவர்களும் கட்டாயம் கற்கவேண்டிய ஒரு முக்கிய பாடம். ஆனால், இவ்விடயத்தில் வடக்கு மாகாண சபையினதும், வட மாகாண கல்வி அமைச்சினதும் செயற்திறன் இன்மை காரணத்தாலும், பொறுப்பற்றதனத்தினாலும் உடற்கல்வி ஆசிரியர்களை பெற்றுக் கொள்ள கிடைத்த சந்தர்ப்பம் நழுவவிடப்பட்டுள்ளதாக இணைய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடக்கில் இயங்குகின்ற கல்வியியற் கல்லூரிக்கு புதிய அனுமதிகோரலின்போது மத்திய கல்வி அமைச்சினால் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிற்கு வட மாகாணத்தின் பாடசாலைகளிலுள்ள ஆளணி தொடர்பான விவரங்களை அனுப்பும்படி தெரிவிக்கப்பட்டிருந்தது. மாகாணக் கல்வி அமைச்சு, கோரப்பட்ட ஆளணி தொடர்பான விவரத்தை அனுப்பியிருக்கவில்லை.

இதனால் வடபிரதேசத்திலிருந்து கல்வியியற் கல்லூரிக்கு அனுமதிக்கப்படும் ஆசிரிய மாணவர்களின் அளவு தேவைக்கேற்ற வகையில் அமையவில்லை. அந்தவகையில் கல்வியியற்கல்லூரிக்கு இந்த ஆண்டு உடற்கல்விக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரேயொரு மாணவர் மட்டும்தான் அனுமதிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், வட மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் உடற்பயிற்சி ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப முடியாதநிலை தொடரவுள்ளதாக, கல்விச் சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

மற்றும், வட மாகாண சபைக்கான அமைச்சர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைசார்ந்த அனுபவம் மிக்கவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படுவதாகக்கூறி முன்னாள் வலய கல்வி பணிப்பாளர் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்ட போதிலும் இவ்வாறான செய்திகள் ஏமாற்றமளிப்பதாக கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கராச்சிக்குள் புகுந்தது தற்கொலை அணி நடந்தது என்ன?

பாகிஸ்தான் கராச்சி விமான நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பாகிஸ்தான் தலிபான் இயக்கம் (தஹ்ரீக்-இ-தலீபான்) உரிமை கோரியுள்ளது. விமான நிலைய தாக்குதலுக்கு ஆயுதம் தரித்த 10 தற்கொலை தாக்குதலாளர்களை அனுப்பியது தாம்தான் எனவும், அந்த இயக்கம் கூறியுள்ளது.

சுமார் 5 மணிநேரம் நடந்த இந்த துப்பாக்கிச் சண்டையில் இறந்தவர்களின் எண்ணிக்கை, தற்போது 28ஆக அதிகரித்துள்ளது. இதில், தாக்குதலுக்கு வந்திருந்த 10 தற்கொலை தாக்குதலாளர்களும் அடக்கம்.

பாகிஸ்தான் தலிபான் இயக்க செய்தி தொடர்பாளர் ஷாஹிதுல்லா ஷாஹிட், "கராச்சி விமான நிலையம்மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல், எமது தலைவர் ஹகிமுல்லா மெஷூத் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் விதத்தில் நடத்தப்பட்டது" என அறிவித்துள்ளார்.

இந்த ஹகிமுல்லா மெஷூத், கடந்த நவம்பரில் சி.ஐ.ஏ.வின் உளவு விமானம் ஒன்றால் ஏவப்பட்ட ஏவுகணைமூலம் கொல்லப்பட்டார்.

பாகிஸ்தானுக்குள் தற்போது நடக்கும் உளவு விமான ஏவுகணை தாக்குதல்கள், சி.ஐ.ஏ.வால் நடத்தப்படுவதில்லை எனவும், பாகிஸ்தான் விமானப்படை இந்த தாக்குதல்களை நடத்துகிறது எனவும் கூறப்படுகிறது. தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியான வடக்கு வசிரிஸ்தானிலேயே பெரும்பாலான உளவு விமான தாக்குதல்கள் தற்போது நடக்கின்றன.



இந்நிலையில், கராச்சி விமானநிலையத்தில் நடந்த இந்த தாக்குதல் தொடர்பான மேலதிக விபரங்கள் தற்போது தெரிய வந்துள்ளன.

தற்கொலை தாக்குதல் நடத்த வந்த 10 தலிபான்களும், இரண்டாக பிரிந்து, ஐந்து பேர்கொண்ட குழுக்களாக விமான நிலையத்தின் இரு வாயில் வழியாக உள்ளே சென்றனர். இவர்கள் அனைவரும், விமான நிலைய பாதுகாப்பு படையினர் அணியும் அதே சீருடை அணிந்திருந்த காரணத்தால், இவர்களை யாரும் தடுத்து நிறுத்தவில்லை. இதில் ஒரு அணி, விமான நிலையத்தின் வி.ஐ.பி. பகுதிக்கு உள்ளே சென்றது. மற்றைய அணி, விமானநிலைய பராமரிப்பு வாயில் வழியாக உள்ளே புகுந்தது. இந்த இரு இடங்களுக்கும் உள்ள ஒற்றுமை, அவை அதியுயர் பாதுகாப்பு வலய பகுதிகள் என்பது ஒன்று.

மற்ற ஒற்றுமை, இந்த இருபகுதிகளிலும் இருந்து நேரடியாக விமானங்களை அடையலாம் என்பது!

இவ்விரு இடங்களிலும் இருந்து விமானங்கள் தரித்திருக்கும் பகுதிக்கு சென்றுவிட்டால், அங்கிருந்த விமானம் ஒன்றை கடத்தலாம் என்பதே தீவிரவாதிகளின் திட்டமாக இருந்திருக்கிறது. ஆனால், அதற்கிடையே பாதுகாப்பு படையினருக்கு இவர்கள்மீது சந்தேகம் ஏற்பட்டுவிடவே, விமான நிலைய கட்டடத்திற்குள்ளேயே சண்டை தொடங்கி விட்டது.

தீவிரவாதிகளின் திட்டம் விமானத்தை கடத்துவது என ஊகிக்கப்படுவதால், இவர்களில் யாராவது விமானம் செலுத்தும் பயிற்சி பெற்றுள்ளார்களா என ஆராயத் தொடங்கி உள்ளது, பாகிஸ்தான் உளவுத்துறை.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# தமிழர்களுக்கு எது? ஐ.நா. சபை

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களையும், போர்க்குற்றங்களையும் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும், என்று ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை பேரவையில் கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா நிறைவேற்றிய தீர்மானம் மீதான விசாரணைகள் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவிப்பிள்ளை கூறியுள்ளார்.

இவ்வருடம் தனது பதவிக்காலத்தில் இருந்து ஓய்வுபெறும் நவிப்பிள்ளை, அதற்கு முன்னர் இலங்கைமீதான விசாரணைகளுக்கான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துவிட வேண்டும் என்பதில் கூடுதல் கவனம் செலுத்திவருகின்றார். விசாரணைக்குழுவின் சிரேஷ்ட இணைப்பாளராக சண்ட்ரா பெய்டாஸ் என்ற மனித உரிமை நிபுணரை நியமித்துள்ளார்.

நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்த முன்னாள் பெண் நீதிபதியான டேம் சில்வியா கார்ட்ரைட் தலைமையில் விசாரணைக்குழு நியமிக்கப்படவுள்ளது. விசாரணைக்குழு தெரிவுசெய்யப்பட்ட தொடர்பில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 26ஆவது கூட்டத்தில் நவிப்பிள்ளை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுதொடர்பில் இலங்கை உட்பட பேரவையில் அங்கம்வகிக்கும் 47 நாடுகளுக்கும் நவிப்பிள்ளை தெளிவுபடுத்துவார். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஜூலைக்கும், நவம்பருக்கும் இடைப்பட்ட காலத்தில் விசாரணைகள் முக்கிய கட்டத்தை அடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் விசாரணைகளுக்கு இலங்கை ஒருபோதும் ஒத்துழைக்கப் போவதில்லை என்று இலங்கை அரசு தொடர்ச்சியாக கூறுகின்றபோதும், அதுதொடர்பில் மனித உரிமைப் பேரவைக்கு உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் வழங்கவில்லை என்று தெரியவருகின்றது.

மறுபக்கத்தில் விசாரணைக்காக இலங்கை எவர் வருவதற்கும் அனுமதிக்கக் கூடாது என்று சிங்கள கடும்போக்காளர்கள் குரல்கொடுப்பதோடு இலங்கை அரசுக்கும் அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

அரசு இவ்விடயத்தில் இறுதிநேரத்தில் சில வியூகங்களை கையாளும் என்று கூறுகின்றது. இது இறுதிவரை பிரபாகரனுக்கு அமெரிக்கா கப்பல் அனுப்பும் என்ற கதையாகிவிடக்கூடாது என்றும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையே தமிழ்க் கூட்டமைப்பினர், மனித உரிமை பேரவையின் விசாரணைகளுக்கு தமிழ் மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதோடு, சாட்சியங்களையும் வழங்கவேண்டுமென உசுப்பேற்றியுள்ளனர்.

மனித உரிமைப் பேரவையின் செயற்பாடுகள் தானாகவே இன்னொரு பரிணாமத்தை அடைந்துவருகின்றது. அதை இழுத்துக்கட்ட முடியாது. கூட்டமைப்பினர் அற்ப அரசியலுக்காக அதை தமிழ் மக்களின் தலையில் கட்டிவிடுவதால் அரசினதும், சிங்கள மக்களினதும் விசாரணைக்குழு மீதான வெறுப்பை தமிழ் மக்கள் சுமக்கநேரிடும்.

தமிழ் மக்கள் அக்கறை காட்டவேண்டியதும், பாங்களிப்புச் செய்யவேண்டியதும் மோடி எனும் மந்திரத்தை பலனளிக்கச் செய்வதிலேயே இருக்கவேண்டும். தமிழர்களுக்கு இந்தியாதான் ஐ.நா. சபை.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# 13ஆவது திருத்தம்

## மீண்டும் உயிர் பெறுகிறது

# இலங்கை அரசும் தமிழர் தரப்பும்

**இலங்கை** - இந்திய ஒப்பந்தம் 1987ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜெ.ஆர். ஜெயவர்தனாவும், இந்தியா வின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியும் கைச்சாத்திட்டார்கள்.

அந்த ஒப்பந்தத்தின் நோக்கங்கள் எதுவாக இருந்தாலும், பிரதான விளைவாக மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிரும் அதேவேளை இலங்கைத் தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பரப்பான வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் மாகாணமாக ஏற்றுக்கொள்வதோடு, அதற்கு விஷேட அதிகாரங்களையும் வழங்கும் திருத்தங்களைக் கொண்டுள்ள வகையில் 13ஆவது சட்டத்தில் திருத்தத்தை ஏற்படுத்துவதாகும்.

ஆகவேதான் 13ஆவது திருத்தச் சட்டம் என்று அது விழிக்கப்படுகின்றது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இப்போதைய இலங்கை ஜனாதிபதியும், கடும்போக்கு சிங்களவர்களும் மனதார ஏற்றுக்கொள்ளவில்லை. இந்திய அரசு தம்மீது திணிக்கும் அழுத்தமாகவே கருதினார்கள்.

வடக்கு - கிழக்கை இணைத்து, தமிழ் மக்கள் தமது தாயகப்பகுதியாக கருதும் நிலப்பரப்பை அவர்களே விஷேட அதிகாரங்களுடன் ஆளுகின்ற வாய்ப்பைக் கொடுப்பதாக இந்த ஒப்பந்தம் என்று சிங்கள கடும்போக்குவாதிகள் தமது எதிர்ப்புகளை வெளிப்படுத்தினார்கள்.

புலிகளும் 13ஆவது திருத்தத்தை எதிர்த்தார்கள். அதற்குக் காரணம் வடக்கு, கிழக்கில் மாகாண சபை ஒன்று அமையப்பெறுகின்ற போது, அது தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு அதில் மக்கள் தெரிவுசெய்யும், மக்கள் பிரதிநிதிகளே நிர்வாகிகளாக இருக்கும் ஜனநாயக மரபு கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று இந்திய அரசு விரும்பியது. ஆனால் புலிகளின் தலைவர் பிரபாகரனோ, தேர்தல் நடைபெற்று மக்களால் தெரிவு செய்வதைவிடவும் தாமே முதலில் அந்த நிர்வாகத்தை ஏற்று நடத்த வேண்டும் என்று கூறினார்.

அந்த இழுபறியில் புலிகளின் அணுகுமுறைகள் மாகாண சபையை ஒரு நிர்வாக சபையாக உருவெடுப்பதை தடுப்பதாகவே இருந்தது. தனிநாட்டுக்கான போராட்டத்தை தடுத்து, இந்தியா மாகாண சபை என்பதை தம்மீது திணித்துவிடப் பார்ப்பதாக புலிகள் இந்தியாவுக்கு எதிராகவும், மாகாண சபை முறைமைக்கு எதிராகவும் செயற்படத் தொடங்கினார்கள்.

புலிகளின் நிலைப்பாடானது ஆயுதப் போராட்டத்தின் ஊடாக தனிநாடு ஒன்றை பெற்றுக்கொள்வதாகவே இருந்தது. இவ்விடயங்களை பல தடவைகள் விரிவாக எழுதியாயிற்று என்பதால் மேற்கூறிய விடயங்களை இப்படித்தான் சுருக்கமாக தற்போது கூறமுடியும்.

புலிகள் இருந்தவரை தனிநாட்டுக் கோரிக்கைதான் தமிழ் மக்களின் ஒரே தீர்வு என்பதே புலிகளின் பரப்புரையாக இருந்தது. புத்திஜீவிகளையும், சக போராளி இயக்கங்களையும், போராளி இயக்கங்களின் குடும்பத்தினரையும், தமது



> தமிழர் அரசியல் தளத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு என்றும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் தொடங்கி தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நோக்கி நாம் முன்னேறலாம் என்று தொடர்ந்தும் வற்புறுத்தி வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அவரது தோழர்களும்தான்.

நிலைப்பாட்டை விமர்சித்தவர்களையும் துரோகிகளாக சித்தரித்து புலிகள் கொலை செய்தபோது புலிகள் கூறுவது தான் ஒரே முடிவு என்ற தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், புலிகள் பெரும் ஆயுதப்படைப் பலத்தோடும், எங்கு வேண்டுமானாலும் குண்டு வெடிப்புகளையும், கொலைகளையும் செய்யக்கூடிய உலகப் பயங்கரவாதமாக உருவெடுத்து நின்றபோதும், புலிகளின் தவறான போராட்ட போக்கையும், மாகாண சபையை புலிகள் நிராகரித்ததையும் பகிரங்கமாக எதிர்த்ததோடு, புலிகள் நடத்தும் பயங்கரவாத அழிவு யுத்தம் இறுதியில் அவர்களையும் அழித்து, தமிழ் மக்களையும் அழிக்கப் போகின்றது என்றும், தனிநாட்டுக் கோரிக்கையை அடைந்துகொள்ள இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் உதவப் போவதில்லை என்றும், 13ஆவது திருத்தச்சட்டம் ஏற்படுத்தித் தந்திருக்கும் வாய்ப்பை தமிழ் மக்கள் அனுபவிப்பதற்கு புலிகள் தடையாக இருக்கக்கூடாது என்றும், அந்த வாய்ப்பையும் சிதைக்க கடும்போக்கு இனவாதிகள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் தொடர்ந்தும் கூறிவந்தவர். ஈ.பி.டி.பியின் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மிகுந்த தூரநோக்கத்துடனும், எச்சரிக்கையுடனும் கூறிவந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கூறிக் கொண்டு மட்டும் இருக்காமல் அரசியல்ரீதியாக அநாதரவாகியிருந்த தமிழ் மக்களுக்கும், யுத்தத்தின் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்த தமிழ் மக்களுக்கும் தனது இணக்க அரசியல் உறவின் ஊடாக உதவிகளைச் செய்துவந்தார். யுத்த காலத்திலும் வேலை வாய்ப்புக்களை வழங்கினார். நிவாரணத்துக்காகவும், பாதுகாப்புக்காகவும் தமிழ் மக்கள்சார்பாக அரசின் கோட்டைக்குள்ளேயே ஒலித்த ஒரே குரலாகவும் இருந்தார்.

அன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை சந்தித்து உதவிகள் பெற்றவர்களும், வேலைவாய்ப்புக்களை பெற்றவர்களும், தமது பிள்ளைகளை பாதுகாத்துக் கொண்டவர்களும் வாழும் சாட்சியாக இருந்தபோதும், அவர்களில் பலர் நன்றி மறந்து போய் இருக்கின்றார்கள்.

தமிழர் அரசியல் தளத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு என்றும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் தொடங்கி தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நோக்கி நாம் முன்னேறலாம் என்று தொடர்ந்தும் வற்புறுத்தி வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அவரது தோழர்களும்தான். இக்கருத்தை சுமந்து வாழ்ந்ததற்காகவே புலிகள் ஈ.பி.டி.பியின் பல தோழர்களை நித்திரையிலும், ஆலயங்களிலும், தெருவிலுமாக கொலை செய்தார்கள். அவை ஈ.பி.டி.பியின் உறுப்பினர்களின் மீதான வேட்டுக்களல்ல, அது ஒவ்வொன்றும் தமிழ் மக்களுக்கு எதிரான வேட்டுக்கள் என்று ஈ.பி.டி.பி.யினர் கூறிவந்துள்ளனர்.

இறுதியில் கிழக்கிலிருந்து புலிகள் விரட்டியடிக்கப்பட்ட போது, ஜே.வி.பியினர் வழக்குத் தொடுத்து வடக்கையும், கிழக்கையும் இரண்டாகப் பிரித்தார்கள்.

இப்போது 13ஆவது திருத்தத்தையே சட்டப் புத்தகத்திலிருந்து அகற்ற வேண்டும் என்று சிங்கள கடும்போக்குவாதிகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்துவருகின்றார்கள்.

அரசுக்கும் அத்தகைய விருப்பும் இருக்கவும் கூடும். ஆனால் தமிழ் மக்கள் தமது உரிமைக்காகவும், கௌரவமான வாழ்வுக்காகவும் செய்த தியாகங்களும், இழந்த இழப்புக்களும் கடும்போக்கு சிங்களவாதிகளின் நோக்கத்துக்கு அவ்வப்போது தடைகளை ஏற்படுத்திவருகின்றது.

தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையையும், மாகாண சபை வாய்ப்பையும் வலுவற்றதாக்கி மாவட்ட மட்ட அதிகாரங்களைக்கூட தமிழ் மக்களிடம் கொடுப்பதற்கு விரும்பியிராத கடும்போக்குச் சிந்தனையானது, தமது செயற்பாடுகளுக்கு நியாயம் தேடுவதற்கான இறுதித்தளமாகவே பாராளுமன்றத் தெரிவுக்குழுவை வடிவமைத்தது என்றும் கருத இடமுண்டு.

அதற்குக் காரணம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு உட்பட்ட தமிழ் தலைமைகள் பங்குகொண்டு தமது நியாயங்களை தெளிவுபடுத்தி தமது கோரிக்கையில் உறுதியைக் காட்டி தமக்கு தர்மசங்கடமான நிலையை உருவாக்காதுபோனால், அவர்கள் தீர்வுக்கு முன்வரவில்லை. ஆகவே அனைத்து இலங்கையர்களுக்கும் பொதுவான அணுகுமுறைகளே ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப இறுதியான முடிவாக இருக்கும் என்று தப்பித்துக் கொள்ளமுடியும்.

அதன்பின்னர் மாகாண சபையூடாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான முயற்சிகளும் சட்டரீதியாக தடையை ஏற்படுத்த முடிந்திருக்கும். அதுவே கடும்போக்கு சிங்கள சக்திகளின் விருப்பமாக இருக்கையில், அவர்களின் விருப்பத்திற்கு ஏற்பவே கூட்டமைப்பினரும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குகொள்ளாமல் இருந்து வருகின்றனர்.

அண்மையில்கூட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குகொள்ளுமாறும், காலஅவகாசம் கொடுத்து பேச்சுக்களை நேர்மையாக நடத்துமாறும் கேட்டிருந்தார். ஆனால் கூட்டமைப்பினரோ, சிங்கள கடும்போக்குச் சக்திகளின் வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதிலேயே தீவிரமாக இருக்கின்றனர்.

(தொடர் 21 ஆம் பக்கம்)



# இனி அவர்கள் வரவேண்டாம்



நீலக்கோடுகள் அடர்த்தியாய் வரையப்பட்ட சாரமும் வெள்ளைச் சேட்டும் அணிந் திருந்தான். சனநெரிசலை விலக்கி வந்து கொண்டிருந்தவன் தனது நடையின் வேகத்தைக் கூட்டி ஓடிவரத் தொடங்கினான். கையில் ஒரு பை அதனுள் எதை- த்யோ வைத்துக் காவிக்கொண்டு ஓடிவந்தான். அவளைப் பெயர் சொல்லி அழைத்தான். கையில் இருந்த பையிலிருந்து ஒரு அழகான பெட்டியை அவளிடம் நீட்டினான். இது உன்னுடைய மகனுக்காக நான் எடுத்து வைச்சிருந்தனான். இத அவனிட்டைக் குடு மாமா தந்தனெண்டு....!

அவன் கொடுத்த பெட்டி தவறி கீழே விழுந்தது. அதனுள் சில்லறைக்காசுகள். நிலத்தில் சிதறிய காசுகளைப் பொறுக்கிப் பெட்டியில் பத்திரப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தாள். பச்சையுடையுடுத்த சட்டித் தொப்பியணிந்தவர்கள் அவனைச் சூழ்ந்தார்கள். பாதணி அணியப்படாத வெறும் காலோடு சகதி நிறைந்த ஆற்றுநீரில் இறங்கினான். ஆற்றுநீர் அவனை தன் மெல்லிய கால்களோடு இழுத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தது.

அவன் பெயரைச் சொல்லிக் கத்தியழு தாள். சிரித்தபடி அவளிடம் வந்தவன் இரத்தம் வழிய ஆற்றோடு அடிபட்டு இழுபட்டுப் போய்க்கொண்டிருந்தான். மெல்லென ஓடிக்கொண்டிருந்த ஆற்றுநீரில் அவனது குருதியும் கலந்தோடியது. ஆற்றோடு இழுபடும் அவனை நோக்கிக் கைகளை நீட்டியழுதாள் அவன் கண்ணிலிருந்து விடுபட்டுத் தொலை வாகிக் கொண்டிருந்தான்...!

அவசரமாக எழுந்தாள். சே... கனவு....! உறங்கிக்கொண்டிருந்த மகனின் அறையைத் திறந்து மின் விளக்கைப்போட்டாள். என்னம்மா...! நித்திரைத் தூக்கத்தில் கேட்டான் மகன். சரி படுங்கோ செல்லம்....! சொல்லிவிட்டுத் தன் கட்டிலில் வந்து மீண்டும் சரிந்தாள். ஆனால் அந்தக் கனவில் சிரித்தபடி வந்தவன் இரத்தம் கலந்து ஆற்றோடு அடிபட்டுப் போனது மனசுக்குள் ஏதோ அந்தரிப்பாயிருந்தது. திரும்ப நித்திரை வர மறுத்தது. மனசுக்குள் ஏதோ அந்தரிப்பாயிருந்தது.

2009இன் பின்னர் அனேகமான கனவுகள் இப்படித்தான். காணாமற்போனோர் முகங்களும் கடைசியாய் சிரித்தபடி விடை தந்து போனோருமே நிறையும் கனவுகளாகியிருக்கிறது. அவர்கள் பிரிவும் , துயரங்களும் கனவுகளையும் நிம்மதி யாய் விடாமல் துரத்திக் கொண்டிருக்கிறது.

இன்றைய கனவில் வந்தவனும் 2009இல் காணமற்போனவன். இந்த 5 வருடத்தில் ஒருமுறையும் கனவில் வராதவன் இன்று வந்து போயிருக்கிறான். சிலவேளை எங்கேனும் இருப்பானோ? கைபேசித் திரையைத் தட்டி இணையத்தில் உலாவத் தொடங்கினாள். அவனது பெயரை கூகிளில் அடித்துப் பார்த்தாள் ஏதாவது செய்திகள் அண்மையில் வந்ததோ என தேடினாள்.

அப்படியேதும் இருக்கவில்லை. ஆனால் நினைவுகளில் இருந்து மறந்துபோனவன் ஏன் இன்று கனவில் வந்து சில்லறைக்காசுகளை அவளது மகனுக்காக கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான் பெரும் குழப்பமாகவே இருந்தது. கனவுகளுக்கு காரணங்கள் ஆய்வுகள் ஆயிரம் சொல்லப்பட்டாலும் இதுவரை கனவுகள் பற்றி எவரும் சரியான ஆய்வை காணாமல் இருப்பது பற்றி அந்த நேரம் யோசித்தாள்.

இப்போது கனவுகளை யாருடனும் பகிர்ந்து கொள்வதில்லை. கனவுகளைப் பகிர்ந்து கொண்டால் அது பலிக்காதென்று சொல்வதை நம்பி பலமுறை தனது கனவுகளை பகிரப் போய் எல்லோரிடமும் நன்றாக வேண்டிக் கட்டியிருக்கிறாள்.

ஒண்டையே ஒரே நினைச்சுக் கொண்டிருந்தால் கனவும் அதுதானாய் வரும்...! எல்லோரும் சொல்வார்கள். அதனால் கனவு- களை யாரோடும் பகிர்ந்துகொள்ளாமல் அந்தக் கனவிலிருந்து விடுபடும் வரையும் அமைதியின்றி அலைவாள். மௌனமாய் நினைவுகளோடு கரைதலும் பின்னர் மீள எழுதலுமே வழமையாகிப்போனது.

அவனும் அவளும் ஒரே ஊரில் பிறந்திருந்தார்கள். அவன் அப்பா அவளது தாய்வழி உறவு. மாமா என்ற மதிப்போடு அவனது அப்பா அவள் வீட்டுக்கு வந்துபோகும் போதெல்லாம் அவனைப் பற்றி ஏதாவது சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டேயிருப்பார். அவன் க.பொ.த. சாதாரணதரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கணிதப் பிரிவில் உயர்தரத்தை ஆரம்பித்திருந்தான். அவனிலும் 2 வயதால் இளைய அவள் அவனது கடைசித் தங்கையுடன் படித்துக் கொண்டிருந்தாள்.

ஆண்களும் பெண்களும் கலந்து படித்த பாடசாலைக்கு அவள் ஆறாம் வகுப்பில் இணைந்தபோது அவனும்கூடவே வருவான். மதியம் பேய் உலவும் என்று நம்பிய புளியமரத்தடியை அவன் வரும் துணிவோடு பயமில்லாமல் கடந்துபோவாள். பனைவடலி களைத் தாண்டிப் போகும் போதெல்லாம் அவனே துணையாக வந்திருக்கிறான். பின்னர் அவனது கடைசித் தங்கையுடன் சேர்ந்து போகும்போது அவனும் கூடவே அவர்களோடு சயிக்கிளில் வருவான்.

அதிகம் கதைக்கவேண்டிய தேவைகள் இல்லாது போனாலும் அவன் தங்கைக்கு காவலனாய் வரும்போது அவளுக்கும் காவலாயே வருவான். வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் வயிரவர் கோவிலில் பஜனை பாடும் போதும் அவனும் வருவான். நெற்றியில் விபூதியும் சந்தனமும் வைத்து அமைதியாய் வைரவரை வழிபடுவான். சரஸ்வதி பூசைக்கு பேச்சுப்போட்டி , தேவார மனனப்போட்டி எல்லாவற்றிலும் அவனும் கலப்பான். ஆளாளுக்கு போட்டி போட்டு பரிசை வெல்வார்கள்.

எதுவென்று பிரித்தறிய முடியாத உறவு இணைப்பு. அவன் வீட்டுவளவில் காய்க்கும் நெல்லிக்காய், கொய்யாக்காயிலிருந்து எல்லாமே அவன் எல்லோருக்கும் பங்கிடு வான். சிறுவயது மகிழ்ச்சிக் காலங்களில் அவனோடு சேர்ந்து கிளிக்கோடு மறித்தது தொடக்கம் எட்டுப்பாத்தி, மாங்கோடு, கப்பல் கோடு வரையும் போட்டி எப்போதுமே அவனுடன் இருந்து கொண்டேயிருந்தது. உயர்தரம் கணித பிரிவில் படிக்க ஆரம்பித்து சில மாதங்களில் அவன் ஊரிலிருந்து காணாமற்போனான்.

(தொடரும்)



# புலிகளின் வதை முகாமில்

வதை 117

மணியம்

அந்த சுடுநீர்ப் போத்தலை வாங்கிய வருக்கு. அதைப் பார்த்ததும் அதிசயத்துக்கு மேல் அதிசயம்.

பின்னர்தான் தெரிந்தது. அந்தச் சுடுநீர்ப் போத்தல் யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளால் விரட்டப் பட்ட முஸ்லீம் மக்களில் ஒருவருக்குச் சொந்தமானது என்பதும். அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட அது. எப்படியோ இந்த மருந்தகத்துக்கு அதன் உரிமையாளர் அறிந்தோ. அறியாமலோ விற்பனைக்கு வந்துள்ளது என்பதும்.

இப்படி எத்தனை எத்தனையோ? இதில் வேதனையான விடயம் என்னவெனில். வடக்கிலிருந்து முஸ்லீம் மக்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டு 22 வருடங்கள் உருண்டோடிவிட்டன. முஸ்லீம் களை வெளியேற்றிய புலிகள் அழிக்கப்பட்டு மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட புலித்தலைமை "முஸ்லீம்களை வெளியேற்றி யது" தவறுதான் எனக் கூறியது போலவே. இன்னமும் புலம் பெயர் நாடுகளில் வாழும் புலிகளின் எச்சசொச்சங்களும் ஒப்புக்காக கூறிவருகிறார்கள். ஆனால் சந்தர்ப்பம் வரும்போது (அண்மையில் நடந்துமுடிந்த கிழக்கு மகாணத் தேர்தல் இதற்கு ஓர் உதாரணம்) இந்த புலிகளின் எச்சசொச்சங்கள் முஸ்லீம்கள் தொடர்பாக இனவாதம் கக்குவார்கள். மேலும் முஸ்லீம்களை வடக்கில் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றுவது குறித்து. அரசியல்வாதிகள் இன்னமும் மாநாடு கூட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. 2009இல் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெயர்ந்த மக்களில் 99 வீதத்தினரை அரசாங்கம் மீளக் குடியமர்த்திவிட்ட போதிலும். மீதி ஒரு வீதத்துக்காக கூப்பாடு போடும் 'தமிழீழ' அரசியல்வாதிகளும். ஐக்கிய நாடுகள் சபைவரை மகஜர்கொண்டு செல்லும் தமிழக அரசியல்வாதிகளும். சர்வதேச மனித உரிமை அமைப்புகளும். 22 வருடங்களாக அல்லலபடும் இந்த முஸ்லீம் மக்களுக்காக ஒரு சுட்டுவிரலைத் தன்னும் அசைக்காமல் மௌனம் காத்து வருகின்றன.

## அம்மா பச்சை அரிசியால் ஐ.தே.க அரசும் – புலிகளும் தமிழ் மக்களுக்கும் கைதிகளுக் கும் கொடுத்த தண்டனை!

வதை முகாமுக்கு வரும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. அதனால் இடநெருக்கடியும் ஏற்படத் தொடங்கியிருந்தது. புலிகளின் பார்வையில் சமூகத்தில் குற்றவாளிகளின் தொகை அதிகரித்துவருகின்றது என எண்ணிக்கொண்டோம். அதுவல்ல. புலிகள் எல்லோரை யும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள். அதுதான் தொகையான ஆட்கள் கைது செய்யப்படுவதற்குக் காரணம் எனச்சிலர் வாதிக்கவும் கூடும். எதுஎப்படியோ? இந்திய அமைதிப் படை காரணமாக காட்டுக்குள் ஓடி ஒளித்திருந்தவர்கள். நாட்டுக்குள் வந்தவுடன் தமது குணத்தைக் காட்டத்தானே செய்வார்கள்.

இந்த சனத்தொகை அதிகரிப் பால். வாசலைத் தவிர மற்றைய மூன்றுபக்கமும் 'ப' வடிவத்தில் கிழங்கு அடுக்கியதுபோல ஒரு வரை ஒருவர் உரசிக்கொண்டு தான் படுக்கவேண்டும். திறந்த மலசலகூடத்தின் வாசல் அருகி லும் சிலர் படுத்திருப்பர். அருகே யாராவது மலசலம் கழித்துக் கொண்டும் இருப்பார்கள். ஹோலின் நடுவே யாரும் படுக்கக்கூடாது. திரும்பிப்படுப்பதோ அல்லது சற்று ஆறுதலுக்காக கால்களை மடக்கிக் கொண்டு படுப்பதோ முடியாத காரியம்.

இதைப் பார்க்கும்போது. "ஒரு பக்கம் தமிழர்கள். மற்றைய பக்கங்கள் எல்லாம் கடல். இதற்குள் நான் எப்படி நீட்டி நிமிர்ந்து ஆசுவாசமாகப் படுக்க முடியும்?" என சிங்கள மன்னன் துட்டகாமினி தனது தாயாரான விகாரமாதேவிக்கு உரைத்த வாக்கியங்கள்தான் எனக்கு ஞாபகத்திற்கு வருவதுண்டு.

உணவு நிலைமையிலும் பெரிய மாற்றங்கள் இல்லை. எனினும் ஒரு சிறிய மாற்றம் மதிய உணவில் மட்டும் ஏற்பட்டிருந்தது. மூன்று வேளைகளும் சீனி போட்ட வெள்ளைப் பச்சை அரிசிப் பொங்கல் தருவதற்குப் பதிலாக. மதிய வேளைகளில் அந்த நேரத்தில் பொதுமக்களுக்கு அரசாங்கம் நிவாரணமாக வழங்கிவந்த 'அம்மா பச்சை' என்ற அரிசியில் சோறு வழங்கப் பட்டது. அந்தச் சோற்றுடன். அந்த நேரத்தில் சந்தையில் என்ன மலிவான மரக்கறி கிடைக்கிறதோ அதில் சிறிதளவு போட்டு குழம்பு என்றபெயரில் ஒரு நீர்த்திராவமும் வழங்கப்படும்.

அம்மா பச்சை அரிசியைப் பற்றித் தமிழ் பொதுமக்கள் நன்கறிவார்கள். அந்த அரிசியை அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறது என்று எம்மில் பலர் அடிக்கடி ஆராய்ந்து வந்திருக்கிறோம். ஆனால் இன்று வரை அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. ஏனெனில் அதில் காணப்படும் உமியும் புழுக்கூடுகளும் பிரசித்தமானவை. அதன் காரணமாகவே அரசாங்கம் தனக்கு எதிராகப் போராட்டம் நடாத்திவந்த தமிழ் மக்களுக்கென அந்த அரிசியை விசேடமாக வரவழைத்து வழங்கிக் கொண்டிருந்தது. அதை ஐ.தே.கவின் செல்லப் பிள்ளைகளான புலிகள் முதுசமாகப் பெற்று. எம்மைப் போன்ற கைதிகளுக்குப் வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

பொது மக்களில் ஓரளவு வசதியானவர்கள் அந்த அரிசியை ஒருபோதும் சமைத்துச் சாப்பிடுவது இல்லை. அது கிடைத்ததும். அருகிலுள்ள கடையொன்றில் மலிவு விலைக்குக் கொடுத்து காசாக்கிவிடுவார்கள். சிலர் அதைக் கஞ்சியாகக் காய்ச்சி தாம் வளர்க்கும் மாடு. ஆடுகளுக்கு உணவாகக் கொடுப்பதுண்டு. அதிலிருந்து வரும் சகிக்கமுடியாத மணம் காரணமாக. அவைகூட சிலவேளைகளில் அதை உண்ண மறுப்பதுண்டு. கஸ்டப் பட்ட சிலர் அந்த அரிசியை மில்லில் கொடுத்து தீட்டி அதிலுள்ள மணத்தை ஓரளவுக்குப் போக்கிவிட்டுச் சமைப்பதுண்டு. சிலர் கழுவிக் காயவைத்துச் சமைப்பதும் உண்டு.

இதில் உள்ள விடயம் என்ன வெனில். அந்த நாட்களில் தமிழ் பகுதிகளில் கடமையாற்றிய கிராம சேவையாளர்கள் உட்பட எல்லா அரசாங்க அதிகாரிகளும் புலிகளின் ஆணைப்படிதான் செயற்படவேண்டும். இதில் கிராம சேவையாளர்கள்தான் புலிகளுடன் மிக நெருக்கமாகச் செயற்படுபவர்கள். 'கள்ளன் கள்ளனுக்கு உதவி' என்பதற் கிணங்க புலிகளுக்குத் தேவை யான எல்லா வேலைகளையும் கிராம சேவையாளர்கள் செய்து கொடுப்பர். பதிலுக்கு கிராம சேவையாளர்கள் பொதுமக் களுக்குச் சேரவேண்டிய விட யங்களில் செய்யும் தில்லு முல்லுகளை புலிகள் கண்டும் காணாமல் இருப்பர். எல்லாக் கிராம சேவையாளர்களும் அப்படி இல்லையெனினும். பெரும்பாலானவர்களின் போக்கு அதுதான். அதனால் தான் கிராம சேவையாளர்கள் குறித்து அன்றும் சரி. இன்றும் சரி. பொதுமக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயம் இல்லை.

புலிகளின் அடுத்த கூட்டாளிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள். அவர்களில் பலரும்கூட பொதுமக்களின் மடிமீது கை வைப்பவர்கள்தான். 1970 - 77 காலகட்டத்தில் சிறீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சி நிலவிய காலத்தில் அத்தியாவ சியப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. எல்லாப் பொருட்களும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பங்கீட்டு அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்டன. அதைப் பயன்படுத்தி குபேரர் களான பல. பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இருக்கிறார்கள்.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

பா.ராகவன் 106

**யுத்தம்** என்று முடிவு செய்துவிட்டார்கள். அவ்வளவு தான். எகிப்து, லெபனான், ஜோர்டன், ஈராக் மற்றும் சிரியாவின் படைகள் ஒரு பக்கம் பாலஸ்தீனப் போராளிகளுக்கு ஆதரவாக நின்றன. எதிர்ப் பக்கம் இஸ்ரேல். அன்று பிறந்த இஸ்ரேல். அதற்கு முன் அவர்கள் தனியொரு தேசத்தை ஆண்டதில்லை. தனியொரு இராணுவத்தை வைத்துப் பயிற்சியளித்துப் பெரும் யுத்தங்களைச் சந்தித்ததுமில்லை. போர்க் கால நடவடிக்கைகள் என்றால் என்ன என்பதையே அந்தப் போரின் இறுதீயில் தான் அவர்கள் அறியப் போகிறார்கள்.



யோசித்துப் பாருங்கள். மே 14, 1948 அன்று யுத்தம் ஆரம்பிக்கிறது. அதுவும் ஒருநாள், ஒருவார, ஒருமாத கால யுத்தமல்ல. முழு ஒரு வருடத்தை விழுங்கப்போகிற யுத்தம்.

இத்தனை தேசங்கள் தம்மை ஆதரிப்பதால் எப்படியும் வெற்றி பெற்றுவிடுவோம் என்கிற நம்பிக்கை, பாலஸ்தீன் போராளிகளுக்கு இருந்தது. தமது குறைந்த போர்த்திறமை, சரியான தலைமை இல்லாமை, வியூகம் வகுக்கத் தெரியாதது போன்ற அத்தனை குறைகளுமே ஒரு பொருட்டில்லாமல் போகும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஒட்டு மொத்த அரபு சமுதாயமும் இஸ்ரேலுக்கு எதிராகத் திரண்டு நிற்கும்போது நேற்று முளைத்த சுண்டக்காய் தேசத்தால் என்ன செய்துவிட முடியும் என்று அவர்கள் நினைத்தார்கள். எப்படியாவது இஸ்ரேலை யுத்தத்தில் தோற்கடிப்பது, ஒரு யூதர் விடாமல் அத்தனைபேரையும் பாலஸ்தீனைவிட்டு ஓட ஓட விரட்டுவது. இதுதான் அராபியர்களின் திட்டம்.

யூதர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தமது ஆண்டாண்டு காலக் கனவாக தனிநாடு என்பதை அடைந்துவிட்டிருந்த மகிழ்ச்சி மேலோங்கி இருந்ததால் யுத்தம் குறித்த பயம் அவர்களிடையே பெரிதாக இல்லை. ஜெயித்தாலும் சரி, தோற்றாலும் சரி, தமது தேசம் நமக்கு உண்டு என்கிற எண்ணம்தான் அவர்களிடம் இருந்தது. ஒருவேளை யுத்தத்தில் தோற்க நேரிட்டால் இஸ்ரேலின் சில பகுதிகளை இழக்க நேரிடலாம். இருக்கவே இருக்கிறது ஐ.நா சபை. நீங்கள் வகுத்தளித்த நிலத்தை அபகரித்துவிட்டார்கள்; திரும்ப வாங்கிக் கொடுங்கள் என்று கேட்கவும் அவர்கள் சித்தமாக இருந்தார்கள்.

இதென்ன குழந்தைத்தனமாக இருக்கிறதே என்று தோன்றலாம். உண்மை அது தான். இஸ்ரேலின் முதல் பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்ற டேவிட் பென்குரியனிடம் அவரது அமைச்சரவை சகா ஒருத்தர் இதே மாதிரியே சொல்லியிருக்கிறார்.

ஆயிற்று. மே மாதம் 15ஆம் திகதி யுத்தம் தொடங்கி விட்டது. முதல் குண்டு டெல் அவிவ் வநகரில் வந்து விழும்போது மணி காலை 9.15 வீசியது ஒரு பாலஸ்தீன் போராளி. எங்கிருந்து அவர்கள் ஊருக்குள் ஊடுருவி இருக்கிறார்கள் என்பதே முதலில் இஸ்ரேல் இராணுவத்துக்குப் புரியவில்லை. தெற்கிலிருந்து எகிப்துப் படைகள் முன்னேறி வந்துகொண்டிருந்தன. வடக்கிலிருந்து லெபனான் மற்றும் சிரியாவின் படைகள். மேற்கில் டிரான்ஸ் ஜோர்டன் இராணுவம் வடமேற்கிலிருந்து ஈராக் இராணுவம். கிழக்குப் பக்கம் பற்றிக் கவலையே இல்லை; மத்திய தரைக் கடலைக் காட்டிலும் எந்த இராணுவத்தின் பலம் அதிகமாக இருந்துவிட முடியும்?

இஸ்ரேல் முதலில் தற்காப்பு நடவடிக்கைகளாகத்தான் மேற்கொண்டன. முதலில் தனது எல்லைகளைப் பாதுகாக்கும் விஷயத்தில் மிகத்தீவிரமாகக் கவனம் செலுத்தினார்கள். இராணுவத்தின் ஒரு பகுதியைப் பிரித்து எல்லைக் காவலுக்கு அனுப்பிவிட்டு இன்னொரு பகுதியை டெல் அவிவிலேயே வைத்துக்கொண்டார்கள். மூன்றாவதாக ஒரு பிரிவைத் தான் தாக்குதலுக்குப் பயன்படுத்தினார்கள்.

இந்த யுத்தத்தில் இஸ்ரேல் எப்படிச் செயற்படுகிறது என்பது மிக முக்கியமான விஷயம். அமெரிக்கா முதல் பிரிட்டன்வரை பிரான்ஸ் முதல் பெல்ஜியம்வரை அத்தனை தேசங்களும் அதைத்தான் கவனித்துக் கொண்டிருந்தன. எந்தச் சமயத்திலும் யார் வேண்டுமானாலும் உதவிக்கு வரலாம் அல்லது மௌன சாமியாராகவே இறுதிவரை கூட இருந்துவிடலாம்.

ஆனால், இஸ்ரேல் யுத்தத்தில் வெற்றிபெற்று விடுமானால் ஒட்டுமொத்த ஐரோப்பாவும் இஸ்ரேல் விஷயத்தில் சற்று அக்கறையுடன் நடந்துகொள்ளவேண்டிய சூழ்நிலை அவசியம் வரும். பொருட்படுத்தத்தக்க தேசமாகத் தன்னைக் காட்டிக் கொள்ள இந்த யுத்தம் ஒரு சந்தர்ப்பம் என்று நினைத்தார் பென்குரியன். இஸ்ரேல் இராணுவத்தின் வியூகம் அவரது இந்த எண்ணத்தைத் தான் பிரதிபலித்தது.

யுத்தம் சூடுபிடித்தது. இது புறங்களிலும் மிகக் கடுமையாகத் தாக்கத் தொடங்கினார்கள். பாலஸ்தீன் போராளிகளைப் பொறுத்தவரை அது வாழ்வா, சாவா யுத்தம். ஆகவே தமக்கு ஓரளவு நன்று தெரிந்த கெரில்லா போர் பயிற்சி முறையையே அவர்கள் அதிகமாகக் கையாண்டார்கள். எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில் தாக்குதல் நடத்துவது. கையில் இருப்பது ஒரேயொரு நாட்டு வெடிகுண்டே. ஆனாலும் குறைந்தது ஐம்பது பேரையாவது கொல்லும்வகையில் தான் அதனைப் பயன்படுத்த வேண்டுமென்பதில் அவர்கள் மிகவும் உறுதியுடன் இருந்தார்கள்.

உதவிக்குவந்த படை-களைப் பொறுத்தவரை எகிப்தின் இராணுவம் இருந்தவற்றுக்குள்ளேயே சற்று கட்டுக்கோப்பான இராணுவம் என்று சொல்லவேண்டும். இஸ்ரேல் பயந்ததும் அதற்குத்தான்.

குண்டுகளை வீணாக்காமல் மிகவும் சாமர்த்தியமாக அவர்கள் யுத்தம் செய்தார்கள். அரசுக் கட்டடங்களைத் தாக்குவது காவல் நிலையங்கள் இராணுவ முகாம்கள் மருத்துவமனைகள் கண்ணில் பட்டால் உடனே அவற்றை தாக்கி அழிப்பது என்பதே எகிப்து இராணுவத்தின் முதல் இலக்காக இருந்தது.

ஈராக் படையினர் கண்மூடித்தனமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். ஒரு பயிற்சி பெற்ற இராணுவம்போல் அல்லாமல் கலவரக்காரர்கள் போல் அவர்கள் தாக்குதலில் ஈடுபட விரும்பினார்கள். சிரியா, லெபனான், ஜோர்டன் படைகள் எப்படியாவது அடல் அவிவ் நகருக்குள் புகுந்து கைப்பற்றிவிட மிகவும் விரும்பி அதனை ஒட்டியே தமது வியூகத்தை வகுத்திருந்தன.

மறுபுறம் இஸ்ரேல் இராணுவத்தின் ஆட்பலம் குறைவாக இருந்தாலும் யுத்த நேர்த்தி அவர்களுக்கு மிக இயல்பாக வாய்த்திருந்தது. ஆயுதங்களைக் கையாளும் முறை, வியூகம் வகுப்பது, ஒற்றறிதல் போன்றவற்றில் இஸ்ரேலியர்கள் இயல்பான திறமை பெற்றிருந்தார்கள்.

இழப்புக்கள் அதிகமில்லாமல் பார்த்துக் கொள்வதிலேயே அவர்கள் குறியாக இருந்தார் கள். இதனைத் தற்காப்பு யுத்தம் என்று சொல்வார்கள். ஓரெல்லை வரை தற்காப்பு யுத்தம் செய்வது, சந்தர்ப்பம் கிடைக்குமானால் புகுந்து புறப்பட்டுவிடுவது.

(தொடரும்...)

# மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்

“காதல் ஒருவனைக் கைப்பிடித்தே, அவன் காரியம் யாவினும் கை கொடுத்து” என்று புரட்சிக் கவிஞர் பாரதியார் கூறிச்சென்றார். அவருடைய இந்த அருமை மொழியிலே பெண்களின் கடமைகள் யாவும் பொதிந்துள்ளன. தன்னுடைய கடமையை உணர்ந்து செயலாற்றிய பெண்கள் தங்களின் கணவரால் இறைவன் தங்களுக்கு அளித்த அரும்பெருங்கொடையாகக் கருதப்படுவார்கள். “தன்னுடைய கணவனின் நற்செய்கைகளில் உதவி செய்வதைவிட ஒரு பெண்ணிடம் தேவைப்படும் மேலான பண்பு ஒன்றுமில்லை” என்பது ஆங்கிலக் கவிஞர் மில்டனின் கூற்றாகும்.

லெனினுடைய மனைவி குரூப்ஸ்காயா தன் கணவனுக்குச் செய்த உதவிகள் கொஞ்சமா? அவருடைய இன்பதுன்பங்களில் பங்குபற்றி அவருடைய துன்ப வாழ்வை இன்பச் சுவனமாகவல்லவா ஆக்கினார் அவர்.

ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த இளம் ஹென்றிபோர்டை அக்கம் பக்கத்தவர்கள் எல்லாம் பைத்தியக்காரன் என்றகூறி நகையாடிய பொழுது அவருடைய மனைவிதான் அவரை அறிவாளி என்று கருதினாள். அவர் இரவில் வேலை செய்யும்பொழுது அவரருகில் நடுங்கும் குளிரில் கையில் விளக்கேற்றி அமைதியாக நின்று அவருக்கு உற்சாகம் அளித்தாள். அவருடைய ஆராய்ச்சி திடமாக வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எத்தனையோ தோல்விகள் ஏற்பட்ட போதிலும் அவளுக்கு குறையவில்லை. அவள் அளித்த உற்சாகமும், அவள் அவருடைய வெற்றியில் கொண்டிருந்த நம்பிக்கையுமே ஹென்றி போர்டை மூன்றாண்டு போராட்டத்துக்குப்பின் 1893ஆம் ஆண்டில் மோட்டார்க்காரைக் கண்டுபிடிக்கச் செய்தது.

ஹென்றிபோர்ட் தன்னுடைய மனைவி தம்முடைய வாழ்வின் துவக்கத்தில் தமக்கு ஆற்றிய உதவிகளையும் காட்டிய உற்சாகத்தையும் என்றுமே மறக்கவில்லை. அவளை எப்பொழுதும் 'நம்பிக்கையாளர்' என்றே அவர் அழைத்தார். “அடுத்த தடவை நீங்கள் இவ்வுலகில் பிறவி எடுப்பதாக இருந்தால் எவ்வாறு இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள்” என்று ஒருவர் அவரிடம் வினவியபொழுது, 'என் மனைவி என்னுடன் இருக்கும்வரையில் நான் எப்பொழுதும் எதைப் பற்றியும் கவலைப்படப் போவதில்லை” என்று கூறினார்.

ஹென்றிபோர்ட் தம்முடைய ஆராய்ச்சியில் தோல்விக்கு மேல் தோல்வியைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், “மனம் சோர்வுறாதீர்கள்! நீங்கள் நிச்சயம் வெற்றிபெறுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்கான தகுதிகளை நீங்கள் பெற்றுள்ளீர்கள்” எனக்கூறி அவருடைய நல்ல தன்மைகளைப் புகழ்ந்து அவருக்கு அளவற்ற உற்சாகமளித்துவந்த அவருடைய மனைவி அவர் வெற்றிக்குமேல் வெற்றியைப் பெற்றுவந்தபோது மகிழ்ச்சிப்போதையில் மூழ்கி மயங்கி இருந்து விடல்லை. அப்பொழுதும் அவருக்குப் புதுமாதிரியான ஊக்கமும், உற்சாகமும் வழங்கினாள்.

ஏனெனில், வெற்றியில் வீற்றிருப்பது வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒப்பாகுமல்லவா? எனவேதான் பெர்னார்ட்ஷாவும், “நான் வெற்றியைக் கண்டு அஞ்சுகிறேன். ஆண் சிலந்திப் பூச்சி தன் காதலில் வெற்றிபெற்ற அடுத்தகணமே தான் காதல்கொண்ட சிலந்திப்பூச்சியால் கொல்லப்படுவது போன்று ஒருவன் தான் வாழ்க்கையில் வெற்றி பெற்றுவிட்டதாகவே எண்ணுவது தன்னுடைய உலக வாழ்க்கையை முடித்துவிட்டதாகவே பொருள்படும். எனவே நான் என்னுடைய குறிக்கோளை எனக்குப் பின்னால் வைத்தல்ல. எனக்கு முன்னால் வைத்து எப்பொழுது பார்த்தாலும் விடாது முன்னேறிக் கொண்டிருப்பதையே விரும்புகிறேன்” என்று கூறினார்.

“ஒவ்வொரு மனிதனும் உண்மையில் இரண்டு மனிதர்களாகவே இருக்கிறான். அவன் இப்பொழுது வாழக்கூடிய மனிதனாகவும் வருங்காலத்தில் வாழவிரும்பும் மனிதர்களாகவும் இருக்கிறான்” என்று செஸ்டர்ரிரப்பு கூறினார். ஆம். ஒவ்வொரு மனிதனும் தான் இருந்தபடியே இருக்காது தன்னுடைய வாழ்க்கையில் முன்னேறவே விரும்புகிறான். அந்த அவனுடைய விருப்பத்திற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து அவன் வருங்காலத்தில் எவ்விதம் ஆகவேண்டுமென்று விரும்புகின்றானோ அவ்விதம் அவனை ஆக்குவது அவனுடைய மனைவியின் தலையாய கடமையாகும்.

ஒவ்வொரு மனிதனும் தான் பிறரால் புகழப்படவேண்டும் என்றே விரும்புகிறான். அதுவும் அவன் தன் மனைவியால் புகழப்படின் அவனுடைய மகிழ்ச்சியும் உற்சாகமும் பன்மடங்கு அதிகமாகிறது.

(வரங்கள் தொடரும்...)



சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?



### பொதுபல சேனாவை ஒரு பயங்கரவாத அமைப்பென்று ட்ராக் பிரகடனம்

ஒரு தீவிரத் தன்மையுடன் வக்கிரமான எதிர்ப்பைக் காட்டிக்கொண்டு, கூச்சலிட்டு சுதந்திரமாக நடமாடித் திரியும் ஒரு அமைப்பு என்றரீதியில் பொதுபல சேனாவை ஒரு பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தியுள்ளது ட்ராக் எனும் ஒரு சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம்.

வன்முறைகளில் ஈடுபடுகின்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளை உற்றுக் கவனித்து அவற்றைப் பயங்கரவாத அமைப்பா என ஆராய்கின்ற பயங்கரவாத ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு கூட்டமைப்பு என்கின்ற (TRAC) ஒரு அமைப்பே ட்ராக் எனப்படுகின்றது.

புத்த மதத்தைப் பாதுகாக்கவேண்டும் என்றநோக்கிலும், அடுத்த தலைமுறையினருக்கு இதனைப் போஷித்துப் பாதுகாத்துக் கையளிக்கவேண்டும் என்றநோக்கிலும் பொதுபலசேனா செயற்படுவதாக TRAC கூறியுள்ளது.

பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்துவதற்கான அளவுகோல்கள் என்னவென்று TRAC அமைப்பினை உலகெங்கிலுமுள்ளவர்கள் ஈமெயில் வழியாகத் தொடர்புகொண்டு எழுப்பும் கேள்விகளுக்கு அந்த அமைப்பின் ஆசிரியபீடப் பணிப்பாளர் வெரியன்கான் பதிலளித்துள்ளார்.

TRAC அமைப்பிடம் இது பற்றித் தீர்மானம் எடுக்கும்படியாக பல அளவுகோல்கள் இருக்கின்றன. குழுக்களினது நடத்தைகள், நடவடிக்கைகள், அவர்கள் வெளியிடும் அறிக்கைகள், என்று பல அளவுகோல்கள் உள்ளன. உடனடியாக உலகில் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் பற்றி ஆராய டிராக் இடம் உலகளவில் ஒரு தனியார் டிஜிட்டல் புலனாய்வு களஞ்சியமும், ஆய்வாளர்களும், ஆராய்ச்சி அடிப்படையும் இருக்கிறது." என்கிறார் வெரியன்கான்.

உலகம் முழுவதும் எழும் புதிய குழுக்களின் செயற்பாட்டை கண்காணிக்க ஒரு மைய ஆசிரியர்கள் குழு உள்ளது. பயங்கரவாத குழுக்கள் உருவாக்க முயற்சிக்கும் நடவடிக்கைகள் அவர்களது சுயவிவரம், நெறிமுறைகள் உருவாக்கம் குறித்து ஆராய்ந்து அந்தக் குழுக்களைப்பற்றித் தீர்மானிக்க எம்மிடம் ஒரு நீண்ட அளவுகோல் பட்டியல் உண்டு. டிராக் ஒரு பயங்கரவாதக் குழுவை தானாகவே முத்திரை குத்தி உருவாக்குவதில்லை. அவர்களது நடவடிக்கைகளை அளவிட்டு அறிக்கையிடுவது மட்டும்தான் என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கையின் கொழும்பைத் தளமாக கொண்ட தீவிரவாத சிங்கள புத்த தேசியவாத அமைப்பு மேலும் தங்கள், அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை பெறுகிறது மற்றும் வெளித் தோற்றத்தில் அரசு எதிர்ப்பு மாதிரிக் காட்டிக் கொள்கின்றது என்றும் அவர் சொன்னார்.

பொதுபலசேனா ஒரு பயங்கரவாத அமைப்பு என்று முத்திரை குத்தப்பட்ட அடிப்படையைப் பற்றி அவரிடம் கேட்டபோது, "சந்தையில் ஹலால் உணவு விற்பனை, மசூதிகள், தேவாலயங்கள், போன்றவற்றிற்கு எதிரான வன்முறைச் செயல்கள், மற்ற மதங்களை நோக்கிய வெறுப்புணர்வுகளில் பொதுபலசேனாவின் உறுப்பினர்கள் இணைந்து ஈடுபடுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதால் பொது பலசேனாவின் சுயவிவரக் கோவையில் அவர்களைப் பயங்கரவாத அமைப்பு என்று முத்திரை குத்துவதில் தயங்க வேண்டிய அவசியமில்லை, என்றார் கான்.

எனினும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் அந்த அமைப்புக்கள் தொடர்ந்து இடம்பிடிப்பதில் மாற்றங்கள் உண்டு என்றும் கான் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் முன்னணி (PA), ஐக்கிய தேசிய கட்சி (UNP) மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியவையும் டிராக் இன் இணையத்தளத்தில் பயங்கரவாத அமைப்புக்கள் என பட்டியல் இடப்பட்டுள்ளது.

செயலற்ற குழுக்கள் என காணக் கூடியதை வலைத்தளத்தைப் பார்ப்பவர்கள் அடையாளப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு அடையாளப்படுத்தியவர்கள் வலைத்தளத்தில் வேறு பலவற்றைப் பார்ப்பவர்கள் மாத்திரமே. அவர்கள் TRAC வலைத்தளத்தின் சந்தாதாரர்கள் அல்ல என்றும் அவர் சொன்னார்.

சந்தாதாரர்கள் நலனுக்காகவும் தகவல் மற்றும் நிறுவன நினைவக உறுதிப்பாட்டுக்காகவும் டிராக், ஒரு சுயவிபரத்தை ஒருபோதும் நீக்குவதில்லை என்றாரவர்.

குழுக்களின் நடவடிக்கைகள் மீது புகார் என செல்லும்போது, டிராக் மட்டுமே இதுவரை பொது பலசேனாவை பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தியிருக்கின்றது.

பல இலங்கையர்கள் பொதுபல சேனாவுக்கெதிராகக் கருத்தைப் பதிவு செய்து குரல் கொடுத்ததுதான் அந்த அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாக பதிவுசெய்ய வழிவகுத்தது.

> **தொடர் 09**
>
> **"சந்தையில் ஹலால் உணவு விற்பனை, மசூதிகள், தேவாலயங்கள், போன்றவற்றிற்கு எதிரான வன்முறைச் செயல்கள், மற்ற மதங்களை நோக்கிய வெறுப்புணர்வுகளில் பொது பலசேனாவின் உறுப்பினர்கள் இணைந்து ஈடுபடுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு போது மான ஆதாரங்கள் இருப்பதால் பொது பலசேனாவின் சுயவிவரக் கோவையில் அவர்களைப் பயங்கரவாத அமைப்பு என்று முத்திரை குத்துவதில் தயங்க வேண்டிய அவசியமில்லை" என்றார் வெரியன்கான்.**

இணையத்தள மனுவில் பலர் பொது பலசேனாவுக்கெதிராகக் கையெழுத்திட்டு இருந்தார்கள். இது அடையப்பெறுமா என்பது தெரிந்திருக்கவில்லை.

டிராக் மூலம் குழுக்கள் வகைப்படுத்தப்படுவது ஒரு சட்ட நடவடிக்கை அல்லது சட்ட அடிப்படை அமைக்க அல்ல. ஆனாலும் ட்ராக் பொதுபலசேனாவை ஒரு பயங்கரவாத அமைப்பாக பிரகடப் படுத்தியிருப்பது அந்த அமைப்புக்குத் தீங்கு விளைவித்ததா என்றால் அது கேள்வியாகவே உள்ளது, என்று கான் மேலும் கூறினார்.

### பாடசாலைக்குள் ஹிஜாப் தடையை எதிர்த்து வழக்கு!

கொழும்பு மாவட்டத்தில் உள்ள முக்கிய சிங்கள மொழிமூலப் பாடசாலைகளில் ஒன்றான ராஜகிரிய ஜனாதிபதி மகளிர் வித்தியாலயத்திற்குள் முஸ்லிம் தாய்மார் இஸ்லாமிய பாரம்பரிய ஹிஜாப் உடையணிந்து பிரவேசிப்பதை தடை செய்வதற்கு பாடசாலையின் அதிபர் தீர்மானித்துள்ளார்.

இந்தத் தடையை எதிர்த்து முஸ்லிம் தாய் ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் ஏழாம் தரத்தில் கல்வி கற்கும் முஸ்லிம் மாணவி பாரம்பரிய பஞ்சாபி உடை அணிந்து வருவதற்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்துவருகின்றது.

இந்த சூழ்நிலையிலேயே முஸ்லிம் தாய் ஒருவரும் பாடசாலைக்குள் ஹிஜாப் உடை அணிந்து வருவதற்கு அதிபர் தடைவிதித்துள்ளது பற்றி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

வித்தியாலத்தில் நடைபெற்ற பெற்றோர்கள் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக சென்றபோது, ஹிஜாப் உடை அணிந்திருந்த காரணத்தினால் தன்னை பாடசாலைக்குள் நுழைய அதிபர் அனுமதிக்கவில்லை என்று மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தடையை பிறப்பிப்பதற்கு பாடசாலை அதிபருக்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தடைக்கான காரணத்தை தெரியப்படுத்த குறித்த பாடசாலை அதிபர் தவறியுள்ளதாகத் தெரிவித்த மனுதாரர் சார்பான வழக்கறிஞர் எம்.எம். சுஹைர், கொழும்பு மாவட்டத்தில் எந்தவொரு சிங்கள மொழி மூலப் பாடசாலையிலும் இவ்வாறான தடை இல்லை என்றும் கூறியுள்ளார்.

இந்த மனுவை எதிர்வரும் 19ஆம் திகதி விசாரணைக்கு அழைப்பதற்கு உத்தரவிட்ட நீதிபதிகள், அன்றைய தினம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு பாடசாலை அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

பஞ்சாபி உடை தடைசெய்யப்பட்டமை க்கு எதிரான வழக்கின்போது, மாணவர்களிடையே இனவாதத்தை தூண்டும் நோக்கில் அந்த மனு முன்னெடுக்கப் படுவதாக பாடசாலை அபிவிருத்திக் குழுவினைச் சேர்ந்த சித்ரானந்த கமகே குற்றஞ்சாட்டினார்.

இஸ்லாமிய இனவாத குழுக்கள் இதன் பின்னணியில் இருப்பதாகவும் அவர் சாடியுள்ளார்.

### தம்புள்ளை காளி கோயிலுக்கும் பள்ளிவாசலுக்கும் மாற்றுக் காணி – பிரதமர் உறுதி

தம்புள்ளை கோயில் மற்றும் பள்ளிவாசலை பொருத்தமான இடத்தில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கைகள்

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன உறுதியளித்துள்ளார்.

கம்பளை தொழுவையில் அமைந்துள்ள பிரதமரின் இல்லத்தில் முஸ்லிம் குழுவொன்று பிரதமரை மே 8ஆம் திகதி சந்தித்து தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடிய போது பிரதமர் இந்த உறுதிமொழியை அளித்தார்.

சுகாதார வைத்திய பணிப்பாளர் என்.எம்.எம். இக்பாலின் ஏற்பாட்டின்பேரில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைவர் கே.என்.தீன் பேரவையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஸ்மா ஆப்தீன், முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம்.அமீன் மடவளை வை.எம்.எம்.ஏ தலைவர் எம்.எச்.எம். றிஸ்மி ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் பிரதமரைச் சந்தித்து தம்புள்ளை பள்ளிவாசல் தொடர்பான தற்போதைய நிலவரங்களை எடுத்துக் கூறினர்.

தம்புள்ளை பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகள் மற்றும் புனிதபூமி ஆகிய காரணங்களின் அடிப்படையில் அப்பகுதி முஸ்லிம்கள் பள்ளிவாசலை மற்றுமொரு இடத்தில் அமைத்துக் கொள்ள விரும்புகின்றனர் என்ற விடயமும் பிரதமரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

தம்புள்ளை பள்ளிவாசலை மட்டுமன்றி அங்குள்ள காளி கோயிலையும் பொருத்தமானதும் மக்கள் விரும்பக் கூடியதுமான இடத்தில் அமைக்க வேண்டும். எனவே இவற்றை அமைப்பதற்கான காணிகள் தொடர்பாக ஆராயுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

நாட்டில் சகல இனத்தவர்களினதும் சமயரீதியான உரிமையை உறுதிப் படுத்துவது அவசியம் என்ற அடிப்படையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியும் தம்புள்ளை பள்ளிவாசல் விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைப்பதாகவும் பிரதமர் சொன்னார்.

### இந்து மக்கள், பௌத்தர்களுடன் இணைந்து சமாதான மாக வாழ இந்தியப் பிரதமர் உதவவேண்டும். யாழில் ஊர்வலம்!

யாழ்ப்பாணத்தில் மதமாற்றத்தைத் தடைசெய்யக் கோரியும், இந்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க, புதிய இந்தியப் பிரதமர் உதவவேண்டும் எனக்கோரியும் ஊர்வலமொன்று நடத்தப்பட்டது.

இலங்கை இந்திய இந்து மக்கள் நட்புறவுக் கழகமும், இந்துசமயப் பேரவையும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்ததாக அதன் ஏற்பாட்டாளர்களில் ஒருவராகிய யோகராஜா துஸ்யந்தன் கூறினார்.

நல்லூர் கோவிலில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் பலாலி வீதியில் உள்ள இந்துசமயப் பேரவைகளாக ஆலயத்தில் சென்று முடிவடைந்தது.

அங்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நல்லாசி வேண்டியும், வாழ்த்து தெரிவித்தும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

"இந்து மக்கள் பௌத்தர்களுடன் இணைந்து சமாதானமாக வாழ்வதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி உதவி செய்யவேண்டும். இதன்மூலம் இனமத வேறுபாடுகளின்றி இலங்கையில் அனைத்து மக்களும் சகவாழ்வு வாழமுடியும் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பாகும்.

கடந்த காலங்களில் இந்து மக்கள் எல்லாவிதங்களிலும் மிகமோசமான சூழ்நிலைகளிலே வாழ்ந்திருந்தார்கள். கடந்தகால வடுக்கள் இன்னுமே அவர்களை ஒரு மீளெழுச்சிக்கு உள்ளாக்கவில்லை.

நரேந்திர மோடி அவர்கள் எப்பொழுதுமே தன்னை ஒரு இந்துவாக அடையாளப்படுத்திக் கொள்கின்றவராதலால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒரு சரியான தலைமைத்துவமுள்ளவராக நாங்கள் அவரைப் பார்க்கின்றோம். அதற்காகவே, இந்த ஊர்வலமும், நல்லாசி வேண்டுவதற்கான வழிபாடும் செய்யப்பட்டதாகவும் துஸ்யந்தன் குறிப்பிட்டார்.

(தொடரும்)

# ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தேர்தல் முடிவுகள்



ஒரு அலசல்

தொகுப்பு: வேணு கிருஷ்ண

### ஐரோப்பிய ஒன்றியம் : அறிமுகம்

ஐரோப்பிய ஒன்றியம் (European Union அல்லது EU) என்பது தற்பொழுது 28 உறுப்பு நாடுகளைக் கொண்ட, நாடு தாண்டிய அரசிடை அமைப்பாகும். 1992ல் நிறுவப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய உடன்பாட்டை (மாசுடிரிச் ஒப்பந்தம் என்றும் பரவலாக அறியப்படுகிறது) அடுத்து இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

எனினும், 1950கள் முதற்கொண்டே இயங்கி வந்த பல்வேறு முன்னோடி அமைப்புகளின் செயற்பாடுகள், ஐரோப்பிய ஒன்றியத்தை ஒத்திருந்தன. ஏறத்தாழ 500 மில்லியன் குடிமக்களைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உலகத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30% ஐ உருவாக்குகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம், தனது உறுப்பு நாடுகளிடையே மக்கள், பொருட்கள், சேவைகள், முதலீடு ஆகியவற்றின் கட்டற்ற நகர்வுகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் பொதுவான சட்டங்களைக் கொண்ட ஒற்றைச் சந்தையை உருவாக்கியுள்ளது. இது பொதுவான வணிகக் கொள்கை, வேளாண்மை, மீன்பிடிக்கொள்கைகள் என்பவற்றுடன் பிரதேச வளர்ச்சிக் கொள்கையையும் பேணிவருகின்றது. பதினைந்து உறுப்பு நாடுகள் யூரோ எனப்படும் பொதுவான நாணய முறையையும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இது ஒரு வெளிநாட்டலுவல்கள் கொள்கையொன்றையும் உருவாக்கியுள்ள துடன், உலக வணிக அமைப்பு, ஜி8 உச்சி மாநாடு, ஐக்கிய நாடுகள் அவை என்பவற்றிலும் சார்பாண்மை (representation) கொண்டுள்ளது. 21 ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 'நேட்டோ' (NATO) அமைப்பிலும் உறுப்புநாடுகளாக உள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உறுப்பு நாடுகளின் நீதியமைப்பு, உள்நாட்டு அலுவல்கள் ஆகியவற்றிலும் பங்களிப்புகள் உண்டு. செஞ்சென் ஒப்பந்தத்தின் (Schengen Agre ement) கீழ் சில உறுப்பு நாடு களிடையேயான கடவுச்சீட்டுக் கட்டுப்பாட்டு முறையும் ஒழிக்கப்பட்டுள்ளது.

### ஐரோப்பியக் கூட்டமைப்பின் அங்கங்கள்

ஐரோப்பிய ஒன்றியம் 6 பிரதான பிரிவு-களைக் கொண்டது. (The European Union has 6 institutions)

(1) The European Parliament.

(2) The Council of the European Union.

(3)The European Commission.

(4)The European Central Bank.

(5)The Court of Justice of the European Union.

(6)The European Court of Auditors.

ஐரோப்பிய ஒன்றியம், முடிவுகளை எடுப் பதில் அரசுகளிடையான இணக்கப்பாடு, அரசுகளுக்கு அப்பாற்பட்டு இயங்கும் அமைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலப்புமுறையைக் கைக்கொள்கிறது.

### ஐரோப்பிய நாடாளுமன்றம் (The European Parliament)

இது ஐரோப்பியக் கூட்டமைப்பின் சட்டம் இயற்றும் அமைப்பாகும். இதன் அங்கத் தினர்கள் உறுப்பு நாடுகளின் குடிமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்., ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தேர்தல் மக்களாட்சி முறைப்படி நடைபெறுகிறது. இதன் தலைமையகம் பிரான்சில் உள்ள ஸ்ட்ராஸ் பேர்க் (Strasburg) என்னுமிடத்தில் உள்ளது. தற்போது இதில் 736 உறுப்பினர் கள் உள்ளனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இது ஐரோப்பிய சட்டமன்றத்தின் பாதியளவு ஆகும்.

ஐரோப்பிய ஆணையத்தில் சமர்ப்பிக் கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல் அல்லது மாற்றங்கள் செய்வது நாடாளுமன்றத்தின் முக்கிய அதிகாரமாகும்.

### ஐரோப்பிய ஒன்றிய மன்றம் (The Council of the European Union)

ஐரோப்பிய ஒன்றிய மன்றம் சிலநேரங்களில் 'அமைச்சர்களின் கூட்டமைப்பு மன்றம்' என்று அழைக்கப்படுகிறது. இது ஐரோப்பியச் சட்டமன்றத்தின் மறுபாதியாகும். ஒவ்வொரு உறுப்பு நாடுகளில் இருந்தும் ஒருவர் இந்த அவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 2009ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி ஹெர்மன் வான் ரம்பே (Herman Van Rampay) என்பவர் இந்த அவையின் முதல் நிரந்தரத் தலை-வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2009ஆம் ஆண்டு, டிசம்பர் முதலாம் திகதி இவர் பதவியேற்றார்.

### ஐரோப்பிய ஆணையம் (The European Commission)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிர்வாகத் துறையாகச் செயற்படுவது ஐரோப்பிய ஆணையமாகும். மேலும் சட்டம் இயற்று வதற்குத் தூண்டுதலாக இருந்து ஐரோப்பியர் கூட்டமைப்பின் அன்றாடப் பணிகளைச் செய்கிறது. ஐரோப்பியக் கூட்டமைப்பின் சட்டங்களை வடிவமைத்து, அதனை ஐரோப்பிய நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிப்பது இதன் முதன்மைப் பணியாகும்.

**ஐரோப்பிய நீதிமன்றம்** (The Court of Justice of the European Union)

இது லக்சம்பேர்க் நகரில் அமைந்துள்ளது. இதில் 15 நீதிபதிகள் இடம்பெற்றுள்ளனர். ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளும் அனைத்து உடன்படிக்கைகளும், மன்றத்தின் சட்டங்களுக்கு உட்பட்டதா என்பதைத் தீர்மானிப்பது இந்நீதிமன்றமாகும். இம்மன் றத்தின் தீர்ப்புகளும், ஒன்றியத்தின் சட்டங்களும் உறுப்புநாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும்.

### ஐரோப்பிய கணக்கீட்டாளர் மன்றம் (The European Court of Auditors)

ஐரோப்பிய ஒன்றியத்தின் வரவு செலவுக் கணக்குகளை நிர்வகிப்பது ஐரோப்பியக் கணக்கீட்டாளர் மன்றமாகும். ஐரோப்பிய நாடாளுமன்றத்துடன் இணைந்து வளங்கள் மற்றும் நிதியைச் சிறந்த முறையில் பங்கீடு செய்கிறது.

### 2014 - ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் சாராம்சம்

சென்ற 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை வெளியான ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகள் ஐரோப்பிய நாடுகளில் பல, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிப் போவதை எடுத்துக்காட்டியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மேல் சந்தேகப்படும் அரசியல் வாதிகளினதும், தீவிரவாத வலதுசாரி களினதும் பக்கம் ஐரோப்பியர் சாய்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் காணப்படும் வேலை யில்லாத் திண்டாட்டமும், ஜனாதிபதி வி(க)றான்சுவா கோலாந்தின் தவறான அரசியல் அணுகுமுறையும், வலதுசாரிக் கட்சிகளின் தேசியக் கூட்டு முன்னணிக்கு (FN) 24.9 சதவீத வாக்குகளைப் பெற்றுத் தந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு தேசிய முன்னணி பெரும்பான்மை வாக்கு களைப் பெற்று ஆளும் கட்சியினரைவிட ஐரோப்பியப் பாராளுமன்றத் தேர்தலில் முன்னணியில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஐரோப்பியப் பாராளுமன்றம் விதித்திருந்த கடும் சிக்கன நடவடிக்கைகளையும், வேலையாட்களைக் குறைக்கும் திட்டத்தை யும் மாற்றியமைத்து, ஐரோப்பிய ஒன்றியத்தி லிருந்தும் பி(க)ரான்ஸ் நாடு வெளியேற உத வப் போவதாக அளித்திருந்த உறுதிமொழி, மாறீன் லீ பென் தலைமைதாங்கும் தேசிய முன்னணியினரை முன்னிலைக்குக் கொணர்ந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டவரின் குடியேற்றத்தைக் கடுமையாகக் குறைத்து, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்து வெளியேற நடவடிக்கை எடுக்கப்போவதாக உறுதியளித்த வலதுசாரிக் கட்சியான ஐக்கிய இராஜ்ஜிய சுதந்திரக் கட்சி 27 சத வீத வாக்குகளைப் பெற்று முதலிடத்திலும், முக்கிய எதிர்க்கட்சியான தொழிற்கட்சி 25 சதவீத வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும், டேவிட் கமரூனின் ஆளும் கட்சியான பழமைக் கட்சி 24 சதவீத வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திலும் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. டென்மார் க்கிலும் வலதுசாரிக் கட்சி 23 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் நிற்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தாலியில் முதன் மந்திரி மற்றியோ றென்ஸியின் சுதந்திரக் கட்சி 40 சதவீத வாக்குகளைப் பெற்று, ஐரோப்பாவின் பழமைக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட இருப்பினும், வலதுசாரிக் கட்சி அங்கும் 28 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள பல நாடு களில், மக்கள் பழமைக் கட்சிகளுக்கு அதிகமாக வாக்களித்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஜெர்மனிலும் பழமைக் கட்சியான CDU 30 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம், கடும் சிக்கன நடவடிக்கை, தொழில்நுட்பக் கல்வித் திட்டங்களில் திருப்தியற்ற நிலை, கடுமையான வெளி நாட்டவர்களின் குடியேற்றம், மிகவும் குறை ஊதியத்திற்கு கிழக்கு ஐரோப்பிய[illegible] வேலையில் அமர்த்தப்படும் நிலை போன்றவை ஐரோப்பிய மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில், ஒன்றிய அமைப்பின் மேல் நம்பிக்கை இழக்கச் செய்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### 2014 - ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத் தேர்தல் வெளிப்படுத்து உண்மைகள்

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரங்கள் இணைக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் அதிகரி கும், மக்களின் செல்வம் அதிகரிக்கும், கடன்களுக்கு வட்டி குறையும், விலைவாசி குறையும் என்ற பிரசாரங்களுடன் உருவாக் கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியமும், யூரோ ஒற்றை நாணய நாடுகளும் 20 ஆண்டுகளுக்குப் பிறகு கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன. ஏழைகளுக்கும் பணக்காரர் களுக்கும் இடையே ஏற்றத்தாழ்வுகள் பெரு மளவு அதிகரித்திருக்கின்றன. யூரோ ஒற்றை நாணயத்தை ஏற்றுக்கொண்ட நாடு[illegible]து அது ஒரு சுமையாக மாறியிருக்கிறது.

யூரோ பொது நாணயத்தை ஏற்றுக் கொள்ளாமலேயே உலகளாவிய முதலாளித் துவ நெருக்கடியில் சிக்கியிருக்கும் யு.கே (இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து), டென்மார்க், ஸ்வீடன் போன்ற நாடுகளிலும் சரி, யூரோவை ஏற்றுக்கொண்டு அல்லற்படும் பிரான்ஸ், இத்தாலி, கிரேக்கம் போன்ற நாடுகளிலும் சரி, யூரோவுக்குள் நுழைவதன்மூலம் பொருளாதார நெருக்கடி யிலிருந்து வெளிவரலாம் என்ற கனவு எதிர்மறையாகவே நடந்துவருகிறது.


இவர்களோடு ஒப்பீட்டளவில் ஏழை நாடு களாக இருக்கும் கிழக்கு ஐரோப்பிய மற்றும் முன்னாள் சோசலிச குடியரசுகளிலும் சரி, சமீபத்தில் நடந்த ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தின் 751 உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தலில் "ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கழட்டிக்கொண்டு தனி யாக வேண்டும்" என்ற கொள்கைகளை உடைய கட்சிகள் தமது செல்வாக்கை கணிசமாக அதிகரித்துக் கொண்டுள்ளன.

இங்கிலாந்தில் - ஐரோப்பாவிலிருந்து தனித்து செயற்படுவதை ஆதரிக்கும் 'யு.கே சுதந்திரக் கட்சி'யும், பிரான்சில் - யூரோ நாணய மண்டலத்தை நிராகரித்து, பிற நாட்டினர் பிரான்சுக்கு குடிபெயர்வதை எதிர்க்கும் 'தேசிய முன்னணி' கட்சியும் முதலிடம் பிடித்துள்ளன. பெரிய கட்சிகளான ஆளும், எதிர்க்கட்சிகள் 2-ஆம், 3-ம் இடங்களுக்கு தள்ளப்பட்டுள்ளன. நெதர்லாந்தில் இஸ்லாமிய எதிர்ப்பு, யூரோ எதிர்ப்பு கட்சி இரண்டாவது இடத்தை பிடித்திருக்க, டென்மார்க்கிலும், ஹங்கேரியிலும், ஸ்வீடனிலும் பின்லாந்திலும், புலம்பெயர் பிறநாட்டவரை எதிர்க்கும் வலதுசாரி கட்சிகள் தமது செல்வாக்கை வளர்த்துக்கொண்டு அதிக இடங்களை பிடித்திருக்கின்றன.

யு.கே சுதந்திரக் கட்சி என்பது 1993ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தை ஏற்படுத்தும் மாஸ்ட்ரிச்ட் ஒப்பந்தத்தை எதிர்க்கும் பல்வேறு கட்சி உறுப்பினர்களின் குழுவினரால் →

# இந்தியாவின் புதிய அரசும் கூட்டமைப்பின் நிலைப்பாடும்!

அளவெட்டி ப.உதயகுமார்



> சர்வதேசம் எங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று நம்புகின்றோம் என்று சொல்லிச் சொல்லியே வாக்குகளை சுருட்டி, உலக நாடுகளைச் சுற்றிவலம் வந்து வருமானங்களையும் பெற்றுவரும் கூட்டமைப்பு கூத்தாடிகள் இப்போது இந்தியாவின் புதிய அரசுடன் கைகோர்த்துச் செயற்படத் தயார் என்று அறிக்கை விட்டுள்ளனர். இது உண்மையில் கேலிக்குரிய விடயமாகும். ஏனென்றால், தமிழகத்தில் அறுதிப்பெரும்பான்மை பெற்ற அ.தி.மு.க.வையோ தேர்தல் கூட்டுவைத்துச் செயற்பட்ட தமிழக அரசியல்வாதிகளின் ஆதரவையோ மோடி எதிர்பார்க்கவில்லை.

இந்தியாவின் தேர்தல் களம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், பாரதிய ஜனதாக் கட்சி அறுதிப்பெரும்பான்மையுடன் வென்று புதிய பிரதமராக மோடி பதவியேற்றுக் கொண்டதுவரை இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கு மற்றும் தமிழர்கள் வாழும் பகுதிகள் எங்கும் மோடி அலைவீசுவதுடன், இலங்கைத் தமிழர் விடயங்களை இந்தியாவின் புதிய அரசு எப்படிக் கையாளப் போகின்றது! இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்கு என்ன?? என்பது பற்றியே பேச்சடிபடுகின்றது.

இந்தியாவின் புதிய அரசு இலங்கை விடயத்தில் அதிரடியாகச் செயற்படுமா? அல்லது அடக்கிவாசிக்குமா? என்பதும் எல்லோருடைய எதிர்பார்ப்பாகவும் உள்ளது!! இந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு நடந்து கொள்ளப்போகின்றது என்ன செய்யப் போகின்றது? என்பதும் எல்லோருடைய எதிர்பார்ப்பாகவும் உள்ளது!

சர்வதேசம் எங்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமென்று நம்புகின்றோம் என்று சொல்லிச் சொல்லியே வாக்குகளை சுருட்டி, உலக நாடுகளைச் சுற்றிவலம் வந்து வருமானங்களையும் பெற்றுவரும் கூட்டமைப்பு கூத்தாடிகள் இப்போது இந்தியாவின் புதிய அரசுடன் கைகோர்த்துச் செயற்படத் தயார் என்று அறிக்கைவிட்டுள்ளனர். இது உண்மையில் கேலிக்குரிய விடயமாகும்.

ஏனென்றால், தமிழகத்தில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற அ.தி.மு.க.வையோ தேர்தல் கூட்டுவைத்துச் செயற்பட்ட தமிழக அரசியல்வாதிகளின் ஆதரவையோ மோடி எதிர்பார்க்கவில்லை. தமிழக அரசு இந்தியாவின் ஒரு மாநிலம் என்ற வகையில்கூட மோடி எதிர்பார்க்காமல் இருக்கும்நிலையில் இந்திய அரசின் பிரதமரான மோடியின் எதிர்கால அரசியல் பயணத்துக்கு ஒத்துழைத்து செயற்படத் தயார் என்று கூட்டமைப்பு கூறிவருகின்றது.

அப்படியானால் இலங்கைத் தீவு இந்தியாவின் மாநிலமா? அல்லது வடக்கு கிழக்குப் பகுதிகள் இந்தியாவின் மாநிலமா? என்று கூட்டமைப்பினர் புதிய அரசுடன் இலங்கை விடயத்தில் கைகோர்த்துச் செயற்பட ஆதரவு தருமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மையாருக்கும் கூட்டமைப்பின் தலைவர் அழைப்பு அனுப்பியுள்ளார்.

எங்களுடைய பிரச்சினை தீரவேண்டும் என்று கூட்டமைப்பு உண்மையாக விரும்புமானால், அல்லது உண்மையான அக்கறை இருக்குமானால் யாருடைய காலையோ, கையையோ பிடித்துச் செயற்பட்டு வெற்றி காணவேண்டும்! ஆனால் இத்தகைய அக்கறையோ, அக்கறையுடன் அர்ப்பணிப்போ கூட்டமைப்பிடம் துளியேனும் இல்லை. அறிக்கைகள் விடுமளவுக்கு அக்கறை இருக்குமானால், புதிய பிரதமரின் பதவியேற்பு விழாவிலே பங்குபற்றக் கிடைத்த அரிய வாய்ப்பினை கூட்டமைப்பு பயன்படுத்தி இருக்கும். வாய்ப்பை நழுவ விடாமல் பதவியேற்பு விழாவிலே கலந்து கொண்டிருந்தால், தமிழர்களின் பிரச்சினையை அன்றே எடுத்துக்காட்டி உண்மைகளை உணர்த்தி இருக்கமுடியும். இலங்கை ஜனாதிபதியும் அங்கு பிரசன்னமாகி இருந்தநிலையில் ஆரம்பமே அமர்க்களமாக அமைந்திருக்கும். கிடைத்த பொன்னான வாய்ப்பினை வேண்டுமென்றே தட்டிக்களித்த கூட்டமைப்பினர் இப்போ தமிழக முதல்வரின் ஆதரவினைக் கேட்டு நிற்கின்றனர்.

கூட்டமைப்பின் தில்லுமுல்லு விளையாட்டினை சர்வதேசமும் புரிந்துகொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது! இவர்கள் காலம் கடந்து ஞானம்தேடும் வல்லமை உடையவர்கள் - கண் இருக்கும்போது பார்க்காமல் கண்கெட்ட பின்பு பார்க்கத் துடிக்கும் பாக்கியசாலிகள். இவர்களது ஒவ்வொரு நடவடிக்கைகளும் இதனையே உணர்த்திவருகின்றன.

இந்திய அரசின் ஏற்பாட்டில் இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோதே அதை எதிர்த்தார்கள். தனிநாடே தீர்வு, தமிழீழமே முடிவென்று போர்க்கொடி தூக்கினார்கள். அப்போதைய தீர்வுப் பொதியிலே எல்லாமே இருந்தது. அன்று இந்தியாவின் துணையுடன், 13ஆம் சட்ட விதியுடன் கூடிய தீர்ப்பை ஏற்றிருந்தால் இன்று முழுமையான அதிகாரப் பரவல் கொண்ட ஒரு சபையாக வடக்கு மாகாண சபை அமைந்திருக்கும்.

காணி, பொலிஸ் அதிகாரம் இருந்திருக்கும். என்றுமே பிரிக்கமுடியாத அலகாக வடக்கும் கிழக்கும் இணைந்து தனி அரசாக செயற்பட்டிருக்கும். தமிழர் அரசு நிறுவப்பட்டிருக்கும். முள்ளிவாய்க்கால் என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்காது! விதவைக்கும் அனாதைகளும் தோன்றி இருக்கமாட்டார்கள். எல்லாம் முடிந்து உயிரிழப்புகள் நடந்து - யுத்தம் தின்று ஏப்பமிட்ட பூமியாக உருவெடுக்க உருவேற்றியவர்கள் கூட்டமைப்புக் கோமாளிகள்தான்.

இத்தனையும் நடந்து சுமார் 27 வருடங்களின் பின்புதான் கூட்டமைப்புக்கு ஞானம்வந்து அம்மணமாகியுள்ள வெறும் மாகாண சபையைப் பிடித்து வைத்துள்ளனர். இப்போது செய்தவைகளை 27 வருடங்களுக்கு முன்பு செய்திருந்தால் இன்று வடக்கும் கிழக்கும் சொர்க்கபூமியாக இருந்திருக்கும்.

இதேவேளை சர்வதேசம், சர்வதேசம் என்று நம்பினார்கள் - கடைசியில் எந்த ஒரு சர்வதேசமும் இங்கு வரவில்லை. எல்லாம் முடிந்து இப்போது இந்திய அரசின் மோடி எல்லாமே அள்ளித் தருவார்?, வடக்கையும் கிழக்கையும் இணைத்துத் தருவார்!, தனிநாடாக அங்கீகரிப்பார்!

எனவே மோடியை நம்புவோம் என்று இந்தக் கூட்டமைப்பினர் கேடி வித்தை காட்டுகின்றார்கள்.

(21ஆம் பக்கம் பார்க்க...)



# பரபரப்பு நிறைந்த எகிப்திய விமான விபத்து!

-விறுவிறுப்புக்காக தருவது ரிஷி

கடந்த வாரம் விமானத்தின் கறுப்புப் பெட்டியை கடலின் அடியில் மீட்டதாக பார்த்தோம். அந்த கறுப்புப்பெட்டியில் பதிவாகியுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பித்தன.

அதன்பின், 2000-ம் ஆண்டு மார்ச் மாதம்தான் மீண்டும் தேடுதல் நடத்தி, விமானத்தின் 2ஆவது இஞ்சின் மற்றும் ஹொக்பிட் கன்ட்ரோல் பகுதிகளை வெளியே கொண்டுவந்தார்கள்.

பிளாக் பாக்ஸின் உரையாடல் ரிக்கார்டிங்கின் ஆரம்ப புலனாய்வில் இருந்து, விமானம் விபத்துக்கு உள்ளான நேரத்தில் இரு விமானிகள் ஹொக்பிட்டில் இருந்தது உறுதிசெய்யப்பட்டது. இதையடுத்துதான், புலனாய்வில் தொடங்கியது சிக்கல்.

இந்த விபத்து சர்வதேச கடல் பகுதியில் நடந்த காரணத்தால், அதன் விசாரணை உரிமை, எகிப்து நாட்டுக்கே இருந்தது. (விமானத்தின் உரிமையாளர்) ஆனால், எகிப்து, இந்த விசாரணைக்கான போதிய வசதிகள் தம்மிடம் இல்லை எனவும், அமெரிக்காவே புலனாய்வில் ஈடுபடலாம் எனவும் எழுத்துமூலம் தெரிவித்தது.

அமெரிக்கா தொடங்கிய புலனாய்வில், பிளாக் பாக்ஸில் பதிவாகியுள்ள இரு குரல்களின் உரிமையாளர்கள், விமானத்தின் அக்டிவ் கேப்டன், மற்றும் ரிலீ:ப் கோ-பைலட் என்பது தெளிவானது.

அதன்பின், (மற்றைய தரவுகள் கிடைப்பதற்கு முன்னரே) விமானிகளின் நடவடிக்கை காரணமாகவே விமானம் விபத்துக்கு உள்ளாகியிருக்கலாம் என அமெரிக்க புலனாய்வாளர்கள் கருதுவதாக செய்திகள் மீடியாக்களில் வெளியாகின. அதை எகிப்து அவ்வளவாக ரசிக்கவில்லை.

அடுத்து, விமானத்தின் டெக்னிகல் ரீதியான புலனாய்வு ஒருபுறமாக நடந்து கொண்டிருக்கும்போது, அதற்கு பாரலலாக இந்த இரு விமானிகள் தொடர்பான பின்னணிகளை ஆராயுமாறு, அமெரிக்க புலனாய்வுப்பிரிவு எ:ப்.பி.ஐ.யை கேட்டுக் கொண்டது, அமெரிக்க வான் விபத்து புலனாய்வுக் குழு.

விபத்துக்கான காரணம் தெளிவாகும் முன்னரே, இது ஒரு குற்றவியல் விசாரணையாக கருதப்பட்டு, எ:ப்.பி.ஐ. வசம் கொடுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தது, எகிப்திய அரசு. ஆனால், அதை கண்டு கொள்ளாமல், தகவல்களை சேகரிக்க தொடங்கியது எ:ப்.பி.ஐ.

**எ:ப்.பி.ஐ. சேகரித்த தகவல்களின் அடிப்படையில்:**

அக்டிவ் கேப்டன் அஹ்மத் எல்ஹபாஷிக்கு, விபத்து நடந்தபோது 57 வயது. முதன் முதலாக விமான நிறுவனப் பணியில் இணைந்த திகதி, 1963-ம் ஆண்டு, ஜூலை 13. மூன்று ரக விமானங்களை அது-வரை செலுத்தியிருக்கிறார். ஆரம்பத்தில் 707, பின்னர் 737, இறுதியாக 767. இவை அனைத்துமே போயிங் நிறுவன தயாரிப்பு விமானங்கள்.

விபத்துக்குமுன் இறுதியாக செய்யப்பட்ட மருத்துவப் பரிசோதனை, 1999ஆம் ஆண்டு ஒக்டோபர் 21ஆம் திகதி செய்யப்பட்டது (கவனிக்கவும், விபத்து நடப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு செய்யப்பட்டுள்ளது).

அந்த மருத்துவப் பரிசோதனையில் அவர் விமானங்களை செலுத்துவதற்கு மருத்துவ ரீதியில் தகுதியானவர் எனவும், கண் பார்வைக்கு கண்ணாடி அணிந்தபடி விமானம் செலுத்துவதை, அனுமதிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அவரது கடந்தகால மெடிக்கல் ஹிஸ்ட்ரியின்படி, முதுகுவலி இருந்தது. ஆனால், விமானம் செலுத்துவதை பாதிக்கும் அளவில் இல்லை.

விபத்துக்குள்ளான இஜிப்ட்-ஏர் விமானம் MS990-ஐ நியூயோர்க் - கெய்ரோ ரூட்டில் செலுத்திசெல்வதற்காக, நியூயோர்க் வந்திறங்கிய திகதி, ஒக்டோபர் 28, 1999. கெய்ரோவில் இருந்து நியூயோர்க்குக்கு வந்த இஜிப்ட்-ஏர் விமானம் MS989-ஐ செலுத்தி வந்திருந்தார்.

அதாவது, விபத்துக்குள்ளான விமானத்தை செலுத்துவதற்கு முன், 48 மணி நேரத்துக்கு மேற்பட்ட ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. (தொடரும்...)




## அமெரிக்க தேசியக் கொடி



அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தனிக்கொடி உண்டு. அமெரிக்க தேசியக் கொடியை வடிவமைத்துக் கொடுத்தவர் "பெட்ஸி ரோஸ்" என்ற பெண்மணி. இதற்கு நன்றி தெரிவிக்கும்வகையில், அவரது வீட்டை நினைவகமாக்கிப் பெருமைப்படுத்தி உள்ளார்கள்.




ஊழை வகுத்தவன் வகுத்துவிட்ட வகைப்படி அல்லாமல், கோடியாகப் பொருள் தொகுத்தவர்க்கும் அவற்றைத் துய்த்தல் என்பது அரிதாகும்.


### முதல் அனுபவம்!

மோட்டார் வண்டி புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலம் அது. கார்கள் அப்போதுதான் விற்பனைக்கு வந்து கொண்டிருந்தன. செல்வந்தர் ஒருவர் ஒரு காரை விலைக்கு வாங்கி, அந்தக் காரிலேயே ஊருக்குப் புறப்பட்டார்.

அப்படிச் சென்றவர், திரும்பவும் மோட்டார் வியாபாரியிடம் வந்தார். காரை விற்ற வியாபாரி திகைப்படைந்து, "என்னசெய்தி?" என்று ஆர்வத்துடன் கேட்டார்.

அந்த செல்வந்தர் வியாபாரியிடம், "இந்தக் காரிலே நான் பயணம் செய்யும்போது, வேலி, நடைபாதைகளெல்லாம் என்னை நோக்கியபடி ஓடிவருகின்றன. அடுத்து பாலங்கள் ஓடி வருகின்றன. இந்தக் கோளாறுகளே இல்லாத வேறு ஒரு கார் எனக்குக் கொடுங்கள். இது வேண்டவே வேண்டாம்" என்று கூறினார்.

## வரிசைக்குக் காரணம்!



சீராக ஒரே வரிசையில் சென்று கொண்டிருந்த சிற்றெறும்புகளில் கடைசியில் இருந்த எறும்பு தனக்கு முன்பு இருந்த எறும்பிடம் கேட்டது, "நாம் எங்கே போகிறோம்?" என்று.

"நம் நண்பர் ஒருவரைக் காணோம். அவரைத் தேடிச் செல்கிறோம்" என பதில் வந்தது. கேட்ட எறும்பு சிரித்தது.

"இப்படிப் போனால் என்ன உபயோகம்? வரிசையிலிருந்து விலகி தனித்தனியாகப் போய் தேடினால் கண்டுபிடித்துவிடலாமே?" என்றது.

"அதுதான் தவறு... தனியாகப் போனால் பல்வேறு திசைகளில் போவோம். எதிர்ப்படும் மனிதர்களின் கால், கை எதிலாவது படநேர்ந்தால் வெறும் சுண்டுவிரலால்கூட நம்மைக் கொன்றுவிடுவார்கள். பொதுவாக வரிசையாகப் போகிற எறும்புகளை மக்கள் எதுவும் செய்வதில்லை. தெரிந்துகொள்" என்று கூறியது.

கேள்வி கேட்ட எறும்பு,
எல்லோரும் வரிசையாகப் போகும் காரணத்தைப் புரிந்துகொண்டது.

## தெரிந்துகொள்ளுங்கள்

- ☆ புகழ்பெற்ற சாய்வு கோபுரமான பைசாகோபுரத்தின் முழுப்பெயர் டார்ரே பென்டென்டே டீ பைசா.
- ☆ பைசா கோபுரம் சலவைக் கற்களால் கட்டப்பட்டது.
- ☆ உலகிலேயே மிக அழகான துறைமுகம் ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி துறைமுகம்.
- ☆ கொரில்லா எனப்படும் மனிதக் குரங்கு குறட்டை விடுவதில்லை.
- ☆ தோலினால் சுவாசிக்கும் உயிரினம் மண்புழு.
- ☆ 35 முறை ஒஸ்கார் விருதுகளைப் பெற்றவர் வேல்ட் டிஸ்னி.
- ☆ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை முட்டை இடும் பறவை அல்பேர்ட்ராஸ்.
- ☆ வீட்டுப் பல்லிகள் 2 ஆண்டுகளே உயிர்வாழும்.

## ரொட்டியோ ரொட்டி!



ரோமானியர்கள் ஐரோப்பியரை வெற்றி கொள்ளும்வரை ரொட்டியைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது. 13ஆம் நூற்றாண்டில்தான் ரொட்டி செய்யும் முறை வழக்கத்திற்கு வந்தது.

பிரான்ஸ் நாட்டில் அரசர்கள், தங்களுக்குத் தனியான முறையிலும், மக்களுக்குத் தனியான முறையிலும் ரொட்டி தயார் செய்யப்படல் வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தனர்.

எட்டாவது ஹென்றி காலத்தில் ரொட்டி தயாரிப்பாளர்கள் மிகவும் கௌரவமாக நடத்தப்பட்டனர்.


அக்காலத்தில் பெண்கள்தான் ஒவ்வொரு வீட்டிற்கும் ரொட்டிகளை விற்றுவர அமர்த்தப்பட்டிருந்தார்கள். அப்பெண்களிடம் ஒரு டஜனுக்கு 13 ரொட்டிகளைக் கொடுத்து அனுப்பிவந்தார்கள். இப்போதும் ரொட்டிக் கடைக்காரர்களுக்கு ஒரு டஜன் என்பது பதின்மூன்றைத்தான் குறிக்கும்.

ஐரோப்பிய நாடுகளில் ரொட்டியை பா - ரொட்டி என்று அழைத்தனர். இது போர்த்துக்கீசிய வார்த்தை.

1955இல் பவேரியா நாட்டில் ரொட்டிக் கண்காட்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்கண்காட்சியில் ரொட்டி தயாரிப்பின் ஆரம்ப நிலை, படிப்படியான முன்னேற்றம் அது சம்பந்தமான புத்தகங்கள் அனைத்தையும் காட்சிக்கு வைத்திருக்கின்றனர்.


- ☆ ஒரு கைக்கடிகாரத்தில் 150 பாகங்கள் உள்ளன.
- ☆ கண்ணாடிவிரியன் பாம்பின் வயிற்றிலேயே முட்டை உடைந்து, குட்டியாக வெளிவரும்.
- ☆ எருக்கஞ்செடியின் கரி, வெடி மருந்துசெய்ய உபயோகிக்கப்படுகிறது.
- ☆ உடைகளில் ஜிப் வைத்து தைக்கும் வழக்கம் முதலில் அமெரிக்காவில் ஆரம்பித்தது.
- ☆ சோடியம் 20,000 ஆண்டுகள்வரை ஒளிவீசக் கூடியது. பின்னர் ஒளிமங்கி, ஈயமாக மாறிவிடும்.
- ☆ உலகிலுள்ள 32 நாடுகள் வெறும் தீவுகளாகும்.
- ☆ முயலின் வியர்வைச் சுரப்பிகள் அதன் காலடியில் உள்ளன.
- ☆ பறவைகளிலேயே அதிக நாள்கள்: (அதாவது 56 நாள்கள்) அடை காக்கும் பறவை: பால்மர்.
- ☆ முதிர்ந்த மூங்கிலை எரித்து கரியாக்கி பேட்டரி தயாரிப்பில் பயன்படுத்துகிறார்கள்.
- ☆ ஒரேயொரு ரயில் நிலையமும் ஒரேயொரு விமான நிலையமும் உள்ள மாநிலம் நாகலாந்து.
- ☆ பொப்கார்ன் எந்திரத்தை சார்லஸ் சி.கிரீட்டர்ஸ் என்பவர் 19ஆம் நூற்றாண்டி[ல்] கண்டுபிடித்தார்.

## விசில் பாடம்!



ஸ்பெயின் நாட்டின் ஆளுகைக்குட்பட்ட கேனரி தீவுகளில் விசில் அடிப்பது பற்றிய பாடமும் உண்டு. அதிலும் இது கட்டாயப் பாடங்களில் ஒன்று. இந்தப் பள்ளியில் பிறப்பு, இறப்பு, திருமணம், விருந்து, ஆபத்து, உதவி உள்ளிட்ட நல்லது கெட்டது அனைத்துக்குமான விசில் முறையைக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

எனவே விசில் ஒலிக்கும்போதே அது எந்த வகையைச் சார்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தப் பகுதியில் அதிகளவில் காணப்படும் ஆள்நடமாட்டமில்லாத பகுதிகளில் விவசாயம் செய்பவர்கள், பயணிகள் ஆகியோர் கண்ணுக்குத் தெரியாத தொலைதூரத்தில் இருப்பவர்களுக்குத் தங்களைத் தெரிவிக்க விசில் முறையையே பயன்படுத்துகிறார்கள்.



சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 23.06.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1048**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.


**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1046**

**எம்.ஆர்.முஹம்மட்,**
**ஹீரிமலுவ, றம்புக்கணை**

பரிசுக்குரியவர்: 1046

பாராட்டுக்குரியவர்கள்

01. எம்.என்.எம்.நாசில், லெயார்ட்ஸ் போர்ட்வே கொழும்பு -14.
02. யோ.சுபாசினி, சரசாலை தெற்கு, சரசாலை.
03. K. சர்மிகா, அளவெட்டி தெற்கு.
04. ம.சதுஷன், அன்புவழிபுரம், திருகோணமலை.
05. து.பானுப்பிரியா, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
07. கு.பவித்திரா, கோப்பாய் மத்தி, கோப்பாய்.
08. எம்.கபிஷன், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.




"காகிதத்தை முதலில் கண்டுபிடித்தவர் யார் என்றால், உடனே சீனாக்காரர்கள் என்றுதான் சொல்வீர்கள். உண்மை அதுவல்ல! மனிதன் காகிதத்தைப் பற்றிக் கற்பனை செய்வதற்கு வெகுகாலத்துக்கு முன்னாலேயே ஒரு சிறிய ஜந்து மரங்களிலிருந்து காகிதத்தை உற்பத்தி செய்துவந்தது. வியப்பாக இருந்தாலும் அதுதான் உண்மை. காகிதக்குளவி என்று ஒரு வகை வண்டு மரப்பட்டைகளைக் கூழாக்கி, காகிதம் போன்றதோர் பொருளைத் தனது கூட்டைக் கட்டுவதற்குத் தயார் செய்கிறது.

தாவர உலகில் மிகமிக உயரமான இனம் எது என்றால் அமெரிக்காவில் உள்ள ஒருவகை மரங்கள் என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் அது தப்பு! உண்மையில் கடலில் வளரும் ஒருவகைப் புல்தான் உயரமான தாவர இனம். தென் அமெரிக்காவின் தென்கடல் பகுதிகளில் வளரும் கடல் தாவரம் 600 அடிகள் உயரம்வரை வளர்கின்றன.

# இடி அமீன்

அற்புதன் எழுதிய

உண்மைத் தொடர்...

அதிர் இடி 42

**இனி...**

**காதலிகள் வீட்டுக்கும் மறக்காமல் பொதிகள் அனுப்பி வைத்தான் அமீன்.**

**'வாவ் என்றாள் இல்மா.**

**'முதலில் நீ வா!" என்று அவளது தொடையில் கிள்ளினான் அமீன்.**

**அவள்வலியில் துடித்து நடிக்க கிள்ளிய இடத்தில் வருடிவிடும் சாக்கில் அமீனின் கைகள் விஷமம் புரிந்தன.**



நூறு டொலர்களை மட்டுமே எடுத்துச் செல்லலாம் என்று முதலில் உத்தரவிட்ட அமீன் பின்னர் விடுத்த அறிவித்தல் ஆசிய நாட்டவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"தங்கள் தேவைக்குரிய பொருட்களை ஒரு குறிப்பிட்டளவில் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. அவ்வாறு எடுத்துச் செல்லும் பெட்டிகளில் தெளிவாக பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருக்க வேண்டும், என்று உகண்டா வானொலி அறிவித்தது.

இடி அமீனின் மனம் சற்று இரங்கிவிட்டது என்றே உகண்டாவில் உள்ள ஆசிய நாட்டவர்கள் நினைத்தனர்.

பெறுமதியான பொருட்களை மட்டும் பெட்டிகளில் எடுத்துக் கொண்டு ஆசியர்கள் விமான நிலையம் சென்றனர். கம்பாலா விமான நிலையத்தின் முன்புறமாக ஒரு மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

அம்மண்டபத்தில் இருந்த இராணுவத்தினரிடம் பெட்டிகளையும், பொருட்களையும் ஒப்படைக்க வேண்டும். எந்த விமான நிலையத்துக்கு அவை போய்ச் சேர வேண்டுமோ அங்கு அவற்றை அனுப்பிவைக்கிறோம் என்று கூறப்பட்டது.

அனைவரும் தமது பொதிகளை ஒப்படைத்துவிட்டு விமானத்தில் ஏறினர். ஆனால் அவர்களது பொதிகள் மட்டும் விமானத்தில் ஏறவில்லை. மண்டபத்தில் மலைபோல குவிந்து கிடந்தன.

ஒவ்வொரு விமானம் புறப்படும் வரையும் பொதிகள் அங்கேயே கிடக்கும். விமானம் புறப்பட்டதும் அதில் ஏற்றுவதாகக்கூறி வாங்கி வைக்கப்பட்ட பொதிகள் தனியாக ட்ரக் ஒன்றில் ஏற்றப்பட்டன.

அந்த ட்ரக் வண்டிகள் நேராக அமீனின் இருப்பிடத்திற்கு விரைந்தன.

ஆசிய நாட்டவ்கள் அனைவரும் வெளியேறியபின்னர் அமீனின் மாளிகை முன்றலில் மலை மலையாக பெட்டிகளும், பொதிகளும் குவிந்து கிடந்தன.

அமீன் முன்பாகவே அத்தனை பொதிகளும் பிரித்துப் பார்க்கப் பட்டன.

தங்கநகைகள் போன்ற பெறுமதியான உடைமைகள் இருந்த பொதிகளை அமீன் பொறுப்பு ஏற்றுக்கொண்டான்.

ஏனையவை அமீனின் பாதுகாப்புக்காக நின்ற படையினருக்கும், படை உயர் அதிகாரிகளுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

அமீனின் மனைவியர் வீடுகளுக்கும் உறவினர் வீடுகளுக்கும் பொதிகள் பிரித்து அனுப்பிவைக்கப்பட்டது. காதலிகள் வீட்டுக்கும் மறக்காமல் பொதிகள் அனுப்பி வைத்தான் அமீன்.

"வாவ் என்றாள் இல்மா.

"முதலில் நீ வா!" என்று அவளது தொடையில் கிள்ளினான் அமீன்.

அவள் வலியில் துடித்து நடிக்க கிள்ளி யஇடத்தில் வருடிவிடும் சாக்கில் அமீனின் கைகள் விஷமம் புரிந்தன.

தேவையான பொருட்களை கொண்டு செல்லுமாறு ஏன் கூறினீர்கள் என்றாள் இல்மா.

அவளை ஆராய்ந்துகொண்டே விஷமமாகச் சிரித்தான் அமீன். அப்படிச் சொன்னதால் தான் எங்கே புதைத்து வைத்துவிட்டுப் போகாமல் தாமாகவே கொண்டுவந்து தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். "ஆசியர்களை முட்டாளாக்கி விட்டேன் பார்த்தாயா?" என்றான்.

உண்மையாகவே வியந்தாள் இல்மா. அவனது தலையை தடவி நெற்றியில் முத்தமிட்டாள்.

"தங்க மூளை!" என்றாள் கண்களை கிறக்கமாக வைத்துக்கொண்டு.

ஆசிய நாட்டவர்கள்ளை அமீன் வெளியேற்றியதற்கு உகண்டாவில் வரவேற்பு இருந்தது.

ஆசியர்கள் மீது பொறாமை கொண்டிருந்த உகண்டாவாசிகள் அமீன் புகட்டிய பாடம் பொருத்தமானது என்று கூறினார்கள்.

ஆனாலும் ஆசியர்கள் விட்டுச் சென்ற செல்வத்தை அமீனும் அவனது படைகளும் மட்டுமே பங்குபோட்டு அனுபவித்ததையும் உகண்டாவாசிகள் பொறுமையோடு தான் பார்த்தார்கள்.

"எங்களுக்கும் பகிர்ந்துகொடுத்திருக்கலாம்!" என்பது பலரது அபிப்பிராயமாக இருந்தது. ஆனாலும் வாய்விட்டு கூறினால் உயிர்விட்டுப் போயிவிடும் என்று யாரும் மூச்சுக் காட்டவில்லை.

மக்கள் என்ன நினைக்கின்றனர் என்பதை மோப்பம் பிடித்து அமீனுக்கு கூறியது உளவுப் பிரிவு.

"ஆள்பவன் கொஞ்சம் அனுபவிக்கக் கூடவிடமாட்டார்கள். போலிருக்கிறதே" என்று சிரித்தான் அமீன். ஆனாலும் உள்ளூர கொஞ்சம் யோசித்தான்.

"மக்களின் அதிருப்தி வளருவது ஆபத்தானது என்பதால் அதற்கு மாற்று மருந்து கொடுத்தாகவேண்டும்" என்று நினைத்தான்.

அதற்கான வாய்ப்பும் கைக்கெட்டியது. மீண்டும் எப்படியாவது உகண்டாவுக்கு திரும்பவேண்டும். அமீன் பதவியில் இருந்து விரட்டவேண்டும் என்று கனவு கண்டுகொண்டிருந்தார் ஒபேடே.

தான்ஸானியாவின் உதவியுடன் கிளர்ச்சிப் படை ஒன்றை ஒபேடே உருவாக்கினார்.

உகண்டாவில் இருந்து தப்பியோடிய படையினர் பலர் ஒபேடேயின் கிளர்ச்சிப் படையில் இருந்தனர்.

"அமீன் ஒரு நம்பிக்கை துரோகி! வளர்த்த கடாவாக இருந்து வளர்த்தவனான என்மீதே பாய்ந்த துரோகி! உகண்டாவை வெறும் காலி டப்பாவாக மாற்றப்போகிறான்.

"அவனை ஒழித்துக்கட்டுவதே என் இலட்சியம்!" என்று கிளர்ச்சிப் படைகள் மத்தியில் உரையாற்றினார் ஒபேடே.

ஆயிரம் பேர்வரை கிளர்ச்சிப் படையில் இருந்தனர்.

ஒபேடேக்கு அவசரம் இழந்த அதிபர் பதவியை விரைவாகப் பெறும் அவசரம்.

அவசரக்காரருக்கு புத்திமட்டுத்தான். பொறுமை இல்லாமல் அமீனின் பலம், பலவீனம் ஆராயாமல் தன் கிளர்ச்சிப் படையை உகண்டாவுக்குள் ஏவினான் ஒபேடே. இரவோடு இரவாக தான்ஸானியா எல்லையூடாக உகண்டாவுக்குள் புகுந்தது கிளர்ச்சிப்படை.

ஒரு பகுதியினர் ஊடுருவும்போது உகண்டா படைவீரர்கள் கண்டுவிட்டனர். துப்பாக்கிகள் முழங்கின. அமீனுக்கு தகவல் பறந்தது.

அந்த நள்ளிரவில் இல்மாவை வதைத்துக் கொண்டிருந்தான் அமீன். அவள் தனது வக்கிரத்தால் துடிப்பதை கொடூர ரசனையுடன் அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அந்த ரசனையை கெடுக்கும் போன் ஒலியை சபித்தபடியே எடுத்த அமீன், மறுமுனைத் தகவல் தூக்கிவாரிப் போட்டது.

"மூன்றுபேரை பிடித்து வைத்திருக்கிறோம், இருபது பேர் கொல்லப்பட்டுவிட்டனர். நமது தரப்பில் பத்துப்போர் செத்துப்போனார்கள்!"



(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 577

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | ■ |
| 13 | 14 | ■ | 16 | 17 | 18 |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | ■ | 30 |
| 31 | 32 | ■ | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **23.06.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 577
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 575 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தா | 2 வ | 3 டி | 4 போ | 5 த | 6 ல் |
| 7 ற் | 8 ன் | 9 பு | 10 க | 11 ல | ■ |
| 13 ப | ■ | ■ | ■ | ■ | 18 தை |
| 19 ரி | 20 சா | 21 த | 22 ந் | 23 ம | 24 யா |
| 25 ய | 26 க் | 27 கூ | 28 ச | 29 தி | 30 ரி |
| 31 ம் | 32 கை | 33 ம் | 34 தி | 35 ய | 36 ம |

**இடமிருந்து வலம்**

01. நீங்கள் உங்களைப் பற்றி உங்கள் மனதில் உருவாக்கி வைத்திருக்கும் எண்ணம்.

07. இதுதான் பாடமாகும். பாடங்கள் எப்பொழுதும் இது ஆகாது. (குழம்பியுள்ளது)

13. பெற்றோலிய பிரித்தெடுப்பில் இறுதியாகக் கிடைப்பது. (திரும்பியுள்ளது)

16. விளைநிலம். (குழம்பியுள்ளது)

21. இருமடங்கு. (குழம்பியுள்ளது)

25. பூமியைப் பிளப்பது. (குழம்பியுள்ளது)

31. பாலை நிலம்.

34. ஒரு சுவை. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. சுவர்க்கம்.

02. சூது. குழந்தை விளையாட்டு. (குழம்பியுள்ளது)

03. நீதி. விண்ணப்பம்.

04. ஒரு சரக்கு. மிகுவினிப்பு. (குழம்பியுள்ளது)

05. அரசர்க்கிடும் திறை. ( குழம்பியுள்ளது)

18. "யோசிக்க வைக்காத புத்தகம் உபயோகமற்ற......"

21. அழுக்குத் துணியைக் கழுவ இது பாவிக்கப்பதுண்டு.

26. பித்தளை. மரப்பொது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 575 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ம.சதுஷன், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
02. ஆர்.றொபோட், புகையிரத வீதி, மன்னார்.
03. ம.சோதிமலர், அநுராதபுர வீதி, புத்தளம்.
04. க.பபிதா, சென். லோரன்ஸ் றோட், வெள்ளவத்தை.
05. எம்.ஏ.தாஹிர், பேராதெனிய வீதி, கண்டி.
06. ந.மரியசீலி, கடற்கரை வீதி, மன்னார்.
07. து.சசிவாணி, கோவில் வீதி, கொடிகாமம்.
08. எவ்.எம்.ஹுசைன், நிவ்எல்பிட்டிய.
09. பி.சைந்தவி, மட்டுவில், சாவகச்சேரி.



ரோமியோ ஜூலியட்



லாரா

# கத்தி வில்லனான விஜய்!

சினிமாக்களில் ஹீரோக்களை நல்லவர்கள் போன்றும், வில்லன்களை கெட்டவர்கள் போன்றும் சித்தரிப்பது ஒரு பாணியாகிவிட்டது. ஆனால், ஒவ்வொரு படங்களையும் நகர்த்தி செல்வதே வில்லன்கள்தான். அவர்கள் பின்னாடிதான் ஹீரோக்கள் ஓடிக்கொண்டிருப்பார்கள். அந்தவகையில் ஹீரோக்களைவிட வில்லன்கள் மிரட்டலாக நடித்திருப்பார்கள். காரணம், ஹீரோ என்பவர் ஒரு எல்லைக்குள்தான் நிற்கவேண்டும். ஆனால் வில்லனுக்கு எல்லையே கிடையாது. அவன் எப்படி வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானலும் ஓடலாம், பாயலாம்.

அதனால், எல்லா ஹீரோக்களுக்குமே நாமும் வில்லனாக நடிக்கவேண்டும் என்கிற ஆசை மனதிற்குள் ஓடிக்கொண்டுதான் இருக்கும். ஆனால், விஜய் போன்ற நடிகர்கள் வில்லனாக நடிப்பது சாத்தியமில்லை என்பதால், தாங்கள் இரண்டு வேடங்களில நடிக்கும் படங்களில் ஹீரோ, வில்லன் என இரண்டுவிதமான ரோல்களில் நடித்து தங்களது வில்லன் ஆசையை தீர்த்துக் கொள்கிறார்கள்.

அந்தவகையில், ஏ.ஆர். முருகதாஸ் இயக்கும் கத்தி படத்தில் இரண்டு வேடங்களில் நடித்துள்ள விஜய், வில்லன் வேடத்தில் இதுவரையில்லாத மாறுபட்ட நடிப்பை கொடுத்துள்ளாராம். எல்லை தாண்டிய அவரது நடிப்பைப்பார்த்து யூனிட்டில் உள்ளவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தது ஒருபக்கம் இருந்தாலும், இப்போது விஜய், தான் நடித்த காட்சிகளை போட்டுப்பார்த்து விட்டு ஆச்சரியத்தில் உறைந்துபோயிருக்கிறாராம். இந்த தகவலை தனது ரசிகர்கள் வட்டாரத்தில் அவர் கசிய விட்டதையடுத்து, தங்கள் தளபதியின் வில்லன் அவதாரத்தை காண அவரது ரசிக கோடிகள் ஆவலோடு காத்திருக்கிறார்களாம்.


# சான்ஸே இல்லை – அனிருத் நடிக்கும் படம்!

கொலவெறி பாடல் ஹிட்டானதும் அனிருத்தை இசையமைக்க அணுகியவர்களைவிட, அவரை நடிக்கக் கேட்டு அணுகியவர்களே அதிகம். கண்டேன் படத்தைத் தயாரித்த பட நிறுவனம் அனிருத்தை தங்களின் அடுத்த படத்தில் நடிப்பதற்காக அணுகியபோது, அவருக்கு ஒரு கோடி சம்பளம் தரவும் முன்வந்தது. அனிருத்தோ தேடிவந்த படவாய்ப்பை சொரி சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்.

அதன்பிறகும் எத்தனையோ படவாய்ப்புகள் அவரை முற்றுகையிட்டன. கடைசியாய் 'ஆகோ' என்ற படத்தில் நடிக்கவும் அவருக்கு ஓ.்.பர் கொடுத்தனர். கதை சூப்பராக இருக்கிறது.

ஆனால் நான் நடிக்கமாட்டேன் என்ற சொன்ன அனிருத், அந்தப் படத்திற்கு இசையமைக்க மட்டும் ஒப்புக்கொண்டார். இப்படி தன்னைத் தேடிவந்த கதாநாயகன் வாய்ப்புகளை எல்லாம் மறுத்துவந்த அனிருத், தற்போது ஒரு படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். படத்தின் பெயர் 'சான்ஸே இல்லை'. இப்படத்தின் படப்பிடிப்பு மகாபலிபுரத்தில் முதல்நாள் பாடல் காட்சி படமாக்கப்பட்டது.





# குழந்தைகளுக்காகவே நடிக்க வந்தேன்

— ஜெயம் ராஜா

'ஜெயம்' திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் இயக்குனராக அறிமுகமானவர் ஜெயம் ராஜா. தொடர்ந் பல வெற்றிப்படங்களை கொடுத்த அவர் தற்போது முறையாக நடிகராகவும் அவதாரம் எடுத்துள்ளார். நாயகனாக அறிமுகமாகும் படம் 'என்ன சத்தம் இ நேரம்'. இப்படத்தை இயக்குனர் சுரேஷ் கிருஷ்ண பணியாற்றிய குரு ரமேஷ் இயக்குகிறார்.

உலக சினிமாவில் முதன்முறையாக பிரசவத்தில் பிறந்து, ஒரே தோற்றம் வயதேயான நான்கு பெண் குழ அதீதி, ஆக்ரிதி, அக்ஷிதி, ஆப் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங் நடிக்கிறார்கள். இந்த நான்கு குழந் அப்பாவாகத்தான் ஜெயம் ராஜா நடித்துள்ளார்.

13 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு 'காதல் மன்னன்' மானு இதில் ஒரு முக் கேரக்டரில் நடித்திருக்கிறார். மனோபாலா சிவசங்கர் மாஸ்டர், சுவாமிநாதன், வையா இமான் அண்ணாச்சி உட்பட பலர் நடித்தி கள். நாகா இசையமைத்திருக்கிறார்.

முதன்முறையாக தனது நடிப்பு அனுபவ 'ஜெயம்' ராஜா கூறும்போது, "எனக்கு நடிப் பல வாய்ப்புகள் வந்தது. ஆனாலும் நான் எ ஒப்புக் கொள்ளவில்லை. இந்தக் குழந்தைகளு இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டேன்.

இவர்களுடன் நடித்தது மிகவும் வித்தியாச அனுபவமாக இருந்தது. இந்த படத்தில் நடித்தத நடிப்பு என்றால் என்ன என்பதையும், நடிகர்களி வேலை வாங்கவேண்டும் என்பதையும் அறிந்துகொ இப்படத்திற்குப் பிறகு நான் இயக்கும் படங்களில் ந களிடம் வேலைவாங்கும் விதமே மாறியிருக்கிறது எ சொல்லலாம். காரணம் நடிப்பது எவ்வளவு கஷ்டம் நான் நடித்த பிறகுதான் உணர்ந்தேன்" என்றார்.



...கும் படம்!

...ளே அதிகம்.
...ங்களின்
...கோடி
...பை சொரி
...கையிட்டன.



# பார்த்திபனின் ஆவேசம்

தற்போதெல்லாம் ஒரு படம் திரைக்கு வருகிறதென்றால் அன்றைய தினமே வீதி வீதியாக திருட்டு விசிடிக்களும் விற்பனைக்கு வந்துவிடுகின்றன. இதனால், தியேட்டர்களுக்கு வரவேண்டிய பெருவாரியான ரசிகர்கள் அந்த திருட்டு விசிடியில் படத்தைப் பார்த்துவிட்டு தியேட்டருக்கு வருவதை தவிர்த்துவிடுகிறார்கள். இதன்காரணமாக பல படங்கள் தோல்வியை தழுவிவருகின்றன.

இதை பலரும் மேடைகளில் குறிப்பிட்டபோதும் அந்த திருட்டு விசிடிக்களை அழிப்பது சம்பந்தமான முயற்சிகளில் இறங்குவதில்லை. அதேபோல்தான் நடிகர் பார்த்திபனும் திருட்டு விசிடி சினிமாவை அழிப்பது பற்றி ஒரு குட்டிக்கதை வடிவில் குறிப்பிடுகிறார்.

அதாவது, அமெரிக்காவில் திருடர்களை கண்டுபிடிக்க ஒரு மெஷின் கண்டுபிடித்தார்கள். அதை அமெரிக்காவில் வைத்தபோது 10 ஆயிரம்பேரை கண்டுபிடித்துக்கொடுத்தது. அதையடுத்து, ஜப்பானில் வைத்தபோது 8 ஆயிரம் பேரையும், ரஷ்யாவில் வைத்தபோது ஆயிரம் பேரையும் பிடித்துக்கொடுத்து. ஆனால், இந்தியாவில் வைத்தபோது அந்த மெஷினையே திருடிச் சென்றுவிட்டார்கள் என்று அந்த கதையை சொல்லிமுடித்தார்.

இப்படித்தான் நாங்கள் கஷ்டப்பட்டு ஒரு படத்தை எடுத்தால், அதை திருட்டு விசிடி போட்டு விற்பனை செய்கிறார்கள். இதனால் சினிமா அழிந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதை தடுக்க, சினிமாவை காப்பாற்ற யாரும் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இதை இப்படியே விடக்கூடாது. இதற்கு அனைவரும் கூடி ஒரு நல்ல தீர்வை கொண்டுவரவேண்டும் என்று தனது ஆதங்கத்தை பதிவுசெய்கிறார் பார்த்திபன்.





...வந்தேன்
...ம் ராஜா

...தமிழ் திரையுலகில் வெற்றி ...ம் ராஜா. தொடர்ந்து ... அவர் தற்பொது முதன் ...ம் எடுத்துள்ளார். அவர் ... 'என்ன சத்தம் இந்த ... சுரேஷ் கிருஷ்ணாவிடம் ...க்குகிறார்.

...முதன்முறையாக ஒரே ... ஒரே தோற்றம்கொண்ட 8 ...ன்கு பெண் குழந்தைகள் ... அக்ஷிதி, ஆப்தி ...கிய கதாபாத்திரங்களில் ...ந்த நான்கு குழந்தைகளின் ... ஜெயம் ராஜா

...வெளிக்குப் பிறகு ... இதில் ஒரு முக்கியமான ...றார். மனோபாலா, ...மிநாதன், வையாபுரி, ...ட பலர் நடித்திருக்கிறார் ...திருக்கிறார்.

...து நடிப்பு அனுபவம் பற்றி ... "எனக்கு நடிப்பதற்கு ...னாலும் நான் எதையும் ...தக் குழந்தைகளுக்காகவே ...ண்டேன்.

...மிகவும் வித்தியாசமான ...டத்தில் நடித்ததன்மூலம் ...யும், நடிகர்களிடம் எப்படி ...யும் அறிந்துகொண்டேன். ...தும் படங்களில் நடிகர் ...றியிருக்கிறது என்று ...வ்வளவு கஷ்டம் என்பதை ...தேன்" என்றார்.

## மீண்டும் ஹீரோவாக அரவிந்த்சாமி

ஒரு காலத்தில், கல்லூரி பெண்களின் மனம் விரும்பும் ஹீரோவாக இருந்த அரவிந்த் சாமி, படவாய்ப்புகள் குறைந்ததால், நடிப்புக்கு முழுக்குப்போட்டார். எட்டு ஆண்டுகளுக்கு பின், அவரை மீண்டும், கடல் படத்தில் நடிக்க வைத்தார் மணிரத்னம். இருப்பினும், அதன்பின் எதிர்பார்த்தபடி, அரவிந்த்சாமிக்கு புதிய படங்கள் கிடைக்கவில்லை. ஆனாலும், அவரின் காத்திருப்பு வீண் போகவில்லை. 'வணங்காமுடி' என்ற படத்தில், மீண்டும் நாயகனாக உருவெடுத்துள்ளார். இந்த படத்தில், அரவிந்த்சாமி, ஐந்து விதமான கெட்டப்புகளில் நடிக்கிறாராம். அதனால், உடல் எடையை குறைத்து, ஓரளவு ஸ்லிம்மாக காட்சி அளிக்கிறார்.

## பின்னணி பாடுகிறார் சூர்யா!

சூர்யா தற்போது லிங்குசாமி இயக்கத்தில் அஞ்சான் படத்தில் நடித்துவருகிறார். இதன் ஷூட்டிங் பெரும்பகுதி முடிந்த நிலையில் இறுதிகட்ட பணிகள் நடந்துவருகிறது. இப்படத்தில் முதன்முறையாக சூர்யா சொந்தக்குரலில் பாடல் பாடப்போவதாக கூறப்படுகிறது.

இதுபற்றி படக் குழுவினர் கூறும்போது, இப்படத்துக்காக சூர்யா சொந்தக்குரலில் பாடும் ஐடியா உள்ளது. ஆனால் இன்னும் அந்த பாடல் ஒலிப்பதிவாகவில்லை என்றனர். இப்படத்தையடுத்து வெங்கட் பிரபு இயக்கும் படத்தில் சூர்யா நடிக்க உள்ளார். பட ஷூட்டிங்கிற்கான ஆரம்பகட்ட பணிகளில் வெங்கட் பிரபு மும்முரமாக உள்ளார்.


# துரோகம்



அவனது கபட வார்த்தைகளால்
அவளது இதயம் பூத்து குலுங்கியது...!
அவனது விஷமப் பேச்சால்
அவளது கற்பனை உலகம்
விரிந்து விசாலமானது...!
அவனது சொல்லின் மயக்கத்தில்
அவள் தன்னிலை மறந்து
கற்பை இழந்தாள்!
நாள்தோறும் அவனது குரல்
கேட்க அவளிட்ட அழைப்போ
அவனுக்கு பெரிதும் தொல்லையானது!
ஓர் நாள் அவளது கற்பனை
கோட்டைகளை
தகர்த்து
குறுந்தகவலில் ஓர் தகவலிட்டான்
ஐ எம் சொரி...
ஐ ஹேவ் மெர்ரிட்...!!

எம்.யூ.அல்சா[illegible].
ஒட்டமாவடி.

# கடவுள் ஏன் கல்லானார்?



மழையினை நிறுத்த வேண்டி
மண்டியிட்ட துடுப்பாட்ட
வீரனுக்கும்
மழையை வரவேண்டி வழிபட்ட
ஏழை விவசாயிக்கும்
விடை பகர மாட்டாமல்
கல்லாகிப் போனார் கடவுள்.
விட்டார்களா?
கல்லாய மரத்தின்கீழ்
கல்லாக கிடந்த
தட்சணா மூர்த்திக்கு
கட்டுகிறார்கள் நூல்.

சுபாஷினி பிரணவன்.

# வெண்புறா கொணர்ந்த வெண்புடவை


வெண்மை
சமாதானக் குறியீடு
சிறகுகளை விரித்து
அங்கு மிங்குமாய்
சமாதானம் பேசியது
வெள்ளைப்புறா

யுத்த வில்லன்
இடங்களை மட்டுமா பாழாக்கினான்
மனங்களையும் தான்....

குண்டுத்தாக்குதலுக்கு பயந்து
கோவணத்துண்டோடு
ஓடியவர்கள்
குழந்தைகளை நெஞ்சோடு
அணைத்து தம்மையே
தூக்க முடியாமல்
ஓடியவர்கள்

மனங்கள் எங்கும் ரணங்கள்
மஞ்சள் முகம் வெளிறலாக
மனைவிமார்
கன்னி கழியாமலே
விதவைப்பட்டம் பெற்றனர்.

வெண்மை விரித்து வந்த
வெள்ளைப்புறா



வெளிறலாய்ப் போன முகங்களுக்கு
வெள்ளைச் சேலை
கொண்டு வந்தது...

வெண்ணிலவாய்
உதயமாக வேண்டியவர்கள்
வெள்ளைத் தாமரையாய்
வெண்புடைவை ஏற்றார்கள்.

ஏ!
வெண்புறாவே
மஞ்சள் கடதாசியில்
சேதி சொல்வாயென இருந்தோம்.

வெள்ளைக் கடதாசியில்
சோதனையையே
நடத்தி விட்டாயே...!
எப்போது மாற்றிக் கொள்வாய்
உன் நிறத்தை?
அன்று மாறட்டும்
வெண் தாமரை
சொந்தாமரையாக...!

ஞா.கௌசிகா, யாழ்ப்பாணம்.

# ஈழத்து எழுத்தாளர்கள்



## த.அஜந்தகுமார்

ஈழத்துப் படைப்பாளிகளில் ஒருவர். கவிதை, சிறுகதை, விமர்சனம், இதழியல் ஆகிய துறைகளில் ஈடுபாட்டுடன் செயற்பட்டுவருகிறார். யார்வத்தை, வதிரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கிறார்.

தருமராசா அஜந்தகுமார். க. பொ.த உயர்தரத்தை நெல்லியடி மத்திய மகா வித்தி யாலயத்தில் கற்றுக்கொண்டார். . யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்றவர்.

ஈழத்துச் சஞ்சிகைகளான கலைமுகம், ஞானம், புதிய தரிசனம், தாயகம், அம்பலம், நடுகை, ஜீவநதி, தெரிதல் மற்றும் பல சஞ்சிகைகளில் இவரது படைப்புக்கள் வெளியாகியுள்ளன. யாழ்ப் பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளிலும் எழுதிவருகிறார். வார்ப்பு, காற்றுவெளி, திண்ணை ஆகிய இணைய இதழ்களிலும் இவரது படைப்புக்கள் வெளியாகியுள்ளன. இவைதவிர க.பொ. உயர்தர மாணவர்களுக்கான பாடநூல் தொகுப்பாசிரியராகவும் உள்ளார். இவ்வகையில் தமிழ்ச் சிறுகதைகள், உரைநடைக்கோவை ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

**இதழ் பங்களிப்பு**

புதிய தரிசனம் என்ற காலாண்டு கலை இலக்கிய சஞ்சிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

**இலக்கியச் செயற்பாடு**

2010 - தமிழகத்தில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரை வாசித்தார்.

2011 - கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரை வாசித்தார்.

ஞானம் பரிசுக்கதை தொகுதிகளான கொக்கிளாய் மாமி, சிறைப் பட்டிருத்தல், கருமேகம் தாண்டிய நிலவு ஆகிய தொகுதிகளிலும் பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடான பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள் ஆகிய தொகுதிகளில் இவரது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஜீவநதி வெளியீடாக வெளிவந்த கவியில் உறவாடி... தொகுதியில் இவருடைய கவிதை வெளிவந்துள்ளது.

**வெளிவந்த நூல்கள்**

ஒரு சோம்பேறியின் கடல் (கவிதைகள், அம்பலம் வெளியீடு)
தனித்துத் தெரியும் திசை (ஆய்வு, புதிய தரிசனம் வெளியீடு)



# தரித்திரமே சாஸ்திரம்

உழைத்தவை எவையும்
தங்கவில்லை
ஒருவர் மாறி ஒருவர் - வீட்டில்
நோயின் அரவணைப்பில்
எடுத்த காரியமெல்லாம்
சாண் ஏற முழம் சறுக்கி
வாஸ்து சரியில்லையோ
எதற்கும் ஜோசியரைப்
பார்ப்போமென சொன்னது
அடி மனது.

வெற்றிலை உதிப்பிலே
சனியன் கடைக்கூறாம்
ஆவணி பத்துக்குப் பின்
அனைத்தும் சரிவருமாம் -
என்று
சாஸ்திரி குறித்ததும்
இந்தப் பாவிக்கு
ஐப்பசி முடிந்தும்
சரிவரவில்லை.

பாக்குவெட்டிக்கு குறியொன்று
பாரென்று சொன்னார்
பக்கத்து வீட்டுக்
பரமசிவம் அண்ணர்

பார்த்த குறியிலே
பகரும் விடையோ
படலையில் இருந்து
பதினைந்து சாண் தூரத்தில்
படுகளம் போட்டு - எனக்கு
புதைத் திருக்கானாம்
பாவியொருத்தன்
சூனியமொன்று

எடுப்பது சுலபமாம்
செலவுதான் அதிகமாம்
செய்தவன் எவனென்று
சொல்லுங்கள் என்றேன்
பிரச்சினைக்குப் போவேனாம்
மாட்டேன் என்றார்.

செலவுதான் எவ்வளவு
கூறுங்கள் என்றேன்
முந்தை நாள் எடுத்தாராம்
ஆயிரம் இருபத்தைந்தாம்
ஏழை நான் என்பதால்
இரண்டைக் குறைப்பாராம்.
மடைச் சாமானெல்லாம்
அதனுள் அடங்காதாம்
கூவும் சேவல்
கோழி ஒன்றாம்
போத்தலோ மூன்றாம்
தரித்திரம் பிடித்ததால்
தருகிறேன் என்றேன்.

எப்படி எடுப்பார்கள்
என்பதுதான் புரியவில்லை
புதைத்து விட்டு எடுத்து
பேர் வாங்கும்
பூசாரி உண்டு
இல்லாமல் எடுக்காமல்
வெட்டிக் கழித்தேனென்று
பணத்தை எண்ணும்
மந்திரவாதிகளுமுண்டு
வெளிச்சம் எனக்கில்லை...

- கல்வியூர்க்கவிராயர் -
கோட்டைக்கல்லாறு.




# பிரேசில் திருவிழா

### சிகரத்தை நோக்கி

- முப்பத்தியிரண்டு அணிகளும் தலா நான்கு அணிகள் கொண்ட 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
- முதல் சுற்று ரவுண்ட் றொபின் முறையில் அமையும். ஒரு குழுவில் ஒரு அணி மற்ற அணியை இருமுறை சந்திக்கும்.
- இதன்பின்னர் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்கள் பெறும் அணிகள் தெரிவாகி மொத்தம் பதினாறு அணிகள் தகுதிபெறும்.
- இதற்கப்பால் போட்டிகள் விலகல் முறையில் தொடரும்.



- மொத்தம் 64 ஆட்டங்கள்.
- நாடளாவிய 12 நகரங்கள்.
- முதன்முதலாக GOAL LINE TECHNOLOGY பயன்படுத்தப்படும்.
- தென் அமெரிக்கக் கண்டத்தில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் தென் அமெரிக்க நாடுகளே வென்றன.
- 2010 உலகக் கிண்ணப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெற்றன.
- இறுதிப் போட்டியில் ஸ்பானியா நெதர்லாந்தை 1 - 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து கிண்ணம் வென்றது.

## FIFA உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் தொடங்கும் இன்று சற்று பின்னோக்கிப் பார்த்தால்.....



- இந்தப் போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்றுவருகிறது.
- 1930இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டி 2ஆம் உலக மகா யுத்தம் காரணமாக 1942 - 1946ஆம் ஆண்டுகளில் நடைபெறவில்லை.
- உலகின் முதல் சர்வதேச உதைபந்தாட்டம் 1972இல் இங்கிலாந்துக்கும், ஸ்கொட்லாந்துக்கும் இடையில் நடைபெற்றதாகப் பதிவாகி இருக்கிறது. இது 0 - 0 என்ற கணக்கில் சமநிலையாயிற்று.
- FIFA அமைப்பு 1904இல் ஏற்பட்டபின்னர், ஒலிம்பிக் போட்டிக் கட்டமைப்புக்குப் புறம்பாக, நாடுகளுக்கு இடையிலான சுற்றுப் போட்டியொன்று 1906 சுவிட்சர்லாந்தில் ஏற்பாடு செய்யப்படிருந்தது.
- முதன்முதலாக உத்தியோகபூர்வ FIFA உலகக் கிண்ணப் போட்டிகள் தென் அமெரிக்காவில் உருகுவே நாட்டில் 1930இல் நடைபெற்றது. இதில் உருகுவே, ஆர்ஜென்ரீனாவை 4-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து முதல் சம்பியனாகியது.
- இந்த இறுதி ஆட்டத்தைப் பார்த்தவர்களின் மைதான எண்ணிக்கை 93000.
- 1930இல் இருந்து 1970வரை இந்தக் கிண்ணத்தின் பெயர் ஜூல்ஸ் ரிமெட் கிண்ணம் (JULES RIMET TROPHY) என வழங்கப்பட்டது. 1970இல் பிரேசில் மூன்றாவது முறையாக உலகக் கிண்ணத்தை வென்றபோது, அது பிரேசிலுக்குச் சொந்தமாயிற்று. ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் களவாடப்பட்ட கிண்ணம் இன்றுவரை மீட்கப்படவே இல்லை. (திருடர்களால் உருக்கப்பட்டு உலோகமாக விற்கப்பட்டிருக்கலாம்)
- 1970 இருந்து புதிய பெயருடன் FIFA உலகக் கிண்ணம் என்ற பெயரில் வழங்கப்பட்டுவருகிறது.
- அதிக உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர்கள் என்ற சாதனையை இருவர் பகிர்ந்துகொள்கிறார்கள். இருவரும் தலா 5 உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர்கள். அன்ரோனியோ கார்பஜல் -. மெக்சிக்கோ - 1950 - 1966) லொதர் மத்தாயஸ் - ஜேர்மனி - 1982 - 1998)

## பரிசு மழை

- மொத்தம் - 576 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூபா 8000 கோடிக்கு மேல்)
- சுற்றுப்போட்டிக்கு முன்பாக ஒவ்வொரு அணிக்கும் ஆயத்தப் பணம் 1½ மில்லியன் அமெரிக்க டொலர் (ரூபா 20 கோடிக்கு மேல்)
- முதல் சுற்றில் வெளியேறும் ஒவ்வொரு அணிக்கும் தலா ரூபா 112 கோடி (16 அணிகள் தனித்தனியாகப் பெற்றுக்கொள்ளும்)
- அடுத்தகட்டமாக வெளியேறும் 8 அணிகளும் தலா ரூபா 126 கோடி)
- காலிறுதியுடன் விடைபெறும் 4 அணிகள் (ரூபா 196 கோடி)
- 4ஆவது இடம்பெறும் அணி ரூபா 280 கோடி
- 3ஆவது இடம்பெறும் அணி ரூபா 308 கோடி
- 2 ஆவது இடம்பெறும் அணி ரூபா 350 கோடி
- சம்பியன் அணி ரூபா 490 கோடி.

### அதிகூடிய கோல்கள் பெற்றவர்கள்

- றொனால்டோ (பிரேசில்) 15 கோல்கள் - 1998 - 2006
- மிரேசிலாங் குளோஸ் (ஜேர்மனி) 14 கோல்கள் - 2002 - 2010
- கேர்ட் முலர் (ஜேர்மனி) 14 கோல்கள் - 1970 - 1974
- இறுதியாக 2010 இல் நடைபெற்ற உலகக் கிண்ணம் போட்டிகளில் ஸ்பானியா கிண்ணம் வென்றது.

### அடுத்து நடைபெற இருக்கும் உலகக் கிண்ணப் போட்டிகள்

- 2014 - பிரேசில்
- 2018 - ரஷ்யா
- 2022 - கட்டார் (சற்று கேள்விக்குறி)

### உலகக் கிண்ணத்தில் வழங்கப்படும் விருதுகள்:

தங்கப் பந்து விருது (அதிசிறந்த வீரர்)
தங்கக் காலணி விருது (அதிக கோல்கள்)
தங்கக் கையுறை விருது (சிறந்த கோல் காப்பாளர்)
சிறந்த இளைய வீரர் விருது
FIFA FAIR PLAY விருது
MOST ENTERTAINING வீரர் விருது.

### குழு விபரம்

**குழு A**
பிரேசில்
குறோசியா
மெக்சிக்கோ
கெமரூன்

**குழு B**
ஸ்பானியா
நெதர்லாந்து
சிலி
அவுஸ்திரேலியா

**குழு C**
கொலம்பியா
கிறிஸ்
ஐவரிகோஸ்ட்
ஜப்பான்

**குழு D**
உருகுவே
கோஸ்ராரிக்கா
இங்கிலாந்து
இத்தாலி

**குழு E**
சுவிட்சர்லாந்து
ஈக்குவடோர்,
பிரான்ஸ்
ஹொண்டுராஸ்

**குழு F**
ஆர்ஜென்ரீனா
பொஸ்னியா
ஹேர்ஸகோஷனா
ஈரான்
நைஜீரியா

**குழு G**
ஜேர்மனி
போர்த்துக்கல்
கானா
ஐக்கிய அமெரிக்கா

**குழு H**
பெல்ஜியம்
அல்ஜீரியா
ரஷ்யா
தென்கொரியா



### கிண்ணம் வென்ற வரலாறு

| ஆண்டு | வின்னர் | எதிர் | கோல் விபரம் |
|---|---|---|---|
| 1930 | உருகுவே | ஆர்ஜென்ரீனா | 4 - 2 |
| 1934 | இத்தாலி | செக்கோஸ்லோவாகியா | 2 - 1 |
| 1938 | இத்தாலி | ஹங்கேரி | 4 - 2 |
| 1942 | 2ம் உலக யுத்தம் காரணம். | | நடைபெறவில்லை. |
| 1946 | 2ம் உலக யுத்தம் காரணம். | | நடைபெறவில்லை. |
| 1950 | உருகுவே | பிரேசில் | 2 - 1 |
| 1954 | ஜேர்மனி | ஹங்கேரி | 3 - 2 |
| 1958 | பிரேசில் | சுவீடன் | 5 - 2 |
| 1962 | பிரேசில் | செக்கோஸ்லோவாகியா | 3 - 1 |
| 1966 | இங்கிலாந்து | ஜேர்மனி | 4 - 2 |
| 1970 | பிரேசில் | இத்தாலி | 4 - 1 |
| 1974 | ஜேர்மனி | ஹொலண்ட் | 2 - 1 |
| 1978 | ஆர்ஜென்ரீனா | ஹொலண்ட் | 3 - 1 |
| 1982 | இத்தாலி | ஜேர்மனி | 3 - 1 |
| 1986 | ஆர்ஜென்ரீனா | ஜேர்மனி | 3 - 2 |
| 1990 | ஜேர்மனி | ஆர்ஜென்ரீனா | 1 - 0 |
| 1994 | பிரேசில் | இத்தாலி | 3 - 2 |
| 1998 | பிரான்ஸ் | பிரேசில் | 3 - 0 |
| 2002 | பிரேசில் | ஜேர்மனி | 2 - 0 |
| 2006 | இத்தாலி | பிரான்ஸ் | 5 - 3 |
| 2010 | ஸ்பானியா | நெதர்லாந்து | 1 - 0 |




# மாற்றாந்தாய் மற்றும் தந்தையருக்கு சில அறிவுரைகள்



**காலங்காலமாக தன்னைப் பெற்ற அம்மா அல்லது அப்பாவுடன் வாழ்ந்துவிட்டு, திடீரென வேறொருவருடன் வாழப் பழகுவது என்பது டீன் ஏஜில் இருக்கிற யாருக்கும் அளவுக்கதிகமான தர்மசங்கடத்தைத் தருகிற விஷயமாகத் தான் இருக்கும். தான் யார் எனச்சொல்வதில் தொடங்கி, தன்னுடைய புதிய வாழ்க்கை முறை, புதிய பங்களிப்பு என எல்லாமே அவர்களுக்குக் குழப்பத்தைத் தரும். இன்னும் சில பிள்ளைகளுக்கு வருடங்கள் கடந்தும்கூட மாற்றாந்தாய் அல்லது தந்தையுடன் ஒன்றிப்போவது இயலாத காரியமாகவே இருக்கும்.**

1. அவர்களை அளவுக்கதிகமாகக் கட்டுப்படுத்தாதீர்கள். அப்படிச் செய்தால் அவர்கள் அதைவிட அதிகமாக உங்களை எதிர்ப்பார்கள். அதேநேரம் அதிமாக செல்லம் கொடுப்பதும் தவறு. தேவையான அளவு அன்பும் கண்டிப்பும் மேற்கொண்டு அனாவசியமாக அவர்களுடன் மோதாமல் அவர்களை அவர்கள் வழிக்கே விட்டுப்பிடிக்க கற்றுக்கொள்வது நல்லது.

அவர்கள் ஏதேனும் சொல்ல நினைக்கும்போது. அதற்குக் காது கொடுக்கத் தயாராக இருங்கள். அவர்களுடன் இணைந்து இருப்பதற்கான வழிகளைச் யோசித்து, அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

2. பிள்ளைகளுக்கு பொசிட்டிவான ரோல் மொடலாக இருங்கள். காலங்காலமாக மாற்றாந்தாய் பற்றி நம் சமூகத்திலும் சினிமாக்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ள தவறான பிம்பத்தை உடைத்தெறிந்து, உங்களுடைய நல்ல பக்கங்களை அவர்களுக்கு வெளிப்படுத்துங்கள். அவர்களுக்குத் தேவைப்படும்போது அவர்கள் சொல்வதைக் கேட்கவும் அறிவுரை சொல்லவும் தயங்காதீர்கள்.

3. அவர்களுக்கு ஆரோக்கியமான உறவு முறையைக் காட்டுங்கள். உங்களுடைய சொந்தப் பிள்ளைகளுக்கும் உங்கள் கணவரின் பிள்ளைகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் தலைதூக்கலாம். இருவரின் வளர்ப்புமுறைகள் பற்றிய ஒப்பீடுகள் வாதத்துக்குள்ளாகலாம். அப்படி இருவருக்குள்ளும் எழுகின்ற எல்லா வேற்றுமைகளையும் சுமூகமாகப் பேசித் தீர்க்கப்பாருங்கள்.

4. திருமண உறவுகள் முறிந்து மறுஉறவுகள் ஏற்படும் காலத்தில் அதில் சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் யதார்த்த வாழ்க்கை, தேவைக்கு அதிகமாகக் கலையாமல் பார்த்துக்கொள்வது அவசியம்.

5. இந்த இக்கட்டான காலத்தில் சுயசார்பற்ற கண்ணோட்டத்தை மேற்கொண்டு எந்த பெற்றவருடன் அந்தப் பிள்ளை இருந்தால் அவளு(னு)க்கு நல்லது என்று முடிவெடுத்துச் செயற்படுவது நல்லது. இங்கு எந்தப் பெற்றவரால் அந்தப் பிள்ளைக்கு நேரம், கவனிப்பு, சுதந்திரம் மற்றும் தேவையான வாழ்க்கை முறை அமைத்துக் கொடுக்கமுடியுமென்று கணக்கெடுப்பது அவசியம்.

இதில் சம்பந்தப்பட்ட பிள்ளையின் கருத்தை அறிந்துசெயற்படுவது முக்கியம். அதேநேரம் இவரா, அவரா என்று முடிவெடுக்கச்சொல்லி இருவர் மேலும் அவள்(ன்) வைத்திருக்கும் பாசத்தையும் பற்றையும் சோதித்து மனமுடையச் செய்வது பாதகம். ஒருவேளை அந்தப் பிள்ளை உங்களைத் தேர்ந்தெடுக்கவில்லை என்றால் அவன்(ள்) உங்களை வெறுப்பதாக எண்ணி அதைப் பற்றி மன உளைச்சல் கொள்ளாதீர்கள். காலப்போக்கில் நிலைமை மாறக்கூடும்.

6. காலங்காலமாக தன்னைப்பெற்ற அம்மா அல்லது அப்பாவுடன் வாழ்ந்துவிட்டு, திடீரென வேறொருவருடன் வாழப் பழகுவது என்பது டீன் ஏஜில் இருக்கிற யாருக்கும் அளவுக்கதிகமான தர்மசங்கடத்தைத் தருகிற விஷயமாகத்தான் இருக்கும். தான் யார் எனச் சொல்வதில் தொடங்கி, தன்னுடைய புதிய வாழ்க்கை முறை, புதிய பங்களிப்பு என எல்லாமே அவர்களுக்குக் குழப்பத்தைத் தரும். இன்னும் சில பிள்ளைகளுக்கு வருடங்கள் கடந்தும்கூட மாற்றாந்தாய் அல்லது தந்தையுடன் ஒன்றிப்போவது இயலாத காரியமாகவே இருக்கும். ஆகவே திடீரென்று நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கும் அதிகமாக பிள்ளையுடன் பேச்சுவார்த்தை நேரக்கூடும். அல்லது பேச்சே இல்லாமல் போகக்கூடும். இரண்டுக்கும் தயாராக இருங்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால் பெற்றெடுக்காத உங்கள் பிள்ளைகள், காலப்போக்கில் தன்னைச் சார்ந்தவர்களிடம் உங்களைப் பற்றிக் கீழ்க்கண்ட முறையில் சொல்லும்படி இருக்கவேண்டும் உங்களது அணுகுமுறை.

"நான் என்னோட டீன் ஏஜ்ல சரியா நடந்துக்காதப்ப கூட, என்னோட மாற்றாந்தாய் எனக்கு ரொம்பவே சப்போர்ட் பண்ணிப் பார்த்துக்கிட்டாங்க..."

"எங்கம்மாவுக்கும் வளர்ப்பு அம்மாவுக்கும் எத்தனையோ வித்தியாசங்கள் இருக்கு... ஆனாலும், என்னை வளர்த்த அம்மாவுக்கு எப்போதும் என்னோட நலன்ல அக்கறை அதிகம்..." "எங்கப்பா இப்படியொரு அம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுல எனக்கு சந்தோசம்தான்..."

# பெண்கள் அழகு சாதனங்களை விரும்புவது ஏன்?



முதலில் கவர்ச்சி என்றால் என்ன, அழகு என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். கவர்ச்சி என்பது ஆண்களைக் கவரக்கூடியது. இதை ஆங்கிலத்தில் sex appeal என்று கூறுவார்கள். அழகு என்பது அங்க உறுப்புகளின் அளவான தன்மையைப் பொருத்தது. அழகான ஒன்று கவர்ச்சியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

ஆனாலும், இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் குறைவுதான். பொதுவாக பருவத்தில் எல்லாப் பெண்களுமே அழகு இல்லாதவர்கள்கூட- கவர்ச்சியாகவே இருப்பார்கள். காரணம் இளமை. எல்லாப் பெண்களும் அழகும், கவர்ச்சியும் உடையவர் களாக இருக்கவே ஆசைப்படுவார்கள். ஆகவே, அவர்கள் அழகு சாதனங்கள்மூலம் தன் அழகையும், கவர்ச்சியையும் கூட்டமுடியும் என்று நினைக்கிறார்கள்.

இது உண்மைதான். ஒரு 25வீதம் கவர்ச்சி உள்ள பெண் அழகு சாதனங்கள்மூலம் 75வீதம் கவர்ச்சியாகவும், அழகாகவும் தன்னைக் காட்டிக் கொள்ளமுடியும். ஆகவேதான், பெண்கள், பல தோற்றங்களில் தன்மை அழகுபடுத்திக்காட்டி, ஆண்களைச் சுலபமாகக் கவருகிறார்கள். ஒரு பெண்ணால், எது இல்லாவிட்டாலும், அழகு சாதனங்கள் இல்லாமல் ஒருக்காலும் இருக்கமுடியாது.



எடை குறைக்க சரியான வழி காலை உணவை தவிர்ப்பது அல்ல. ஏனெனில், காலை உணவுதான் அன்றைய தினத்துக்கு ஏற்ற எனர்ஜியை தருகிறது. அதைத் தவிர்த்தால்,

# தொப்பையைக் குறைக்க..!

உடல்நலம்தான் பாதிக்கப்படும். பின் எப்போது பார்த்தாலும் சாப்பிட்டுக் கொண்டே இருக்கவேண்டும் என்று தோன்றும் ஆகவே, மறக்காமல் காலை வேளையில் ஆரோக்கியமானவற்றை சாப்பிடவேண்டும். எடை குறைக்க தேன் ஒரு சிறந்த மருத்துவப் பொருள். காலையில் எழுந்ததும், ஒரு டம்ளர் நீரில் 2 தேக்கரண்டி எலுமிச்சைச்சாறு, 1 தேக்கரண்டி தேன் மற்றும் சிறிது மிளகு தூள் சேர்த்து தினமும் குடிக்கலாம்.

# பிரசவத் தழும்புகளை நீக்க முடியுமா?



கர்ப்பமாக இருக்கும்போது வயிறு விரிவடைய தொடங்கும். நோர்மல் மற்றும் சிசேரியன் முறை எதுவாக இருந்தாலும் தழும்புகள் ஏற்படும். இதைத் தடுக்கமுடியாது. நாலாவது மாதத்தில் இருந்து வயிறு விரிவடையத் தொடங்கும்போதே இதில் கவனமாக இருக்கவேண்டும்.

இதற்கென மருந்துகள் கிடைக்கின்றன. இதை குழந்தைப் பிறப்புக்கு முன்பும் பின்னரும் தொடர்ந்து தடவிவந்தால் தழும்புகளைக் குறைக்கலாம். வயிறு சுருங்கும்போதுதான் தழும்புகள் வெளியே தெரிய ஆரம்பிக்கும். அப்போது மருந்துகளைப் பயன்படுத்துவது பாதி பலன்தான் கொடுக்கும். தரமான மாய்ஸ்சரைசர் க்ரீம்களை தடவுவதும் நல்ல தீர்வே!

## சமையல் குறிப்பு

### இறால் உருளைக்கிழங்கு பொரியல்

இறால் 1/2 கிலோ, உருளைக் கிழங்கு பெரியது 2, வர மிளகாய்ப்பொடி காரத்திற்கு தேவையான அளவு, பொரிக்க தேவையானளவு எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**

முதலில் இறாலை சுத்தம் செய்து வைத்துக்கொள்ளவும், உருளைக்கிழங்கை சிறிய பொடியாக நறுக்கிகொள்ளவும். இறால், உருளைக்கிழங்கு அதனுடன் மிளகாய் தூள் உப்புபோட்டு கிளறி அரை மணிநேரம் ஊறவிடவும்.

வானலியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் அதில் இறால் கலவையைப்போட்டு பொன்னிறம் வந்ததும் எடுக்கவும். இது மிகவும் சுவையாக இருக்கும்.

## 250/= வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-423**

**கேள்வி: பாகிஸ்தானில் இளம் வயதில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண் யார்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 23.06.2014**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில், அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 423
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 421 இற்கான விடை :- சவாசனம்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- சு.டேனுசன், பாரதிபுரம், கிளிநொச்சி.

423

பெயர் : ....................
முகவரி : ....................
....................
தே.அ. அட்டை இல : ....................
விடை : ....................
....................
கையொப்பம் : ....................

ஏற் படுத்தப்பட்டது. யு.கேயை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக்கிக்கொள்வதுதான் அந்த கட்சியின் அடிப்படை நிலைப்பாடு. ஐரோப்பாவுடன் நெருக்கமாகும் கொள்கையை எதிர்க்கும் கன்சர்வேடிவ் கட்சியினரில் பலர் இந்தக் கட்சியை ஆதரிக்கின்றனர். 'ஐரோப்பாவிலிருந்து வெளியேறுவது என்ற ஒற்றை நிலைப்பாட்டை கொண்ட கட்சி' என்ற பிம்பத்தை மாற்றுவதற்கு தற்போதைய தலைவர் நீகல் ஃபாரஜ் பொருளாதாரம், வரி விதிப்பு, மருத்துவத்துறை, குடியேற்றம் போன்ற துறைகளில் முதலாளித்துவ ஆதரவு கொள்கைகளை முன்வைக்கிறார்.

**பிரான்சின் தேசிய முன்னணி 25% வாக்குகளுடன் முதலிடம் பிடித்தது**

பிரான்ஸ் நாட்டில் தேசிய முன்னணி கட்சி பிரெஞ்சு இனவாதத்தை முன் வைத்து 1970-களில் தொடங்கப்பட்டது. அதன் முக்கிய . கொள்கைகள், பொருளாதாரத் துறையில் தேசிய பாதுகாப்பு வாதம், போராட்டங்களை ஒடுக்க கடுமையான சட்டங்கள் மற்றும் வெளிநாட்டவர் குடிபெயர்வதை எதிர்ப்பது ஆகியவை. 1990-கள் முதல் ஐரோப்பிய ஒன்றியத்தை எதிர்க்கும் கொள்கைகளை கடைப்பிடித்து வருகிறது. குறிப்பாக ஐரோப்பியர் அல்லாத புலம்பெயர் தொழிலாளர்களை எதிர்க்கும் இக்கட்சி சட்ட விரோதமாக குடியேறிய மற்றும் வேலை இல்லாத வெளிநாட்டவர்களை உடனடியாக வெளியேற்றவேண்டும் என்று இனவெறி பேசுகிறது.

இத்தாலியில் முதல் இடம்பிடித்த ஆளும் இடதுசாரி கட்சி, ஜெர்மானிய முதலாளிகள் ஐரோப்பிய ஒன்றியம்மூலமாக சுமத்தும் சிக்கன நடவடிக்கைகளை நிராகரிக்கப்போவதாகவும், பொதுத்துறை முதலீடுகளை அதிகரித்து வளர்ச்சி, வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறது. கிரேக்கத்திலும் இத்தகைய கொள்கைகளை வலியுறுத்தும் இடதுசாரி சிரிசா கட்சி முதலிடம் பெற்றுள்ளது. இத்தகைய இடதுசாரி கட்சிகள் நம்மூர் போலிக்கம்யூனிஸ்டுகளின் பல்வேறு வகைமாதிரிகளாகவே இருக்கின்றனர்.

வலது தீவிரவாத அமைப்புகளின் செல்வாக்கு வளர்ந்துவருவதைத் தொடர்ந்து பிற நாடுகளின் வலது, இடது சாரி வெகுஜனக் கட்சிகளும் குடியேற்ற சட்டங்களை கடுமையாக்குவது, வெளிநாட்டவர் நாட்டுக்குள் வருவதை கட்டுப்படுத்துவது போன்ற கொள்கைகளை முன்வைக்கின்றனர். மக்கள்நலத் திட்டங்கள் வெட்டு, வெளிநாட்டவர் எதிர்ப்பு, தொழிலாளர் உரிமைகளை பறித்தல் போன்ற கொள்கைகளை வெளிப்படையாக பேசும் இங்கிலாந்தின் டோரி கட்சி (கன்சர்வேடிவ்) போன்றவை வலதுசாரி கட்சிகளாகவும், இவற்றை எதிர்த்தாலும் ஆளும் முதலாளித்துவ வர்க்கங்களின் நலனுக்கு ஏற்றபடி மேலோட்டமான சீர்திருத்தவாதத்தை முன்வைக்கும் இங்கிலாந்தின் தொழிலாளர் கட்சி போன்றவை இடதுசாரி கட்சிகளாகவும் ஐரோப்பாவில் சித்தரிக்கப்படுகின்றன.

இந்த போலி சோசலிச இடதுசாரி கட்சிகள், ஐரோப்பிய நாடுகளை இணைத்து பொதுச் சந்தையை உருவாக்குவது முதலாளித்துவ லாப வேட்டைக்குத்தான் பயன்படுகிறது என்பதை மறைத்து ஐரோப்பிய நாடுகளை இணைப்பதன்மூலம் தொழிலாளர் உரிமைகள், ஆண் அல்லது பெண் சமத்துவம் போன்ற வெற்று வாக்குறுதிகளை வென்றுவிட முடியும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தை ஆதரிப்பதாக நாடகமாடுகின்றனர்.

யூரோ ஒற்றை நாணயம், ஐரோப்பிய ஒன்றியத்தில் புதிய நாடுகளை சேர்ப்பது போன்ற நடவடிக்கைகளால் பெருமளவு ஆதாயம் அடையும் ஜெர்மனியில் ஆளும் கட்சி முதலிடத்தை தக்க வைத்திருந்தாலும், மாற்று அரசியலை முன்வைக்கும் அல்டர்நேட்டிவ் ஃப்யூர் டாய்ச்லாந்து கட்சி (யூரோ ஒற்றை நாணயத்தை எதிர்த்து, ஐரோப்பிய ஒன்றியத்தை ஆதரிக்கும் கட்சி) செல்வாக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் மொத்தமுள்ள 751 இடங்களில், ஒன்றியத்தை கலைக்கவேண்டும் என்று கோரும் கட்சிகள் மொத்தம் 142 இடங்களை வென்றிருந்தாலும், வலதுசாரி (214 இடங்கள்), இடதுசாரி (189 இடங்கள்), தாராளவாத (66 இடங்கள்) மற்றும் கிரீன் பீஸ் (52 இடங்கள்) கட்சிகள் இணைந்து முதலாளிகளுக்கு தேவையான ஐரோப்பிய ஒன்றியத்தை தொடர்ந்து நடத்தும்படியான பெரும்பான்மை பலத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஒற்றை நாணயமாக யூரோ பயனுக்கு வந்த கடந்த 15 ஆண்டுகளில் ஐரோப்பிய முதலாளிகள் குறிப்பாக ஜெர்மனிய முதலாளிகள் கிழக்கு ஐரோப்பிய மற்றும் தெற்கு ஐரோப்பிய நாடுகளுடன் தமது வர்த்தகத்தை பெருமளவு அதிகரித்துக் கொண்டுள்ளனர். பொது நாணயமான யூரோ ஜெர்மானிய தொழில்துறை ஏற்றுமதிகளை ஒப்பீட்டளவில் மலிவானவையாக பராமரிக்கிறது. அவற்றை எதிர்கொண்டு தமது தேசியத் தொர்ழில்களை பாதுகாப்பதற்கான சுயேச்சையான கொள்கைகளை வகுத்துக்கொள்ளும் சுதந்திரம் பிறநாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய விதிகளின்படி மறுக்கப்படுகிறது. ஜெர்மன், பிரெஞ்சு முதலாளிகள் தமது உற்பத்தியை, புதிதாக சேர்க்கப்பட்ட நாடுகளுக்கு இடம் மாற்றுவதன்மூலம் தத்தமது நாடுகளில் சம்பளங்களை குறைத்து ஆட்குறைப்பும் நிகழ்த்துகின்றனர்.




**"அதோ பக்கத்து நாட்டிலேர்ந்து வந்து இங்கு அரை வயித்து கஞ்சிக்கு உழைக்கும் கூட்டம்தான் பிரச்சனை களுக்கு காரணம், இவனுங்களை துரத்தி விட்டுட்டா நமக்கு வேலைவாய்ப்பு பெருகும், பிரச்சினைகள் தீர்ந்துவிடும்" என்று வன்முறையை தூண்டும் கும்பலுக்கு இலக்காகி வருகின்றனர். ஒருவகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கடி என்பது அமெரிக்க நெருக்கடியோடும் இணைந்திருக்கிறது. அமெரிக்க இன்ஜினே உலக முதலாளித்துவ பொருளாதர ரயிலை இழுத்துவருகிறது என்பதால் அங்கே புண் எனில் இங்கே நெறி கட்டும்."**

1999ஆம் ஆண்டு முதல் ஜெர்மனி தொடர்ந்து ஏற்றுமதிகள்மூலம் உபரியை ஈட்டி வந்திருக்கிறது. இதற்கு நிகராக கிரேக்கம், ஸ்பெயின், போர்த்துக்கல் முதலான தெற்கு ஐரோப்பிய நாடுகளின் கடன்சுமை அதிகரித்துள்ளது. அமெரிக்க வீட்டுக்கடன் நெருக்கடிக்கு பிறகும் ஜெர்மனியும் உலகளாவிய முதலாளித்துவ கட்டமைப்பு நெருக்கடியில் சிக்கியிருந்தாலும் அது பிற ஏழை ஐரோப்பிய நாடுகளின் நெருக்கடியோடு தன்மையில் வேறுபட்டது.

தெற்கு ஐரோப்பிய நாடுகள்மீது சுமத்தப்பட்டிருக்கும் கடன் நெருக்கடியிலிருந்து வெளிவர உதவுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கடன்பத்திரங்களை வெளியிடலாம் என்ற திட்டத்தை ஜெர்மானிய நிதித்துறையினரும், முதலாளிகளும் எதிர்க்கின்றனர். கிரேக்கம் போன்ற நாடுகள் தமது செலவுகளைக் குறைக்கும் படியும், மக்கள் நலத் திட்டங்களை வெட்டும்படியும், வரிவிதிப்பை அதிகரிக்கும்படியும் ஆலோசனை கூறுகின்றனர். இதன்மூலம் நிதி சூதாட்டத்தின் பலன்களை அறுவடைசெய்து கொண்ட முதலாளிகள் சுமையை உழைக்கும் மக்கள்மீது சுமத்துகின்றனர்.

கிரேக்கம், ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற தெற்கு ஐரோப்பிய நாட்டு முதலாளிகளும் ஆளும்வர்க்கமும் ஜெர்மனியின் கட்டளைக்கு அடிபணிந்து தமக்குத் தேவையான நிதிக்கடன்களை பெறுவதற்கு கைமாறாக மக்கள் நலத்திட்டங்களை வெட்டியும், பொது நிறுவனங்களில் ஆட்குறைப்பு செய்தும் உழைக்கும் மக்கள்மீது கடும் சுமைகள் மேலும் மேலும் ஏற்றிவருகின்றனர். இந்நாடுகளில் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள், அரசு ஊழியர் போராட்டங்கள், மக்கள் போராட்டங்கள் வலுத்துவருகின்றன. கிரேக்க நாட்டில் [illegible]ன நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்ட[illegible]ல் பொருளாதாரம் சென்ற ஆண்டைவி[illegible] 7.5 ச[illegible]வீதம் சுருங்கியிருக்கிறது.

இருப்பினும், கிரேக்கம் போன்ற நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது எண்ணெய் சட்டியிலிருந்து தப்பி எரியும் நெருப்புக்குள் விழுவதாகவே முடியும். சுயசார்பு தொழில்துறை பொருளாதாரம் அழிக்கப்பட்டு உலகளாவிய ஏகாதிபத்திய பொருளாதாரத்தில் பிணைக்கப்பட்டுள்ள அந்நாடுகளின் பொருளாதாரங்கள் புதிய நாணயத்தை அறிமுகப்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவரும் சிக்கல்களில் மேலும் சீர்குலைவை எதிர்கொள்ள நேரிடும்.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வரும் மக்களை அமைப்பாக்கி போராடும் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகள் வலுவாக இல்லாத நிலையில் புலம்பெயர் தொழிலாளர்கள்தான் நெருக்கடிகளுக்கு காரணம் என்று இனவெறியையும், நிறவெறியையும், மதவெறியையும் தூண்டிவிடும் வலதுசாரி கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்துவருகிறது. தொழில் 'அமைதி' வேண்டும் முதலாளிகளின் ஒரு பிரிவினர் இந்த புதிய பாசிசக் கட்சிகளை நிதி கொடுத்து ஆதரிக்கின்றனர். தொழிலாளி வர்க்கம் ஒன்றுசேருவதை இனவெறி தடுக்கும் என்பதால் இந்த உதவி.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் சோசலிச முகாமுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மேற்கு ஐரோப்பாவை மாற்றுவது முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு தேவையாக இருந்தது. இராணுவரீதியாக நேட்டோ அமைப்பை ஏற்படுத்தி இராணுவ ஆதிக்கத்தை ஐரோப்பாவில் நிலை நாட்டிக் கொண்டாலும், பொருளாதார ரீதியாக மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே போட்டியை தவிர்த்து ஒன்றுபடுத்தும் தேவை ஏற்பட்டது. பின்னர் பிரெஞ்சு மற்றும் ஜெர்மனி ஏகாதிபத்தியங்களின் நலனுக்கானதாகவும் இந்த கோரிக்கை மாறிப்போனது.

இந்தச் சூழலில் 'ஐரோப்பாவில் அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்தவும் தங்களுக்குள் போரை தவிர்க்கவும்' நிலக்கரி, மற்றும் உருக்கு துறைகளில் போட்டிச் சந்தையை ஒழிப்பதற்காக பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் ஒப்பந்தம் போட்டுக் கொண்டன. இந்த அமைப்பு ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பாக வளர்ச்சி பெற்று அடுத்த 30 ஆண்டுகளில் டென்மார்க், அயர்லாந்து, யு.கே, கிரேக்கம், போர்த்துக்கல், ஸ்பெயின் போன்ற நாடுகள் அதில் இணைந்தன.

அதாவது, அமைதியும், வளர்ச்சியும் வேண்டுமென்றால் சந்தையில் நடக்கும் கழுத்துப்பிடி சண்டையை தவிர்க்க வேண்டும் என்று முதலாளிகளே ஒத்துக் கொள்கின்றனர். ஆனாலும், முதலாளித்துவத்தின் இயல்பான முரண்பாடுகள் தவிர்க்க முடியாமல் போட்டியையும், போரையும் தோற்றுவித்துவிடுகின்றன.

1989இல் பெர்லின் சுவர் தகர்க்கப்பட்ட பிறகு கிழக்கு ஜெர்மனியை மேற்கு ஜெர்மனியுடன் இணைத்து ஒன்றுபட்ட ஜெர்மனியை உருவாக்குவதற்கு நிபந்தனையாக ஐரோப்பிய பொது நாணயத்தை உருவாக்க வேண்டும் என்று பிரான்ஸ் நிபந்தனை விதித்து. கிழக்கு ஜெர்மனி மற்றும் பின்னர் முதலாளித்துவ கட்டமைப்புக்குள் கொண்டுவரப்படவிருக்கும் பிற கிழக்கு ஐரோப்பிய மற்றும் முன்னாள் சோசலிச குடியரசுகளின் பொருளாதாரத்தையும், உழைப்பையும் சுரண்டுவதற்கு பிரெஞ்சு முதலாளிகளுக்கும் சம வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம்.

மாஸ்ட்ரிச்ட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1993-ல் ஐரோப்பிய ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டது. யூரோ நாணயம் 1999-ம் ஆண்டு முதல் வர்த்தக பரிமாற்றங்களிலும், 2002 முதல் பொதுமக்களின் அன்றாட பயன்பாட்டுக்கும் அமுலுக்கு வந்தது. வளர்ந்து வந்த உலகமயமாக்கலின் அழுத்தத்தின்கீழ் 1990-களில் ஆஸ்திரியா, பின்லாந்து, ஸ்வீடன் நாடுகள் இணைக்கப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றிய கனவை முன்வைத்து, 2000 ஆண்டுகளில் சைப்ரஸ், செக், ஹங்கேரி, போலந்து, ஸ்லோவேகியா, ரொமேனியா, பல்கேரியா ஆகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் எஸ்டோனியா, லட்வியா, லித்துவேனியா ஆகிய முன்னாள் சோவியத் பால்டிக் குடியரசுகளும் மால்டா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், முதலாளித்துவ பொருள் உற்பத்தியும் வர்த்தகமும் உலகளாவிய அளவில் நடைபெற்றாலும் முதலாளித்துவ பெருநிறுவனங்கள் தத்தமது நாட்டு அரசுகளை பயன்படுத்தி தமக்கு சாதகமான அரசியல், பொருளாதார, இராணுவ நடவடிக்கைகளை எடுக்கின்றன. இந்நிலையில் முதலாளிகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளுக்கிடையேயான முரண்பாடுகள் வெடித்து வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றன.

தரமான கல்வியும் மருத்துவமும் கைக்கெட்டாத உயரத்தில், அன்றாட பொருட்கள் விலைவாசி கண்ணுக்கெட்டாத தொலைவில், சாதாரண மக்கள் கல்விக் கடனுக்காகவும், வீட்டுக் கடனுக்காகவும் துரத்தியடிக்கப்படும் போது கார்ப்பரேட்டுகளும், வங்கிகளும் பல ஆயிரம் கோடி வங்கிக் கடன்களுக்கு பட்டை நாமம் பேடுவது, தொழிலாளர் உரிமைகள் பறிப்பு, சிறுவணிகர்களுக்கு நெருக்கடி, படித்த இளைஞர்களுக்கு வேலை இல்லை என்று பொருளாதார நெருக்கடிகளால் பீடிக்கப்படும் ஐரோப்பிய மக்கள் கலவரத்தைத் தூண்டும், இனவாத, மதவாத அமைப்புகள் பக்கம் சாய்கின்றனர்.

"அதோ பக்கத்து நாட்டிலேர்ந்து வந்து இங்கு அரை வயித்து கஞ்சிக்கு உழைக்கும் கூட்டம்தான் பிரச்சனைகளுக்கு காரணம், இவனுங்களை துரத்தி விட்டுட்டா நமக்கு வேலைவாய்ப்பு பெருகும், பிரச்சினைகள் தீர்ந்துவிடும்" என்று வன்முறையை தூண்டும் கும்பலுக்கு இலக்காகி வருகின்றனர்.

ஒருவகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கடி என்பது அமெரிக்க நெருக்கடியோடும் இணைந்திருக்கிறது. அமெரிக்க இன்ஜினே உலக முதலாளித்துவ பொருளாதர ரயில்லை இழுத்துவருகிறது என்பதால் அங்கே புண் எனில் இங்கே நெறி கட்டும்.

இந்த பிரச்சினைகளுக்கு அடிப்படை காரணமான நிதித்துறை நிறுவனங்களையும், வங்கிகளையும், கார்ப்பரேட்டுகளையும் எதிர்த்து, உழைக்கும் மக்கள் சார்பாக நடத்தப்படும் போராட்டங்கள் மூலம்தான் முதலாளித்துவத்தை தூக்கி எறிந்து பெரும்பான்மை உழைக்கும் மக்களின் நலன்களை உறுதிசெய்யும் அமைப்பை உருவாக்க முடியும். அதை கம்யூனிஸ்ட் கட்சிகள் இன்றி செய்யமுடியாது.

# 200ஆவது ஆண்டில் மட்டு - மெதடிஸ்த மத்திய கல்லூரி




**கிழக்கான்**

**கிழக்கு** மாகாணத்தில் வித்தியாசமான கலக்கல் வாரமாக கடந்தவாரம் கடந்தது. அதற்குக் காரணம் கிழக்கில் கல்வித் துறையில் மிகவும் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்திய மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 200வது ஆண்டு நிறைவு விழாவின் ஆரம்ப நிகழ்வுகளே அவையாகும்.

இந்த 200ஆவது ஆண்டு விழாவினை யொட்டி பாடசாலையின் பழைய மாணவர் களினால் ஏற்பாடுசெய்யப்பட்ட வரலாற்று வாகன பவனி கடந்த 29ஆம் திகதி காலை ஆரம்பமாகி கல்முனை ஊடாக பொத்துவில் வரை சென்று திரும்பியது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை யொட்டிய நிகழ்வும் வரலாற்று ஊர்தி பவனியும் கடந்த வியாழக்கிழமை 29ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜூன் மாதம் 2ஆம்திகதி வரை கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றது. 200ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள், 29ஆம் திகதி காலை மகாத்மா காந்தி பூங்காவிலுள்ள கல்லூரி யின் ஸ்தாபகர் அருட்திரு வில்லியம் ஓல்ட் இன் சிலையருகில் ஆரம்பமாகியது.

முதல் நாள் மட்டக்களப்பிலிருந்து ஆரம்பமான வரலாற்று ஊர்தி பவனி அன்றைய தினம் இரவு திருகோணமலை வரை சென்று மறுநாள் காலை புறப்பட்டு கல்முனை வரையிலும் மறுநாள் பொத்துவில் வரையும் செல்லும்வகையில் ஏற்பாடாகி இருந்தது. செல்லும்வழியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள கூடங்களில் தரித்துச் சென்றனர்.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை யொட்டி ஜூன் மாதம் முழுவதும் விளை யாட்டுப் போட்டிகள், ஆங்கில அறிவுப் போட்டிகள், கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் எனப் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் விசேடமாக மட்டக் களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஜூன் 15ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்திலும், புனித மிக்கேல் கல்லூரி மற்றும் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்கள் பங்குகொள்ளும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி(பிக் மச்) 21ஆம் திகதி சிவானந்தா தேசியப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மெதடிஸ்த மத்திய கல்லூரி- 1814ஆம் ஆண்டு அருட்திரு வில்லியம் ஓல்ட் அவர் களால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆங்கிலப் பாடசாலை என்பதுடன் இலங்கை யிலும் முதலாவது ஆங்கிலப் பாடசாலை ஆகும். 5 மாணவர்களுடனேயே ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்போது 1500க்கு மேற்பட்ட மாணவர்களுடன் இயங்குகிறது.

அருட்தந்தை வில்லியம் ஓல்ட் இட்ட விதை இப்போது ஆலமரமான விழுது பரப்பி நிற்கின்றது என்பதற்கு இந்த வரலாற்றுப் பவனி ஒரு சான்றாக அமைந்திருந்தது.

கடல் கடந்துவந்த மெதடிஸ்த மிஷனரிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கைத் தீவின் அதிபழைமையும் பெருமையும் வாய்ந்த அறிவுச்சுடர் பரப்பும் மட். மெதடிஸ்த மத்திய கல்லூரி வண.வில்லியம் ஓல்ட் அவர்களால், ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

மிஷனரிமாரின் அயராத முயற்சிகள் காரணமாக மலர்ந்து, வளர்ந்து இன்றும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் கல்லூரிகள் பல இருக்கின்றன. இங்கிலாந்திலிருந்து பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வந்த பாதிரிமார்கள் குழு 1814ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் திகதியன்று தெற்கின் வெலிகம கடற்கரைப் பிரதேசத்தை வந்தடைந்தனர். தங்கள் நோக்கங்களுக் காக இலங்கையின் பல பாகங்களுக்கும் செல்லவேண்டும் என்றவகையில் அருட் திரு வில்லியம் ஓல்ட்க்கு மட்டக்களப்பு கிடைத்தது.

அதன்படி மீண்டும் கப்பலேறி அதே ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி தற்போது மட்டக்களப்பு நகரில் அவரது உருவச் சிலையுள்ள 'பற்றிக்கலோ கேட்' என்ற இடத்தை வந்தடைந்தார்.

மட்டு.நகர் வந்து சேர்ந்த போதகர் வில்லியம் ஓல்ட் அப்போதிருந்த கலக்டர் சைமன் சோயஸ் அவர்களின் ஒத்தாசையுடன் ஆங்கில மொழி ஆண்கள் பாடசாலையை அரச களஞ்சியசாலையில் ஆரம்பித்தார். ஆரம்ப மாணவர் தொகை ஐந்து பேராக இருந்தது.

இலங்கைக்குப் புறப்படமுன் இங்கிலாந்தில் அவர் கற்றிருந்த போர்த்துக்கேய மொழி அச்சமயத்தில் நன்கு கைகொடுத்தது. ஏனெனில் அக்காலத்தில் மட்டு.நகரில் அம்மொழி பேசுவோர் அனேகர் வசித்துவந்தனர். எனினும் ஒரு சில மாதங்களில் அவர் தமிழ் மொழி யைக் கற்றுத்தேர்ந்து அறிவுரைகள் ஆற்றும் அளவிற்கு புலமை பெற்றார்.

மட்டு.நகரில் 94 டிகிரியில் வெப்பமும் இரண்டாண்டுகளாக கடும் வறட்சியும் நிலவிய தால் போதகர் ஓல்ட் அவர்களின் தேகாரோக் கியம் பெரிதும் பாதிப்படைந்தது. இங்கே வந்து எட்டு மாதங்களில் மலேரியாவால் பீடிக்கப்பட்டு 1815 ஏப்ரலில் வில்லியம் ஓல்ட் போதகர் மரணமானார்.

அவரைத் தொடர்ந்து வண.எலிஜா ஜக்சன் இங்கிலாந்திலிருந்து வருகை தந்து வண.வில்லியம் ஓல்ட் விட்டுச்சென்ற சேவை யைக் கையேற்றுத் தொடர்ந்தார். அப்போது மாணவர் தொகை 46 ஐ எட்டியிருந்தது. தேவாலயப் பாடகர் குழுவிலும் இம்மாணவர் இடம் பெற்றிருந்தனர். கற்றல் நடவடிக்கை களோடு பொது விடயங்கள் உட்பட விளையாட்டுச் செயற்பாடுகளும் இவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. பல உள்ளூர் மாணவர்கள் இந்த ஆங்கிலக் கல்வியால் மிகுந்த பயனடைந்தனர்.

> "மெதடிஸ்த மத்திய கல்லூரி- 1814ஆம் ஆண்டு அருட்திரு வில்லியம் ஓல்ட் அவர் களால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆங்கிலப் பாடசாலை என்பதுடன் இலங்கையிலும் முதலாவது ஆங்கிலப் பாடசாலை ஆகும். 5 மாணவர்களுடனேயே ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்போது 1500க்கு மேற்பட்ட மாணவர்களுடன் இயங்குகிறது."

1877 - 1942 வரையான காலப்பகுதியில் வணக்கத்துக்குரிய திருச்சபை குருவானவர் களான ஜோர்ச் றிமர், தோமஸ் லிற்றில், ஜ.பிறவுன், ஜோசப் வெஸ்ட், ஈ.எம்.லீலர், ஜ.பி.ரப்சன், டபிள்யூ. எம்.பி.வில்கிஸ், ஜி.க.ஹரீஸ், சி.ஏ.கிரீன், அல்பேட் ஹல், ஆர்.டபிள்யூ, ஹோல்றடம், சி.ஏ.ஸ்மித், ஜேம்ஸ் காட்மன் ஆகியோர் கல்லூரியின் அதிபர்களாக சேவையாற்றியுள்ளனர்.

1886இல் தற்போது கல்லூரி அமைந் துள்ள வளாகத்தில் பெரிய மண்டபத்துடன் கூடிய கட்டடம் அமைக்கப்பட்டது.

1948ஆம் ஆண்டில் மக்களை சுதந்திரத் துக்குப்பின் கிறிஸ்தவ தலைமைத்துவத்தினை எதிர்க்கும் அளவிற்கு இலங்கை மக்களது மனப்பாங்கினை மாற்றியது. இவ் அரசியல் சமூக மாற்றங்கள் மெதடிஸ்த திருச்சபை யினால் நிர்வகிக்கப்பட்ட கல்விக் கூடங்களை பாதிக்காமலில்லை. அக்காலப் பகுதியில் இறுதி ஆங்கிலேயே அதிபராக வண. ஜேம்ஸ் காட்மன் கடமை புரிந்தார்.

அவர் விளையாட்டுத்துறைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்ததனால் அது மாணவர்களை கட்டொழுங்குபடுத்தி நல்லொழுக்கத்தினை உருவாக்க வழி கோலியது. இலங்கையைச் சேர்ந்த எஸ்.வீ.ஓ.சோமநாதர் அவர்கள் முதலாவது சுதேச அதிபராக 1942இல் கடமையேற்றார்.

1945ஆம் ஆண்டு மெதடிஸ்த மத்திய கல்லூரி மட்டும் இலவசக் கல்வித் திட்டத் தினுள் நுழையவில்லை. மட்டக்களப்பிலுள்ள ஏனைய பெரிய ஆண்கள் பாடசாலைகளான புனித மிக்கேல் கல்லூரியும் சிவாநந்தா வித்தியாலயமும் இத்திட்டத்தில் சேர்ந்து கொண்டன.

இத்திட்டம் அமுலாவதற்கு முன்பு சம்பளத்தின் ஒரு பகுதியை மானியமாக இலங்கை அரசு வழங்கியது. சம்பளத்தின் மறுபகுதியும் கல்லூரியை நடத்துவதற்கான பிற செலவுகளும் வசதிக் கட்டணத்திலிருந்து பெறப்பட்டன. 1948இல் சகல மிஷன் பாட- சாலைகளும் பாடசாலைக் கட்டணம் அறவிடு வதை நிறுத்தவேண்டும் மானியம் வழங்கப் படமாட்டாது என்ற அரச உத்தரவுக்கிணங்க அரசின் உதவியில்லாமல் தனியே கல்லூரியை நடத்த போதிய நிதியின்மையால் இலவசக் கல்வித் திட்டத்தில் கல்லூரியும் நுழைந்துகொண்டது.

அப்போதிருந்த மேன்மைதங்கிய தேசாதிபதி சேர் ஹென்றி மூர் அவர்கள் கல்லூரிக்கு விஜயம்செய்து கல்லூரியின் பொது அமைப்பினையும் நிர்வாகத்தையும் பற்றிய தெளிவான கருத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

35 வருடகால தனது நீண்டகால சேவை யினைப் பூர்த்தி செய்த அதிபர் சோமநாதர் இளைப்பாறினார். அவரைத் தொடர்ந்து அதிபராக வீ.ரீ.ஞானசூரியம் 01.01.1956 கடமையேற்றார். 1960ஆம் காலப்பகுதியில் பாரிய கல்வி மாற்றங்கள் நடைபெற்றன. பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் சட்டமூலம் நிறைவேறியது. மெதடிஸ்த திருச்சபையால் நிருவாகம் செய்யப்பட்ட கல்லூரியானது அரசாங்கப் பாடசாலையாக மாறியது.

இக்காலத்தில் மெதடிஸ்த திருச்சபை 177 கல்வி நிலையங்களை சாதி, சமய வேறுபாடின்றி நிருவகித்தது. மெதடிஸ்த திருச்சபையும் நாட்டில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு கொழும்பு மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வெஸ்லி கல்லூரி தவிர நமது கல்லூரி உட்பட எல்லாப் பாடசாலைகளையும் அரசுக்குக் கையளித்தது.

மெதடிஸ்த மத்திய கல்லூரியை அரசு பொறுப்பேற்கும்போது அதிபர், உபஅதிபர் உட்பட 15 நிரந்தர ஆசிரியர்களும் 400 மாணவர்களும் இருந்தனர். பல சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய கல்வி முறையொன்று ஆயத்தப்படுத்தப்பட்ட இக் காலத்தில் வீ.ரி.ஞானசூரியம் அதிபராகவும் பி.ஜி.காசிநாதர் உப அதிபராகவும் கடமையாற்றினர். பல புதிய தாக்கங்களை கல்லூரி எதிர்நோக்கி நின்ற அறுபதாம் தொடர் ஆண்டுகளில் கல்விச் சூழ்நிலை மாற்றத்திற்குள்ளாகியது.

1964இல் பி.ரி.சின்னையா அதிபராகச் சேவையைத் தொடர்ந்தார். 1966 -1968 ஆம் காலப்பகுதியில் கல்வித் திட்டத்தின்மூலம் தமிழ் போதனா மொழியாக அந்தஸ்து பெற்றது. ஒழுங்குமுறையான கல்வித் திட்டத்தில் நூலகத்தின் தேவை உணரப் பட்டது. நூலகத்திற்கு வசதியான இடம், அலுமாரிகள், படிப்பகங்கள், அறிவியல் தொடர்பான சஞ்சிகைகள் வழங்கப்பட்டன.

1975ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்லூரி வரப்பிரசாதம் பெற்ற காலமாகும். ஏனெனில், கடந்த கால்நூற்றாண்டு காலம் ஆசிரியப் பணி புரிந்தவரும் கல்லூரி பழைய மாணவரும் கல்லூரியின் நீண்டகாலப் பாரம்பரியங்களையும் சம்பிரதாயங்களையும் நன்கு அறிந்தவரும் கற்ற தலைமுறையினரை நன்கு அறிந்தவருமான பிறின்ஸ் காசிந- ாதர் அதிபராக நியமனம் பெற்றார். உப அதிபராக எஸ்.ரி.ஆனல்ட் பதவியேற்றார்.

1978இல் மட்டு. நகரில் வீசிய சூறாவளி யின் தாக்கத்தினால் கல்லூரியின் கட்டிடங் களும் பாதிப்படைந்தன. அப்போதைய கல்விப் பணிப்பாளரின் பெருமுயற்சியினால் புனரமைக்கப்பட்டு மீண்டும் புதுப்பொலிவு பெற்றன. கல்லூரியின் வரலாற்று ஏடுகள், படங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்தன.

மாணவர் தொகை கணிசமான அளவு அதிகரிக்கத் தொடங்கியது. மாணவனின் அறிவு அபிவிருத்தி அடைந்துவரும் அதே வேளையில் அதனோடு அன்பு, பரஸ்பர அந்நியோந்நியம் ஆகிய மனித நற்பண்புகளும் அதே துரிதகதியில் அபிவிருத்தி அடையவேண்டும் என்று அயராது அதிபரும் ஆசிரியர் குழாமும் உழைத்ததன் பலாபலன் சமூகத்திற்குக் கிடைத்தது.

கல்லூரியின் நீண்டகால வரலாற்றிற்கு உரித்துடையவரும் தொடர்ந்து 26 வருடங்கள் ஆசிரியர், உப அதிபராகவும் 11 வருடங்கள் அதிபராகவும் பெறுமதி மிக்க சேவையாற்றிய பிறின்ஸ் காசிநாதர் 21.07.86 இல் ஓய்வுபெற்றார். பிற் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். முன்னாள் உபஅதிபராகத் திகழ்ந்த ஏ.ஏ.அருளன்னராஜா புதிய அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவரின் பதவிக் காலத்திலும் பல கல்விச் சாதனைகளும் விளையாட்டுச் சாதனைகளும் ஈட்டப்பட்டன. 1988இல் ஆண்டு க.பொ.த விஞ்ஞானப் பிரிவில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதி கூடிய புள்ளியைப் பெற்று வைத்திய துறைக்குத் மாணவர் தெரிவுசெய்யப் பட்டது இவரது காலத்திலேயேயாகும். இவரது காலத்திலே நவீன விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் நிரந்தர நிருவாகக் கட்டடம் என்பன அமையப்பெற்றன.


தொடர்ந்து கே.ஜி.அருளானந்தம் அதிபராகக் கடமையேற்றார். கல்வித் துறை சாதனைகள், விளையாட்டுத்துறை சாதனைகள் விரிவாக்கப்பட்டன. தலை, சிறந்த 1ஏபி பாடசாலைகள் வரிசையில் மெதடிஸ்த மத்திய கல்லூரியும் இடம்பெற்றது.

பௌதீக வள அபிவிருத்தியில் குறிப் பாக நவீனமுறையிலும் அழகிய வேலைப் பாடுகளுடன் கூடிய ஒன்று கூடல் மண்டபமும் அதனோடு மேல் இருமாடியில் அமையப்பெற்ற வகுப்பறை மண்டபங்களும் ஒரு கட்டிடத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. வெபர் விளையாட்டு அரங்கின் முன்பாக புதுப்பொலிவுடன் கல்லூரி காட்சி தந்து பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

இலக்கிய மன்றங்களும் சமூகசேவைக் கழகங்களும் மாணவர் மத்தியில் உரு வாக்கப்பட்டன. கல்லூரி வரலாற்றில் காலத்திற்குக் காலம் ஜெயகேசரி, இளைஞன், யுவன், பரணி, விஞ்ஞானி, செம்மை ஆகிய சஞ்சிகைகளும் வெளி யாகியுள்ளன. குறிப்பாக கல்லூரியின் பெயர்கூறும் சஞ்சிகைகளாக 1946இல் சென்றலைட், 1989இல் மத்திய தீபம் என்பன வெளியிடப்பட்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளன.

முப்பது வருடங்களுக்கு மேலாக கல்லூரியோடு தொடர்புபட்ட ஐ.கமல ராஜா 2007 முதல் 2014 வரை அதிபரா கக் கடமையாற்றி கல்லூரியின் பல முன்னேற்றங்களுக்கு பணியாற்றினார். தற்போதைய நிலையில் சிறந்த பலமான நிருவாகத்தினையும் கல்வி நடவடிக்கை களையும் உயர்நிலையில் பேணக்கூடிய ஒருவரே அதிபராக நியமிக்கப்பட வேண்டும் என்பது பெற்றோர், நலன்விரும்பிகளது விருப்பமாகும்.

கலாசார சீரழிவை தடுக்கவேண்டுமா?



**குடிபோதை** மயக்கத்தை அனுபவித்தவர்கள் அதில் இருந்து மீளமுடியாமல் மீண்டும் மீண்டும் குடியைப் பற்றியே சிந்திப்பதுபோல் சிலர் செக்ஸ் அடிமைகளாக இருப்பது உண்டு. இந்த அடிமைத்தனம் காரணமாக எந்தநேரமும் அதைப்பற்றியே சிந்தித்தல், அன்றாட சொந்த வேலைகளைக்கூட செய்ய முடியாமல் சிரமப்படுதல் போன்றவை ஏற்படலாம். அது ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது. ஆண்களுக்கு இந்த குறைபாடு அதிகரிக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் உறவுகொள்ளுதல், ஒரே நேரத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட பெண்களுடன் உறவு கொள்ளுதல், ஆண் ஆணுடன் உறவு கொள்ளுதல் போன்ற நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

இந்த நிலையில் மேலும் பல கலாசார சீரழிவுக்கான செயல்களில் ஈடுபடுவதைக் காணமுடியும். கீழ்க்கண்ட செயற்பாடுகளைக் காணநேர்ந்தால், அது செக்ஸ் அடிமை என்ற நிலை என்பதை உறுதி செய்யமுடியும்.

அடிக்கடி சுயஇன்பம் காணுதல், பல்வேறு உறவுகள், எப்போதும் செக்ஸ் படங்கள் பார்த்தல், போன் செக்ஸ் அல்லது கம்பியூட்டர் செக்ஸ், எக்ஸிபிஸனிசம் எனப்படும் அடுத்தவர்களிடம் தன் உறுப்பைக் காட்டுவதில் ஆனந்தம் அடைதல், செக்ஸ் துன்புறுத்தல், கற்பழித்தல், அதிக பார்ட்னர்களை விரும்புதல்.

இதுபோன்ற குறைபாடுகள் இருந்தால், உடனடியாகப் போதிய சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம். இல்லையெனில் உடல்நலம், பணம், சமுதாயச் சிக்கல் ஏற்படுவது மட்டுமின்றி, காவல்துறை நடவடிக்கையிலும் சிக்கிக் கொள்ள நேரிடலாம். அதனால் குடும்ப உறவு சீரழிந்து கணவன் - மனைவி உறவு கெட்டுப்போகலாம். தம்பதிகளுக்குள் இருவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவு உறவு் கொள்வது மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடியது. இதை மருத்துவச் சிகிச்சை, கவுன்சலிங், மருந்துகள் கொடுப்பதன்மூலம் தீர்த்துக்கொள்ள முடியும்.

பொதுவாக சிலருக்கு செக்ஸ் உணர்வு மிக குறைவாக அல்லது இல்லாத நிலையும், சிலருக்கு மிக அதிகமாகவும் இருக்கும். ஆணுக்கு செக்ஸ் உணர்வு அதிகமாக உள்ள நிலையை சேட்டிரியாஸிஸ் (satyriasis) என்று சொல்வார்கள். பெண்ணுக்கு செக்ஸ் உணர்வு அதிகமாக இருந்தால் நிம்போமேனியா (nymphomania) என்று சொல்லுவார்கள்.

இந்த குறைபாட்டால்தான் எய்ட்ஸ் போன்ற நோய்கள் பரவி மக்களைப் பயமுறுத்துகின்றன. எப்படியாயினும் அதிக முறை உறவு அனுபவிக்க விரும்புபவரை செக்ஸ் அடிமை என்று சொல்லிவிடக்கூடாது, செக்ஸில் தவறான அணுகுமுறையைக் கடைப்பிடித்து எந்த நேரமும் அதே சிந்தனையில் இருப்பவர்களுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கவேண்டும்.

## சிறுநீரக பிரச்சினையின் ஆரம்ப அறிகுறிகள்



சிறுநீரக வியாதிகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால் அவற்றை குணப்படுத்துவதும் அல்லது கட்டுப்படுத்துவதும் மிக எளிது. நாட்பட்ட சிறுநீரகம் செயலிழப்பு அல்லது கோளாறு என்பது சிறுநீரகமானது உடலின் கழிவுப்பொருட்களை வெளியேற்றும் தன்மை, அடர் கரைசலான சிறுநீரினை வெளியேற்றும் தன்மை மற்றும் உடலில் உள்ள தனிமப்பொருட்கள் சிறுநீரில் வெளியேறாமல் தடுத்து பாதுகாக்கும் தன்மை போன்றவற்றை படிப்படியாக இழந்து, செயலற்ற தன்மை அதிகரிப்பதாகும்

### ஆரம்ப நிலையில் ஏற்படும் அறிகுறிகள்

உடல் எடை இழப்பு, குமட்டல் வாந்தி, பொதுவான உடல்நலக்குறைவு, சோர்வு, தலை வலி, அடிக்கடி ஏற்படும் விக்கல், உடல் முழுக்க ஏற்படும் அரிப்பு.

### சிறுநீரகம் பாதிப்பிற்குள்ளாகும் போது ஏற்படும் அறிகுறிகள்

வெளியேற்றப்படும் சிறுநீரின் அளவு கூடுவது அல்லது குறைவது, இரவுநேரத்தில் சிறுநீர் கழிப்பது, சுலபமாக காயம் ஏற்படுதல் அல்லது இரத்தம் வடிதல், வாந்தியில் அல்லது மலத்தில் இரத்தம் காணப்படுதல், மந்தமான தூங்கிவிழுகிற நிலைமை, சுறுசுறுப்பின்மை, குழப்பம், சித்தபிரமை, நினைவற்ற நிலை, தசைப்துடிப்பு அல்லது தசை இழுப்பு, தோலில் வெள்ளைநிற படிகங்கள், கைகள் பாதங்கள் மற்றும் பிற பகுதிகளில் உணர்வுத்திறன் குறைதல் நோயுடன் தொடர்புடைய மற்ற கூடுதல் அறிகுறிகளாவன:

அதிகளவில் இரவுநேரங்களில் சிறுநீர் கழித்தல், அதிக தாகம் ஏற்படுதல், தோல் நிறம் வெளிர்ந்து காணப்படுதல், நகங்கள் ஒழுங்கின்றி காணப்படுதல், சுவாசம் நாற்றம் எடுத்தல், உயர் இரத்த அழுத்தம், பசியின்மை.

## இயற்கை தரும் மருத்துவக் குறிப்புகள்



**தேன்:** சக்தியை கொடுக்கும். இதயத்தை பலப்படுத்தும். இருமலை குணப்படுத்தும். ஹிமோகுளோபினை அதிகப்படுத்தும்.

**வெந்தயம்:** இரத்தத்தில் உள்ள சீனியையும். சிறுநீரில் உள்ள சீனியையும் குணமாக்கும்.

**துளசி:** தினமும் துளசி சாப்பிட்டு வந்தால் இரத்தத்திலுள்ள விஷத்தன்மையை வெளியேற்றி சுத்தம் செய்கிறது.

**பூண்டு:** வயிற்றில் உண்டாக்கும் வாயு கோளாறுகள் அனைத்தையும் போக்கும் தன்மை கொண்டது.

**இளநீர்:** உடலில் உள்ள வெப்பத்தை தணிக்கும். கொலரா. சின்னம்மை. பெரியம்மை போன்ற நோய்களுக்கு சிறந்த பானம்.

**வெண்ணெய்:** வாய் மற்றும் வயிற்று புண்களை குணப்படுத்தும்.

**மிளகு :** ரத்த குழாய்களில் படியும் கொழுப்பை கரைக்கும் தன்மை மிளகுக்கு உண்டு.

**சோம்பு:** இது செரிமானத்தை துரிதப் படுத்துகிறது.

**காளான்:** தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்றுநோய் தடுக்கப்படுகிறது. இரத்தம் சுத்தமடைகிறது.


**சிவப்பு முள்ளங்கி:** வயிற்றுப் புண்ணை அகற்றும். மஞ்சள்காமாலைக்கு மிகவும் சிறந்த மருந்து.

**வாழைத்தண்டு:** சிறுநீரகத்தில் தோன்றும் கற்களை கரைக்கும். உடல் பருமனை குறைக்கும். நீரிழிவை கட்டுப்படுத்தும்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு
நாளிதழ்
ரூ.10/=
மட்டுமே
A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!
இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்
✦ உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
✦ உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
✦ கனதிமிக்க கட்டுரைகள்
✦ தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
✦ சினிமா
✦ நாள் ராசி பலன்
✦ வேலைவாய்ப்புத் தகவல்கள்
✦ மருத்துவக் குறிப்புகள்
✦ பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"
வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்
வடபுலத்தான் எழுதுவது...



# சோதிடம்



**அக்கா** பற்றிய அந்த அதிர்ச்சித் தகவலை மாமாவிடம் சொல்லவேண்டும். எப்படிச் சொல்வேன்? கேட்ட அந்தக் கணத்திலிருந்து உள்ளே நொறுங்கிக் கிடக்கிறேன். ஆனாலும் சொல்லித்தான் ஆகவேண்டும். கனத்த மனசுடன் அக்கா வின் ஊருக்குப் பஸ் ஏறினேன். நான் போனபோது அக்கா மாத்திரை போட்டுக்கொண்டு படுத்திருந்தாள். கொஞ்சநாளாகவே கடுமையான வயிற்று வலியாம். இப்போது உதிரப்போக்கு கண்டிருக்கிறது என்று சொன்னாள். உபரி யாய் ப்ரஷரும் படுத்தியெடுக்கிறது.

அக்காவுக்கு எழுத்தர் பணி. மாமா ஆசிரியர். பி.ஜி.அசிஸ்டெண்ட். அவருக்கு நீரிழிவு. இரத்தத்தில் சீனி யின் அளவு பி.பி.330 மி.கி. குறைப் பதற்காக மாத்திரைகள், டயட்டிங், வாக்கிங், யோகா என்று போராடிக் கொண்டிருக்கிறார். ஆனால் குறையவேயில்லை.

அக்காவிடம் கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, மா-மாவைத் தேடிக்கொண்டு பின்பக்கம் சென்றேன். தோட்டத் தில் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார். அவரைக்கொடி சடைசடையாய்க் காய் பிடித்திருந்தது. கோடியில் பலாமரம் நாலைந்து பிஞ்சுகள் விட்டிருந்தது.

"வா... வா... என்னாப்பா? வீட்ல எல்லாரும் சௌக்கியமா?"

"உம்.."

"சரீ... பையன் ஜாதகத்தை அனுப்பி வெச்சேனே கிடைச்சுதா? புரபசர் என்ன சொல்றார்? ஜெகனுக்குக் கல்யாண ப்ராப்தம் வந்துட்டுதாமா? பொண்ணு எந்தப் பக்கம் அமையுமாம்?"

மௌனம் சாதித்தேன். வாயைத் திறந்தால் அழுகை வந்துவிடும் நிலை. எப்படிச் சொல்லப் போகிறேனோ? அக்காவின் பையன் ஜெகன் சொ.'.ப்ட்வேர் என்ஜினீயர். கொழும்பில் வேலை செய்கிறான். அவனுக்குக் கல்யாண வேளை வந்து விட்டதா? என்று சோதிடம் கேட்கப்போய் தான் இந்தச் செய்தியை தாங்கிக்கொண்டு வந்து நிற்கிறேன். நாங்கள் போய் சீமெந்து திண்ணையில் உட்கார்ந்தோம்.

"என்னப்பா பேசமாட்டேன்ற?"

பேச்சு வரவில்லை. அழும் கட்டத்திற்கு வந்துவிட்டேன். கண் விளிம்பில் நீர் கோர்க்க ஆரம்பித்துவிட்டது. மாமா கவனித்துவிட்டார்.

"என்ன... என்னப்பா? சொல்லு"

"ஜெகனுக்கு இப்ப நேரம் சரியில்லையாம்."

"சரி வுட்ருவோம். மேலைக்குப் பார்த்தாப் போச்சு"

"அதில்லை. இன்னும் நாலு மாசத்தில ராகு கேது பெயர்ச்சி இருக்காம்"

"சரி"

"அதுக்குள்ளே கொள்ளி போட வேண்டிய விதி இருக்காம் ஜெகனுக்கு"

சொல்லும்போதே விசும்ப ஆரம்பித்து விட்டேன். மாமா ஒரு நிமிடம் விளங்காமல் திகைத்து நின்றுவிட்டார்.

"யாராம்?"

"அக்..கா.. தா"

மேலே பேசமுடியாமல் அழுகை வெடிக்க, அந்த நேரம் எங்களைத் தேடிக் கொண்டு அக்கா வந்துவிட, நான் எழுந்தோடிப் போய் பாத்ரூமுக்குள் நுழைந்து வெளியில் வந்தேன். அக்காவும், மாமாவும் போய் விட்டிருந்தனர். எதுவும் இல்லைபோல் உள்ளே நுழைந்து சிறிதுநேரம் பேசிவிட்டு, அக்கா சொல்லச் சொல்லக் கிளம்பிவிட்டேன். இங்கேயிருந்தால் முகத்தைப் பார்த்தே அக்கா விஷயத்தை என்னிடம் கறந்து விடுவாள். ஒரு கட்டத்துக்கு மேல் என்னாலும் மறைக்க முடியாது.

கிளம்பி வெளியே வந்தபோது மாமா நெருங்கி வந்து இரகசியக் குரலில், "நாலு மாசத்துக்குள்ளேன்னா சொன்னாரு?" என்றார்.

"ம்"

"உன் அக்காகிட்டே மூச்சுவிடாதே. ஏன் ஒருத்தர்கிட்டேயும் சொல்லக்கூடாது.. இரகசியம்." சொல்லும்போதே கண் கலங்கினார். உடனே சுதாரித்துக்கொண்டு, "சரிப்பா, விதிக்கு என்ன பண்ண முடியும்? பையன் கல்யாணத்தைச் சுருக்கா முடிக்கணும். அந்தப் பொண்ணையே முடிச்சிடலாம்ப்பா. வேற யோசனை - வேண்டாம். ஜாதகப் பொருத்தம் நல்லா இருக்கு. நல்ல குடும்பம். சட்டுபுட்டுன்னு முடிக்கணும்"

"சரி, சில விஷயங்களை சீக்கிரமே செட்டில் பண்ணணும். பேங்க் டெபோசிட் களைப் பேர் மாற்றம் செய்தாகணும். புரபஸர் சொல்றதுதான்.

எனக்கு ஏமாற்றமாக இருந்தது. தன் மனைவியின் மரணம் பற்றிய செய்திக்கு இவருடைய பாதிப்பு இவ்வளவுதானா? இருபத்தேழு வருஷங்கள் ஒன்றாய் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் மனைவி யின் பிரிவுக்கு அவர் துடிக்கவில்லை. என்ன மனுஷன் இவரு? பணம் மட்டுமே குறியாய் எல்லா டெபோசிட்களையும் தன் பெயருக்கு மாற்றிவிடப் பறக்கிறார் பார்.

நான் உள்ளுக்குள் அழுதுகொண்டு இருக்கிறேன். உடன்பிறப்பு. துக்கத்தை வீட்டில் யாரிடமும் பகிர்ந்துகொள்ள முடியாது. உடனே ஒப்பாரி வைத்து ஊருக்குத் தெரியும்படி செய்துவிடுவார்கள். அப்புறம் அது அக்காவின் காதுகளுக்குப் போய்ச் சேரும் அபாயம் இருக்கிறது. ஐயோ! அக்கா! உன்னை முழுசாய் நாங்கள் இழந்துவிடுவோமோ? அக்கா...

மாமாவின் அண்ணன் மகள் வனிதாவை டாக்டருக்குப் படிக்க வைக்க ரொம்பவும் ஆசைப்பட்டார்கள். ரொம்பவும் பிரயத்தனப் பட்டார்கள். வனிதாவும் நன்றாகப் படிப்பாள். "இல்லை, இவளுக்கு ஆசிரியர் தொழில்" என்று நாகராஜ் சேர் சோதிடம் சொல்லி யிருந்தார். கடைசியில் அதுதான் நடந்தது. வனிதா பி.எஸ்சி., பி.எட்.!

அடுத்ததாக அக்காவின் பையன் ஜெகனை எப்படியும் டாக்டராக ஆக்கிவிடுவது என்று கங்கணம் கட்டினார்கள். நம் பரம்பரைக்கு ஒரு டாக்டராவது இருக்கவேண்டும் என்பது கனவு. 'இவன் என்ஜினியர்' என்றார் நாகராஜ்.

என்னுடைய மகள் தாரணி பத்தாம் வகுப்பு படிக்கும்போதே "இவள்தான்யா டாக்டர்" என்றார் நாகராஜ் சேர். தற்போது மூன்றாம் வருஷம் படித்துவருகிறாள். கெட்ட விஷயங்களிலும் அவர் கணிப்புகள் சரியாக இருந்திருக்கின்றன. மாமாவின் அண்ணன் மகள் வனிதாவை வசதியான இடத்தில் திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள்.

அவள் ஜாதகத்தைப் பார்த்த நாகராஜ் சேர், "வருத்தமாய் இருக்கிறது. இது நஷ்ட ஜாதகம். இவள் விதவை ஆவாள் என்று எங்களிடம் மட்டும் இரகசியமாகச் சொன்னார். எண்ணி ஆறு மாசத்திற்குள் அது நடந்து விட்டது. மாப்பிள்ளைக்கு முப்பத்து மூணு வயசிலேயே மாசிவ் ஹார்ட் அட்டாக். போய்விட்டார். எல்லாரும் நிலைகுலைந்து போய்விட்டோம். அவளுக்கு மறுமணம் உண்டு. உடனே ஓர் ஆண் குழந்தை பிறக்கும் என்றார். மூன்று வருடங்களுக்குள் இரண்டுமே நடந்து முடிந்துவிட்டன.

அந்தப் பேராசிரியர்தான் இப்போது என் அக்காவின் விதி பற்றி சோதிடம் சொல்லி இருக்கிறார். நாங்கள் அழாமல் என்னசெய்ய? அந்த வாரக் கடைசியில் மாமா, வீட்டின் பின்புற விசாலமான காலி மனையில் வீடுகட்ட பூமி பூஜை போடப் போவதாக வனிதா மூலம் எனக்குத் தகவல் அனுப்பியிருந்தார். அவர் வேகமான செயற்திட்டத்தில் இறங்கிவிட்டது தெரி கிறது. நாங்கள் போயிருந்தோம். ஜெகன்கூட வந்திருந்தான். முன்னைக்குஇப்போதுசதை போட்டிருந்தான். லேசாக தொப்பை விட்டிருக்கிறது. ஒரு ரெண்டு மாசத்திற்கு முன்னால் அக்காவின் பெயரில் வீடு கட்ட கவர்மெண்ட் லோன் அப்ளை பண்ணியிருந்தாள். எனக்குத் தெரியும்.

அடுத்த வருஷக் கடைசியில்தான் லோன்சேங்ஷன் ஆகும் என்று சொல்லிக் கொண்டிருந் தாள். ஆனால் இப்போது மாமா அவசர அடியாக உள்ளே நுழைந்து அங்கங்கே கையூட்டுகளை இறைத்து லோன் வாங்கி வந்து விட்டாராம். வனிதா சொன்னாள். அக்கா போனில் புலம்பித் தள்ளுகிறாள்.

"சொன்னா கேக்க மாட்டேன்றார்டா. வீட்டைச் சீக்கிரம் கட்டி முடிக்கணுமாம். ரெண்டு மாசம் லீவு போட்டுட்டு சுத்தறார்டா. அப்படி என்ன அவசரம்? இருக்கிற வீட்டுக்கு என்னா கேடு? நீரிழிவு அதிகமாகி அப்பப்ப மயக்கம் வந்து படுத்துக்கிறார். எதுக்கு இப்ப? கேட்டா அடிக்க வர்றார்."

அக்கா கண்ணை கசக்குகிறாள். இன்றைக்கு ஒபிஸ் வேலையாக போயிருந்தேன். அப்படியே அக்கா வீட்டிற்குச் சென்றேன். அக்கா சோர்வுடன் உட்கார்ந்திருந்தாள். உதடுகள், முகம் எல்லாம் இரத்தச்சோகை யில் வெளுத்துப்போய் உட்கார்ந்திருந்தாள்.

மேல்மூச்சு இரைக்கிறது. மாமா இதுபற்றியெல்லாம் சிந்தனையின்றி செங்கல், சீமெந்து, இரும்பு, ஜல்லி என்று சீரியஸாக கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார். அக்கா வின் விதி பற்றி தெரிந்திருந்தும் இவ்வளவு அலட்சியப்போக்கு என்றால், அவருடைய நோக்கம் எனக்குப்புரிகிறது.அக்காவின் சாவை வைத்து எப்படியெப்படி பணம் பண்ணலாம். இதுதான் நோக்கம். இந்த சாவுமூலம் வாங்குகிற வீட்டுக்கடன் முழுசாய்த் தள்ளுபடியாகிவிடும். வீடு நிகரமாய்க் கைக்கு வந்துவிடும்.இன்ஷூரன்ஸ் தொகை நாலு லட்சம் கிடைக்கும். எனக்கு ஆத்திரமாயிருந்தது.

"மாமா, எங்கக்காவுக்கு எவ்வளவு நாளா ப்ளீடிங் போய்க்கிட்டிருக்கு? என்னா கவனிச்சீங்க? எங்காவது பெரிய ஹொஸ் பிடலுக்கு கூட்டிப் போயி வைத்தியம் பார்க்கிறதை வுட்டுட்டு உள்ளூர்ல சுரைக்கா வைத்தியம் பண்ணிக் கிட்டிருக்கீங்களே. வாணாம் வுட்ருங்க. நான் கூட்டிப் போயி வைத்தியம் பார்த்து, சொஸ்தமானப்புறம் அனுப்பிவைக்கிறேன்."

பொரிந்து தள்ளிவிட்டேன். அவர் கோபிக்கவில்லை.

"உனக்குத் தெரியாதுப்பா, பத்து நாளா பெரிய ஹொஸ்பிட்டல்ல தான் பார்த்துக்கிட்டு வர்றோம். இப்ப பரவாயில்லை. கருப்பையை எடுக்கணு மோன்னு பயந்தோம். வேண்டாமாம். மருந்து மாத்திரைகளிலேயே சரியாகி விடுமாம்" சொல்லிவிட்டு அவசரமாக பாக்கெட்டிலிருந்து ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டு விழுங்கினார்.

"என்னது மாமா?"

"கொம்போஸ் மாத்திரை. கொஞ்சநாளா ரொம்ப படப்படப்பா இருக்கப்பா"

சோதிடம் கேட்டுக்கொண்டு வந்து நாலு மாதம் முடியப் போகுது. ப்ரஷர் மட்டும் குறையவில்லை. கூடியிருக்கிறது. அதுதான் டேஞ்சர். வீட்டு வேலை சற்றேறக்குறைய முடிந்துவிட்டது. மொத்தம் ஆயிரத்து ஐந்நூறு சதுர அடி கட்டடம். மார்பிள் தரை. கதவு, ஜன்னல்கள் எல்லாம் வேங்கை மரம். ஒயரிங், ப்ளம்பிங் எல்லாம் ஓவர். அப்பப்பா! என்ன வேகம்? மூணு மாசத்தில் வீட்டையை முடிச்சிட்டாரே மாமா!

கிரகப் பிரவேசத்தையும், ஜெகனின் திருமண நிச்சயதார்த்தத்தையும் ஒன்றாய் வைத்துவிட்ட செய்தியைச் சொல்லும் அழைப்பிதழுடன் மாமா வீட்டுக்கு வந்தபோது, நாகராஜ் சொன்ன நாலுமாதக் கெடுமுடிந்து பத்து நாட்கள் ஆகிவிட்டிருந்தன. உள்ளூர எனக்குப் பயம் குறைந்திருந்தது. மாமா மட்டும் இன்னும் சற்று படபடப்பாகவே இருந்தார். இருவரும் தெருத்திண்ணையில் போய் உட்கார்ந்தோம்.

என் மனைவியும் அம்மாவும் சமையற் கட்டில் பிஸியாக இருந்தார்கள். வந்திருக்கும் மாப்பிள்ளைக்கு விருந்து தயாராகிறது.

"கண்டம் தாண்டிப் போச்சு மாமா" குதூகலத்துடன் சொன்னேன்.

"ஆமாம்பா... ஆனா ஒரு ரெண்டுமாசம் போனாத்தான் கியாரண்டியாச்சொல்லலாம்"

"இல்ல மாமா, ராகு, கேது பெயர்ச்சி நடந்துபோச்சி இல்ல? இனிமே பலப்படாது. நல்லவேளை அக்காவுக்கு வந்த கண்டத்தப் பத்தி இங்க வீட்ல யார்கிட்டேயும் மூச்சிவிடல"

மாமா புரியாத மாதிரி பார்த்தார். "என்னது அக்காவுக்குக் கண்டம்?"

நாகராஜ் சேர் சொன்னதைச்சொன்னேன். "ஜெகன் நாலு மாசத்துக் குள்ளே தன் அம்மாவுக்குக் கொள்ளி வைப்பான்..."

"டேய்... டேய்... என்ன என்ன சொன்ன அப்படியா சொன்ன நீ? உன் அக்கா தாலி அறுப்பாள்ன்னு... அப்படித்தானே சொன்னே நீ"

"மாமா...மாமா... இல்ல மாமா இல்ல. அப்படி நெனைச்சிட்டியா நீ? மாமா"


மாமா தலையைப் பிடித்துக் கொண்டார். உஸ்... உஸ்.... என்று வாயில் பெருமூச்சுவிட்டார். அவர் தோளில் ஆதர வாகக் கைவைத்தேன். என் கையைப் பற்றிக்கொண்டார்.

"அவளைத் தனியா வுட்டுட்டுப் போயிடறமேன்னு இராத்திரியெல்லாம் அழுதிருக்கேன். எல்லாத்தையும் அவ பேருக்கு மாத்தி, வீட்டு லோனைக்கூட எம் பேருக்கு மாத்திக்கிட்டு, அவசர அவசரமா வீட்டைக் கட்டி... எப்பப்பா... எம்மாம் டென்ஷன்?"

மாமா முகத்தைப் பொத்திக்கொண்டார். இந்த நாலு மாசமாக உள்ளே அடைத்து வைத்திருந்த துக்கத்தின் இறுக்கம் நெக்கு விட குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தார்.

அந்த அப்பழுக்கில்லாத நல்ல மனிதரைத் தப்பா நினைத்ததற்கும், முதல்முறையாகப் பொய்த்துப் போய்விட்ட நாகராஜ் சேரின் ஜோசியத்திற்காகவும் நானும் அழுதேன்.



# காசு கொடுத்து வாங்கிய மரணதண்டனை!

2005ஆம் ஆண்டு சுவீடன் நாட்டு இளம்பெண் ஒருவர் கொழும்பில் வைத்து கொலைசெய்யப்பட்டார். இக்கொலையுடன் தொடர்புடைய இளைஞனைப் பொலிசார் உடனே கைது செய்துவிட்டார்கள். குற்றவாளியும் குற்றத்தை ஒப்புக்கொள்ள அவருக்கு 12 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் இச்சிறைத்தண்டனை அதிகூடியதாக இருப்பதாகவும், அதனை குறைக்கவேண்டும் என்று குற்றவாளி தரப்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது. ஆனால் மேன்முறையீட்டை விசாரித்த நீதிபதி, குற்றவாளிக்கு மரண தண்டனையை வழங்கியுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது. தண்டனைக் காலத்தை குறைக்கப்போய், அது உயிருக்கே உலையாக மாறியிருக்கின்றது.

மொடல் அழகியாக சில நிறுவனங்களில் கடமை புரிந்த ஜெவ்னி ஜோன்ஸ்சனுக்கு அப்போது 19 வயதுதான். கொழும்பில் பிரபலமான மற்றும் ஆடம்பரமான ஒரு தொடர்மாடி குடியிருப்பில் அவர் தனது பெற்றோருடன் வசித்து வந்தார். அவரது தாயார் ஒரு இலங்கையர் மற்றும் தகப்பன் ஒரு சுவீடன் நாட்டவர். ஜென்வி ஜோன்ஸ்சன் டிசைன் தொழிலை கற்றுக்கொள்ளவே இலங்கை வந்திருந்தார். அவரது இளைய சகோதரிக்கு(17) ஒரு பெரும்பாண்மை இனத்தை சேர்ந்த இளைஞர் காதலனாக இருந்துள்ளார். சம்பவ தினத்தன்று தனது தங்கையின் காதலனுடன் ஜெவ்னி களியாட்ட விடுதிக்குச் சென்றுள்ளார். கடும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகியிருந்த இந்த குறித்த இளைஞனுடன் அவர் வீட்டுக்கு திரும்பியுள்ளார். அன்றைய தினம் இரவு ஏற்பட்ட வாக்குவாதத்தில் குறித்த இளைஞர் ஜெவ்னியை மாடிப் படியில் இருந்து தள்ளிவிட்டுள்ளார்.

முகக்குப்புறமாக விழுந்து அடிபட்ட அவரை, தனது ஜீன்ஸை கழற்றி கழுத்தில் போட்டு இறுக்கியுள்ளார். தலையில் அடிபட்டு இரத்தக் கசிவுகாரணமாக ஜெவ்னி துடிதுடித்து இறந்துபோனார். குறித்த இளைஞர் அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட்டார். யூட் ஜெயமகா என்னும் குறித்த இளைஞனை பின்னர் பொலிசார் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தியுள்ளார்கள். யூட் ஜெயமகாவின் பெற்றோர்கள் பெரும் செல்வந்தர்கள். அவர்கள் தமது மகனை காப்பாற்ற கடும் முயற்சியில் ஈடுபட்டார்கள். யூட் வேண்டும் என்றே இக்கொலையை செய்யவில்லை என்றும், தற்செயலாக அவர் தள்ளிவிட்ட இடத்தில் அப்பெண் கீழே விழுந்து மரணித்தார் என்றும் வக்கீல் கடுமையாக வாதாடினார். இதன் காரணமாக யூட்ஜெயமகாவுக்கு வெறும் 12 வருட சிறைத் தண்டனையே வழங்கப்பட்டது.

இருப்பினும் பணக்காரர்கள் சும்மா இருப்பார்களா? திரும்பவும் இந்த வழக்கை நோண்ட ஆரம்பித்தார்கள். வழங்கப்பட்ட தண்டைக் காலம் அதிகூடியது என்றும் அதனைக் குறைக்கவேண்டும் என்றும், பெரும் பணத்தை செலவழித்து வாதாடினார்கள். ஆனால் இந்த யூட் ஜெயமகா தனது ஜீன்ஸை கழற்றி அப்பெண்ணின் கழுத்தை சுற்றி இறுக்கினார் என்ற விடயத்தை, கோடிட்டுக் காட்டி பொலிசார் இம்முறை (புது அறிக்கை) ஒன்றை சமர்ப்பித்துள்ளார்கள்.

அங்கேதான் வசமாக மாட்டிக்கொண்டார் இந்த யூட் ஜெயமகா. இந்நிலையில், நடந்து முடிந்த இந்த மேன்முறையீட்டு வழக்கில், இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு இளம் பெண்ணின் வாழ்வு இலங்கையில் முடிவுற்றுள்ளது. நடந்து முடிந்த இக்கொடுமையை தாங்கமுடியாமல் அவர்கள் பெற்றோர்கள் எஞ்சியுள்ள தமது இளைய மகளை அழைத்துக்கொண்டு மீண்டும் சுவீடன் சென்றுவிட்டார்கள். போதைப்பொருளுக்கு அடிமையாகி இளவயதிலேயே மரணதண்டனையை எதிர்நோக்கிக்கொண்டு இருக்கும் இந்த இளைஞன் கதையும் சில வருடங்களில் முடிந்துவிடும்.



(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## 13 ஆவது திருத்தம்...

கால ஓட்டத்தில் இலங்கை அரசு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை கலைத்துவிடுவதாக கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. என்றிருந்தநிலையில், தற்போது சுமார் ஐந்து வருடங்களாக 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பற்றிப் பேசாது இருந்த இலங்கை அரசு தற்போது, 13ஆவது திருத்தச் சட்டம் பற்றியும், அதற்குரிய பொலிஸ் அதிகாரங்கள் பற்றியும் வாய் திறந்துள்ளது.

இந்த மாற்றமானது, கூட்டமைப்பு கொக்கரிப்பதுபோல் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் நிறைவேற்றியதால் ஏற்பட்டதல்ல. அண்மையில் இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினாலும், இந்தியாவின் பிரதமராக மோடி எனும் உறுதிமிக்க தலைவர் ஒருவர் அயலுறவு, இலங்கையுடன் நெருங்கும் சமிக்ஞை வெளிப்பாடும்தான் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.

இந்தியப் பிரதமர் மோடியை அவரது பதவியேற்பு விழாவில் சந்தித்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம், இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது, தமிழக மீனவர் பிரச்சினை, சம்பூர் அனல்மின் நிலைய முன்னேற்றங்கள் தொடர்பிலேயே தனது அக்கறையை வெளிப்படுத்தியிருந்தார்.

மோடியின் அணுகுமுறைகள், அக்கறைகள், பிரர்ந்தியம் தொடர்பில் இலங்கைமீதான இந்தியாவின் நீண்டகால அதிருப்திகளின் விளைவுகள் என்பவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து இலங்கை அரசு தனது பிடிவாதங்களில் சில தளர்வுகளை அல்லது மாற்றங்களை செய்யவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

சம்பூர் அனல்மின் நிலையப் பணிகளை துரிதப்படுத்துமாறு அண்மையில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுரை வழங்கியிருந்ததும், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்தாலும் அவர்களை தொடர்ச்சியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிடுவதையும், 13ஆவது திருத்தச்சட்டத்தின் படி மாகாண சபைக்கு ஆயுதங்கள் இல்லாத பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவும் கூறிவருகின்றனர்.

இவற்றைப் பார்க்கும்போது, இந்தியாவுடன் ஏற்கெனவே உடன்பாடு காணப்பட்ட விடயங்களை இலங்கை அரசால் புறக்கணிக்க முடியாத நிலை இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழலை நேர்மையோடு அதேவேளை அரசியல் சாணக்கியத்தோடு தமிழ் மக்களின் நலனில் இருந்து அணுகப்படவேண்டும்.

வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டும் இடங்கொடுக்காமல், அறிவுசார்ந்து இந்தச் சூழலை தமிழ்மக்கள் அணுகினால், மாகாண சபையூடான தீர்வு நோக்கிய அரசியல் போராட்டத்தை வெற்றியை நோக்கி முன்னகர்த்த முடியும். அதற்கு மீண்டும் ஒரு தடவை இந்தியாவின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது. மோடியை விடவும் தமிழ் மக்களுக்கே அரசியல் தீர்வு அவசியம். இதை மறைத்து மோடிதான் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும்.

நாங்கள் ஐ.நா. சபைக்குப் பின்னாலும், அமெரிக்காவுக்குப் பின்னாலும்தான் ஓடுவோம். அவர்களையே நம்புவோம். மோடிக்கு விருப்பமிருந்தால் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தரலாம். அதைப்பற்றி தமிழ்த் தேசிய வரம்புக்கு உட்பட்ட வகையில் நாங்கள் யோசித்து முடிவு செய்வோம் என்று மெத்தனப்போக்குடன் கூட்டமைப்பு உருவாகி வந்திருக்கும் வாய்ப்பையும் சிதைத்துவிடக்கூடாது.

[09 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

## இந்தியாவின் புதிய அரசும்....

மோடி அரசுடன் பேசுவோம் என்றுசொல்லியே இன்றும் பல வருடங்களைக் கடத்துவதே கூட்டமைப்பினரின் அடிப்படை நோக்கமாகும். கூட்டமைப்பு நம்புவதுபோல இந்தியா, இலங்கை அரசை ஒருபோதும் பகைத்துக் கொள்ளாது! ஒரு நாட்டின் சட்டதிட்டம், இறையாண்மையை எந்த நாடும் மதித்தே நடக்கும் - இதனையே இந்தியாவும் செய்யக்கூடும்.

அதைவிட, பிராந்திய நாடுகளுடன் நல்லுறவைப் பேணி இந்தியாவை பொருளாதார ரீதியில் முன்னேற்றுகின்ற சமநேரத்தில், பிராந்தியத்தின் தலைமையை கையில் வைத்துக்கொள்ளவும் மோடி அரசு விரும்புகின்றதே தவிர, முரண்பாட்டை அல்ல! என்பதை அவரின் செயற்பாடுகள் மூலம் அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அதைவிட, இந்தியாவின் புதிய பிரதமருக்கு முன்பாக இந்தியா மாநிலங்களின் பிரச்சினைகள் பரந்து விரிந்து கிடக்கின்றது! தனது நாட்டினைப் பாதுகாப்பதற்கே மோடி அரசு முதலில் தன்னுடைய மாநிலங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே கூடுதல் அக்கறை செலுத்தவேண்டியிருக்கும். இவைகளும் இலேசாகத் தீர்த்துக் கொள்ளக் கூடியவைகளும் இல்லை. ஒவ்வொரு மாநிலங்களிலும் நிறைய பிரச்சினைகள் உள்ளன. இவற்றுக்கெல்லாம் தீர்வு கண்டபின்னே தான் மோடி அரசு இலங்கைத் தமிழர் விடயத்தை கையாள நினைக்கலாம். தன்னுடைய வீட்டுக்குள் சண்டை, சச்சரவுகளை வைத்துக்கொண்டு அடுத்த வீட்டுச் சண்டையை நிறுத்த யாருமே முன்வரமாட்டார்கள். இதையே இந்தியாவும் செய்யக்கூடும். இதை தமிழர் கூட்டமைப்புப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒருபுறம் புலம்பெயர் தமிழர்கள், மறுபுறம் இலங்கை அரசு, மற்றொருபுறம் இந்தியா என்று மூன்று வகைகளில் மாட்டிக்கொண்டுள்ள கூட்டமைப்பு, இந்தியா அரசுடன் கை கோர்த்துச் செயற்படத் தயார் என்ற அறிவிப்பு முற்றிலும் போலியானது! தமிழர்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றமுனையும் அறிவிப்பு இது. இதுஇவ்வாறிக்க, இந்திய மத்திய அரசுடன் தமிழர் கூட்டமைப்புக்கு நெருங்கிய தொடர்புகள் கிடையாது. தமிழ்நாட்டின் தலைவர்களை நம்பிய, நம்பிச் செயற்படும் அளவுக்கு மத்தியில் உள்ள தலைவர்களுடன் தொடர்புகள் இவர்களுக்கு இல்லை - வடபகுதியில் இருந்து புலிச்சாயம் பூசிக்கொண்டு, வாழ்ந்து பழகிப் போய்விட்ட இவர்கள் மோடி அரசை நாடிச்செல்வது என்பது சாதாரண விடயமல்ல.

மத்திய அரசின் அமைச்சர்களுக்கோ அன்றி அரசுக்கு நம்பத்தகுந்தவர்களின் தொடர்புகள்கூட கூட்டமைப்பிடம் இருப்பதாக இல்லை. இந்த இலட்சணத்தில் சூடான அறிக்கைகள் விடுவதில் மட்டும் முனைப்புக் காட்டலாம் அன்றி மோடி அரசுடன் இணைந்து செயற்படுவோம் என்பதெல்லாம் வெறும் கண்துடைப்பேயன்றி உண்மை இல்லை.

எனவே, கிடைக்கும் வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்தி, எமது பிரச்சினையை தீர்ப்பதற்கு முயலவேண்டும். அந்த வகையில் தற்போது மோடி அரசாங்கத்தினால் கூறப்பட்டுள்ள 13ஆவது திருத்தம் தொடர்பான விடயத்தையும் ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி தமிழர் தரப்பு இலங்கை அரசுடன் காய்களை நகர்த்தவேண்டுமே தவிர, மோடி எல்லாம் செய்வார்; அவருடன் இணைந்து இலங்கை அரசிடம் எமது உரிமைகளைப் பறித்தெடுப்போம், என்று வீரவசனம் பேசுவோமானால், அது எமதுமக்களை ஏமாற்றுகன்ற சித்து விளையாட்டாக மட்டுமே அமையும்.

எந்தப் பிரச்சினையாக இருப்பினும் பேசித்தீர்க்க முடியும். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதுபோல, எமது பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசிடம் அடித்துக் கேட்கலாம்.

ஜெனீவாத் தீர்மானம் இலங்கை அரசை ஆட்டம் காண வைக்குமென்று அலட்டினார்கள். கடைசியில் என்ன நடந்தது? இந்தியாவுக்கு நூறு தடவைக்கு மேல் போனார்கள் என்ன நடந்தது?

ஒவ்வொரு நாடுகளிலும் கால்பதித்து சண்டித்தனம் புரியும் அமெரிக்கா சண்டியன்கூட எங்கள் நாட்டினை எட்டிநின்று பார்க்கவில்லை. எனவே இனிமேலும் தமிழர் காதில் பூச்சுற்றும் வேலைகளை கைவிட்டு, உண்மையான அக்கறையுடன், உள்வீட்டில் பேசி, உருப்படியான தீர்வினைக் காண் கூட்டமைப்பு முன்வரவேண்டும். இல்லை என்றால் கடவுள்கூட தமிழர் பக்கத்தை எட்டிப்பார்க்க முடியாதளவுக்கு எங்களின் வாழ்க்கை அமைந்துவிடும்.



# இதுதான் காதல்

எப்போதும் திகட்டாத சங்கத்
தமிழ் நூல் எட்டு அதில்
ஒன்று 'கலித்தொகை' என்ற
வெல்லத் தமிழ்த் திரட்டு.

கலித்தொகை பாடல்கள்
மொத்தம் ஐம்பது காதல்
சுவையில் வல்லது
மூழ்கிக் களிக்க ஏற்றது!
'கலித்தொகை' காட்டும் காதல்
காட்சி ஒன்று காண்பீர்!

கட்டழகுப் பாவையல்ல
அன்னம்போல் நடையுமல்ல
முன்னழகும் பின்னழகும்
மோகம் கொள்ள வைப்பதல்ல.

முகம் அழகுதான் - அவள்
முதுகுதான் கூனல் - வீசிய
காற்றில் வளைந்த கொடி
போன்றவள் மேனி
அமைப்பின் காரணத்தால்
கூனி என்றே கூறி அழைப்பர்.
கட்டழகுக் காளையல்ல
அண்ணார்ந்து பார்க்கும்
உயரமல்ல மோதலுக்கு ஏற்ற
உருவமல்ல மோகத்தை
ஊட்டும் தோற்றமல்ல
அளந்தால் மூன்றடி
அளவிருப்பான் அவனைக்
குறளன் என அழைப்பர்.

உருவத்தைப் பார்த்து
உருவாகுவதில்லை காதல்
உள்ளத்தில் மொட்டவிழ்ந்து
பூவாகுவதுதான் காதல்

கூனியின்மீது மோகம்
கொண்டான் காதல் ஏணியின்
மீது ஏறி நின்றான் கூனியை
ஒரு நாள் வழிமறித்து வீசினான்
காதல் வலை எடுத்து!

வளைந்து நீ நடக்கும் போது
கலைந்து போனது என் மனது



குனிந்த உன் மேனி கண்டு
கனிந்து போனது என் காமம்.

கண்ணே நான் காதலுற்றேன்
மண்ணில் இனி
வாழ்வதென்றால் பெண்ணே
உன் அருள் வேண்டும்
இன்றேல் என் உயிர் போகும்?"
கூறிய குறளன் அவள் கரம்மீது
தன் கை பதித்தான். பதறிய
கூனி உதறிவிட்டு குறளனை
முறைத்தாள் கோபத்திலே.

"எட்டியே பிடித்தாய் கையில்
கட்டியே பிடிக்க உந்தன்
குட்டியாம் தேகம் தகுமோ?
எட்டிப்போ வழியை விட்டு"

விலகாமல் குறளன் நின்று
குறும்பாக பதில் உரைத்தான்.
வாள் போன்ற வாய் உனக்கு
வில் போன்ற உடல் உனக்கு
மார்போடு உனை அணைத்தால்
கூன் வந்து குறுக்கே நிற்கும்
மகிழ்ச்சியோடு
ஓடிவந்து பின்புறமாய்
உனை அணைத்தால்
- முதுகுக் கூன்
மோதி தடுத்துவிடும்
பக்கமாய் நெருங்கி
உன்னை பதமோடு
அணைத்தால்தான்
இதமாக இன்பம்
பெருக்கெடுக்கும்.

"வித்தகன்போல
விளக்கிவிட்டு
பித்தனைப்போல
புன்னகைத்தான் கூன்
என்றால் குறும்போ
வீண் உந்தன்
முயற்சி எல்லாம் நிறுத்திவைத்த
ஆமையைப் போல் நிற்கின்ற
நீ எனக்கு பொருத்தமே
இல்லைப் போடா?"

கூனியின் வசை எதுவும்
குறளனை அசைக்கவில்லை.
கொடியினை போல் வளைந்த
உருவத்தாள் உன்னை ஆள
யாருண்டு என்னை விட்டால்?
கண்டதும் ஓடுவார்கள் - நான்
கண்டதும் நாடிவந்தேன்!
மறுக்காதே! என்னை விட்டால்
உன்னை பொறுப்பாக காதலிக்க
விருப்பாக யார் வருவார்?"

குறளின் கேள்வி கூனியை
கொதிக்க வைத்தது!
"யார் உண்டு என்றா கேட்டாள்
பார் முழுக்க பலர் உண்டு நீர்
வந்து பெண் கேட்டோர் பட்டியலை
எடுத்துவிட்டால் மூச்சிழந்து வேர்
அற்ற மரமாய் விழுவாய்"

கூனியின் கோபம் கண்டு
குறளனும் அரண்டு போனான்
கொய்யாக் கனியே கோபமா.
மொய்யா மலரே தாபமா?
மெய்யா என்மேல் கோபமா?

குறளனின் பணிவு கூனிக்கு
இனிப்பானது! கோபத்தை விரட்டி
விட்டு குளிர்மையை வீசினாள்!
குளிர்பார்வை கண்ட குறளன்
குதித்து நடந்து குதூகலித்தான்.

"காமனார் நடையோ இந்த நடை
காதல் வேகத்தால் நடையோ
இந்த நடை உருவம்தான் குள்ளம்
உள்ளம் மலை! உமக்கு தேகம்
தான் சிறிது தேக ஆசை மலை!"

கடுகுதான் சிறிது காரம் பெரிது
என்பர் நீ அறியாயோ?"

"அறிவேன் குறளா உண்மை
அது இகழேன் உன்னை
உண்மை இது - கோபுரம் உயரே
இருந்தென்ன குன்றிமணிதானே
பளபளக்கும் உருவம் பெரிதாய்
இருந்தென்ன உள்ளம் பெரிதாய்
வேண்டாமோ? கள்வா
நீதான் பெரு மனிதன்
உள்ளத்தால் உயர்ந்த குண
மனிதன்!"
கூனி சொன்னதும் குறளன்
மகிழ்ந்துவிட்டான் பக்கத்தில்
நெருங்கி குறும்பு செய்ய
வெட்கத்தில் கூனி
விழியடைத்தாள்
போதும் இங்கே வேண்டாமே
கண்டவர் நகைப்பர்
வேண்டாமே கூடிக்
களிக்கையில் குறுக்கிட்டு
குறும்பாய் வீசுவர்
வார்த்தைகளை!"

"கூனி தடுத்தாள் குறளன்
தவித்தான்! கண்ணே உன்னை
கலங்காமல் கனி இதழ்
சுவையே
பருகாமல் கட்டிக் கொண்டு
உருகாமல் போகேன்
பெண்ணே நான் போகேன்!"

'குறளா! குறளா! குதிக்காதே
உறவாய் உனக்காய்
ஆனேனே சோலை எம்மை
அழைக்கிறது போர்வையாகத்
துடிக்கிறது
புகுவோம் அந்தப்
போர்வைக்குள் புறப்படு குறளா
சோலைக்கு குள்ளம் எனினும்
குறளன் உடல் உறுதி குறளன்
கரத்தால் கூனியை கொத்தாய்
அள்ளிக் கொண்டானே!
மொத்த இன்பம் அறிவதற்கு
சிப்பிக்குள் முத்தை
காண்பதற்கு குதித்து குதித்து
சென்றானே!"

இக் காதல் காட்சியை
கலித்தொகையில் காட்டுகிறார்
மருத இளநாகனார்.

**"என் நோற்றனை கொல்லோ**
**நீருள் நுடங்கிய மென்சா**

..................

என்று தொடங்கி

**"போதர் அகடு ஆரம் புல்லி முயங்குவோம்**
**துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை**
**முகடு காப்பு யாத்து விட் டாங்கு"**
**என்று முடிகிறது பாடல்.**




**சிந்தியா! எரிக் சொல்ஹெய்ம் இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறாராமே?**

**திருமதி எஸ்.ஜெயபிரதா, புத்தளம்.**

அப்படி ஒரு விசாரணை நடைபெற்றால், போர்க்குற்றங்களுக்கு முதல் குற்றவாளியாக எரிக் சொல்ஹெய்ம் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் இருதரப்பு பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாட்டாளராக நியமிக்கப்பட்டவர் எரிக் சொல்ஹெய்ம்.

புலிகள் ஒப்பந்த காலத்திலேயே பல கொலைகளைச் செய்து, தாக்குதல்களை நடத்தியபோது, அவற்றை வேறு நாடுகளில் ஒப்பந்த காலத்தில் நடந்தவற்றோடு ஒப்பிடுகையில் பாரதூரமான சம்பவங்கள் அல்ல என்று புலிகளுக்கு ஜால்ரா போட்டவர். அப்போதே உலக ஓட்டத்தையும், புலிகளுக்கு இருக்கவேண்டிய பொறுப்பையும்

நியாயமாக எடுத்துக்கூறி புலிகளை சரியான திசையில் நகர்த்தியிருந்தால் இந்த போர்க்குற்றமே நடந்திருக்காதே. போர் நடந்தபோது எரிக்கின் பங்களிப்பு என்ன?, அப்போது போர்க்குற்றத்தை தடுக்க இவர் எடுத்த முயற்சிகள் என்ன?, இதையெல்லாம் எரிக் இலங்கை மக்கள் முன் தெளிவுபடுத்துவாரா?, அவர் நடந்த தவறுக்காக இலங்கை மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்பாரா? இப்படி பல கேள்விகள் அவருக்கு முன்னால் உள்ளது.

**மீண்டும் மீண்டும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர்கின்றதே சிந்தியா?**

**மு.அபிராமி, தெல்லிப்பளை.**

இந்திய பிரதமர் மோடிக்கு தமது நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காக இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களை இலங்கை ஜனாதிபதி விடுதலை செய்கின்றார். அதையும் ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டு இந்திய மீனவர்கள் தொடர்ந்து அத்துமீறுகின்றார்கள். மீனவர்கள் விடயத்தில் இந்திய மத்திய அரசு உரிய நடவடிக்கையை எடுக்குமென்று இலங்கை எதிர்பார்க்கின்றது.

திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது என்பதுபோல் இந்திய மீனவர்கள் தெரிந்தே எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுகின்றார்கள்.

**சிந்தியா! இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைக்கு குழுக்களை அமைப்பதால் ஆகப்போவது என்ன?**

**க.சமீதரன், தெஹிவளை.**

தவறுகள் இடம்பெற்றுள்ளது என்பதை எவரும் மறுக்கவில்லை. அதற்கு பரிகாரம் காணப்படவில்லை. நாட்டில் நடந்துமுடிந்த ஒட்டுமொத்த தவறுகளுக்கும் எதுவெல்லாம் காரணமாக இருந்ததோ, அக்காரணிகள் தற்போதும் கூச்சமில்லாமல் தூக்கிப்பிடிக்கப்படுகின்ற சூழலில் ஒன்றின் விளைவு இன்னொரு தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும் என்பதை இந்த விசாரணைகள் நிறைவேற்றுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**வடக்கு முதலமைச்சரின் முல்லைத் தீவு விஜயம் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யுமா சிந்தியா?**

**எவ்.முஹம்மட், யாழ்ப்பாணம்.**

வடக்கு முதலமைச்சராக ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் தெரி வானால் தமிழ் மக்களுக் கும், அழிந்துபோன வாழ்விடங்களுக்கும் நன்மைகள் நடக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டதை அவரின் சமகால போக்கு பொய்யாக்கிவிட்டுள்ளது. எது முடியாது என்று கூறுகின்றாரோ? அதேயளவுக்கு எதுவெல்லாம் தன்னால் முடியும் என்பதை செய்து காட்ட அவர் கடந்த ஏழு மாதங்களாக முயற்சிக்கவில்லை.

முதலமைச்சராக மாவை, சுரேஷ், சிவஞானம், சிவாஜி லிங்கம், சித்தார்த்தன் இவர்கள் ஏன் தெரிவாகக் கூடாது என்று கருதப்பட்டதோ? அதுவே தற்போது விக்கினேஸ்வரன் அவர்களாலும் செய்யப்படுகின்றது என்பதைப் பார்க்கும்போது முன்னாள் நீதிபதியை கூட்டமைப்புச் சகதிக்குள் வெற்றிகரமாக புதைத்துவிட்டார்கள்.

**சிந்தியா! உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டி ஆரவாரங்கள் எப்படி இருக்கின்றது?**

**த.சைலஜா, செம்பியன்பற்று.**

ஆம். வழமைபோன்று இம்முறையும் போட்டிகள் பற்றிய ஆர்வம் கால்பந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் காட்டுத்தீயாய் பரவிக் கொண்டிருக்கிறது.

கிண்ணத்தை வெல்லப் போவது யார்? என்ற பந்தயங்களும், ஆங்காங்கே தூள் கிளப்புகிறது.

உலகளவில் சுமார் ஐம்பது கோடி மக்கள் தங்கள் நாட்டை நோக்கி தங்கள் கவனத்தை திருப்பப்போகிறார்கள் என்ற அங்கலாய்ப்பில் பிரேசில் போட்டிகளை கோலாகலமாகச் செய்கின்றது.

இவையெல்லாம் சரிதான். அண்மையில் பிரேசிலில் இருந்து கிடைக்கப்பெற்ற செய்தி ஒன்றுதான் உறுத்தலாக இருக்கிறது.

போட்டி நடைபெறவுள்ள மைதானங்களுக்கு அருகிலுள்ள ஏழை, எளியவர்களை பிரேசில் காவல்துறையினர் துரத்தி விரட்டுகிறார்களாம். உண்மையிலேயே இது மிகக் கேவலமான, மனிதாபிமானமற்ற செயல் என்று உலகின் பல பாகங்களிலும் இருந்து கிளம்பிக்கொண்டிருக்கும் கண்டனக்குரல்களுடன் முரசும் தன்னை இணைத்துக் கொள்கிறது.

ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவேண்டிய தார்மீகக் கடமையுள்ள அரசு, அவர்களை விரட்டி அடிப்பது எந்தவகையிலும் நியாயமாகாது. இது மனிதாபிமானமுள்ள எவரையுமே நிச்சயம் சினங்கொள்ளச் செய்யும்.

**சிந்தியா! உலகில் அழகான பெண் யார்?**

**த.சைந்தவி, முல்லைத்தீவு.**

உங்களை இந்த உலகுக்கு பரிசளித்த உங்கள் தாயைவிட வேறு யாரை யாவது நான் அழகி என்று கூறினால் நீங்கள் கோபப்படுவீர்களே.

**சிந்தியா! ஒரு கால கட்டத்தில் கலக்கு கலக்கிய அமலாபாலுக்கு நிச்சயதார்த்தம் முடிவடைந்துவிட்டதே?**

**டொ.அருந்ததி, மன்னார்.**

அமலாபால் அப்படி ஒன்றும் நடிப்பில் அசத்தவில்லை. மைனா படத்தில் புதுசாகத் தெரிந்தார். விஜயுடன் தலைவா படத்தில் பொருத்தமற்றுத் தெரிந்தார். தெய்வத் திருமகள், வேட்டை போன்ற படங்களிலும் சராசரி புதுமுக நடிகைகள் போலவே தெரிந்தார். அவருக்கும் இயக்குநர் விஜயுக்கும் திருமணம் முடிந்திருக்கின்றது. அதுவரையில் நாமும் வாழ்த்துவோம்.



கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்களின் அருகில் வசிக்கும் ஏழை மக்களை பிரேசில் பொலிஸார் துரத்தி அடிக்கின்றனர்.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

வணக்கமுங்கோ. போனவாரம் கூத்தமைப்பு எம்.பி. சுரேஷ் சொன்ன கதையைக் கேட்டு தலை சுத்திப் போச்சுதுங்கோ. அதென்னவெண்டால், அவையள் தென்னாபிரிக்காவோடை பேச்சுக்களை நடத்தப்போகினமாம். அந்தப் பேச்சுக்களின் போது, தமிழ் மக்களுக்கு என்னமாதிரியான தீர்வுவேணும் எண்டதைப் பற்றிய திட்டம் ஒன்றை முன்வைக்க வேணுமாம். அதற்காக தீர்வு தொடர்பில் தமிழ் மக்கள் தமது ஆலோசனைகளை சொல்லட்டுமாமுங்கோ.

அப்புடியெண்டால் இதுவரைக்கும் உந்தக் கூத்தாடிக் கோமாளிகள், தீர்வு தொடர்பாக சொன்னதெல்லாம் என்னவாக இருக்கும்? அதையும் நம்ம பிரேமைச் சந்திரனிட்டையே கேட்டனுங்கோ.

**கேள்வி: ஹலோ பேச்சாளரே, தீர்வுத் திட்டம் தொடர்பாக தமிழ் மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கின்றீர்களே... அது என்ன விசயம்?**

பதில்: தமிழ் மக்களுக்கும் கூத்தமைப்புக்கும் உணர்ச்சிரீதியான தொடர்புதான் இருக்குதே தவிர அரசியல் ரீதியான உறவோ, தெளிவோ இல்லையே என்று ஒரு தூதுவர் போட்டார். அதுதான் நாங்கள் மக்களின் ஆலோசனையைக் கேட்கிற மாதிரியான வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

**கேள்வி: அப்புடியெண்டால் இது நாள்வரைக்கும் உங்களிடம் தீர்வு தொடர்பில் ஒரு திட்டம் இல்லையா?**

பதில்: இல்லையெண்டபடியால்தானே தமிழ் மக்களுக்கான தீர்வை அரசாங்கம் முன்வைக்கவேணும் எண்டு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டுவருகின்றோம். புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கை தவிர்ந்த தீர்வை நாங்கள் வெளியால பேசினால் உந்த மோட்டுத் தமிழ்ச்சனம் எங்களுக்கு வாக்குப் போடாதே. இலங்கை அரசாங்கத்தோடு பேசுவதற்கு தீர்வு திட்டம் ஒன்றும் எங்களுக்குத் தேவையில்லை. அவையள் எந்தவொரு திட்டத்தை முன்மொழிந்தாலும் அதை கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்பதுதானே [illegible] பொலிரிக்ஸ். ஆனால் [illegible]பிரிக்காவோடை பேச்சுக்கு [illegible]கேக்க அவையள் எங்கட பக்கத்தில என்ன எதிர்பார்ப்பு எண்டதை எழுத்தில தாங்கோ எண்டு கேக்கினம். அவையளிட்ட போய் தனிநாடுதான் எங்கட தீர்வு எண்டோ, அதுதான் தீர்வின் அடிப்படை எண்டோ சொன்னால் காறித்துப்பிப் போடுவாங்கள். அதுதான் உந்தச் சிக்கல் இப்போது வந்திருக்கின்றது.

**கேள்வி: ஓஹோ! இதாலதான் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும் போகமாட்டோம் என்று அடம்பிடிச்சுக் கொண்டு இருக்கிறீங்களா?**

பதில்: அதுவும் ஒரு காரணம். பாராளுமன்றத் தெரிவுக்குழுவில போய் நாங்கள் வெறுங்கையால முழும்போட வெளிக்கிட்டால், அரசாங்கம் எங்கட பலவீனத்தைத் தெரிந்துகொண்டு தன்ர ஸ்ரைலில் எங்களை அணுக வெளிக்கிட்டுடும்.

**கேள்வி: சரி. இந்த அறிவிப்பு கூத்தமைப்பின் ஒருமித்த தீர்மானமா? மற்றவையை விடுங்கோ, சம்மந்தத் தின்ர முடிவும், அவருடைய வாரிசான உங்களின் அரசியல் எதிர் சுமந்திரனுடைய முடிவும் என்னவாக இருக்கிறது?**

பதில்: உண்மையைச் சொல்வதானால் இப்படி மக்களிடம் கருத்துக் கேட்கும் விடயத்தில் அவர்களின் நேரடி முடிவுகள் பெறப்படவில்லை. அவர்கள் கூத்தமைப்புக்குள்ளேயே சக கட்சிகளோடு கூட எதையும் கலந்து பேசமாட்டார்கள். கூட்டுப்பொறுப்பு பற்றிய எந்த கட்டுப்பாடு களுக்கும் அவர்கள் கட்டுப்படுத்துவதில்லை. அப்படித்தான் பெயரளவில் கூடிப் பேசினாலும் முடிவை அவர்களே எடுத்துவிடுவார்கள். வேறு கட்சிகளின் அபிப்பிராயங்களைக் கேட்கமாட்டார்கள். ஆகையால் இதுபோன்ற முடிவுகளை நாங்களே எடுத்துவிட்டு பின்னர் அவர் களுடன் கலந்துரையாடுவதே சரியாக இருக்கும் என்று முடிவு செய்திருக்கின்றோம்.

**கேள்வி: அப்படி என்றால் நாளைக்கே இவ்விடயத்தில் அவர்கள் வேறு மாதிரி யான கருத்தைக் கூறினால், நீங்கள் உங்கள் நிலைப்பாட்டை வழமைபோல் வாபஸ் வாங்கிவிடுவீர்களா?**

பதில்: வேறு என்ன செய்வது. இதுதான் இன்றைய கூட்டமைப்பின் உள்ளே இருக்கும் நிலைப்பாடு. இதற்காகத்தான் நாங்கள் கூட்டமைப்பு முறையாகப் பதிவு செய்யவேண்டும் என்றும், முறையான நிர்வாகம் தெரிவு செய்யப்படவேண்டும் என்றும் பல தடவைகள் கோரிக்கை விடுத்து வருகின்றோம். அந்தக் கோரிக்கையை நாங்கள் முன்னெடுக்கும்போதெல்லாம், மன்னார் ஆயர் தலைமையில் விடயத்தை பூசிமெழுகுகின்றனர். பத்திரிகைகள் ஒற்றுமையைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதுகின்றன. கூட்டமைப்பை உடைக்கப் பார்க்கின்றோம் என்றவிதமாக அவனவன் கதை சொல ஆரம்பித்துவிடுகின்றான். நாங்களும் சமாளித்துக் கொண்டு பேச்சுவார்த்தைகளுக்கு சென்றுவிடுகின்றோம்.

**கேள்வி: நீங்கள் சொல்லவும்தான் ஞாபகம் வருகின்றது. நீங்கள் இறுதியாக திருமலையில் கூட்டமைப்புக் கூட்டத்தை நடத்தியபோது, கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பாக யாப்பு வரைபு மற்றும் தேவையான காரியங்களை வகுப்பதற்கும் ஒரு குழுவை நியமித்த தாக செய்திகள் வெளி வந்தனவே. அந்தக் குழுவின் நடவடிக்கைகள் எந்த நிலையில் இருக்கின்றது?**

பதில்: அதுவும் சும்மா கண்துடைப்புத் தான். காலத்தை இழுத்தடிக்கும் தமிழரசுக் கட்சியின் ஒரு விளையாட்டுத் தான். அதுகளையெல்லாம் வெளியால கதைக்கப் போனால் எனக்கு மண்டை சூடாகிடும். பழையபடி நான் கொலை வெறியோட சில பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டியதாக இருக்கும். அதாலதான் பொறுமையாக இருக்கிறேன். எண்டு சொல்லேக்க அவரின்ர கண்கள் சிவக்கத் தொடங்கிட்டுதுங்கோ.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"



# சத்ரபதி சிவாஜி

இராஜபுத்திர சேனாதிபதி உதயமான் தானாஜிடம், என்னோடு போரிட்டு வென்றபின் கோட்டையை உனதாக்கிக் கொள்ளலாம் என்று சவால்விட்டான். இருவரும் வாளை உருவிக்கொண்டு மோதினார்கள். ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை. ஆகவே தனிப்போரில் இருவருமே மாண்டனர்.

இறுதி வெற்றி மாராட்டியருக்கே. சிவாஜி அங்கு போய்ச் சேர்ந்தபோது வெற்றியைக் கொண்டாடும் மனோநிலையில் இல்லை. "அக்கோட்டையை மீட்டுவிட்டோம். ஆனால் சிங்கத்தை இழந்துவிட்டோமே!" என்று வேதனையோடு கூறினார். தானாஜியின் நினைவாக அதற்கு 'சிம்ஹகட்' என்று மீண்டும் பெயர்சூட்டி திருப்திப்பட்டார்.

சிவாஜி சத்ரபதியாக 1674 ஜூன் மாதம் 6ஆம் திகதி இந்துமத தர்மப்படி மன்னராகப் பட்டாபிஷேகம் செய்துகொண்டார். வெண்கொற்றக்குடை பிடிக்க பட்டத்து யானைமீது அமர்ந்து படைகள் அணிவகுத்துச் செல்ல. ராய்கட்டில் மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்க, ஊர்வலம் சென்றார். அவருக்கு முன்னால் இரண்டு யானைகள் சென்றன. அதில் அமர்ந்திருந்தவரின் கையில் கொடி பட்டொளி வீசி பறந்துகொண்டிருந்தது. அக்கொடிகளில் ஒன்றின் துணி குரு ராமதாசரின் காஷாய உடையிலிருந்து தயாரிக்கப்பட்ட பகவத் கொடி. மகாராஷ்டிரா தேசம் அவருடையதுதானே. தான் அவருடைய பிரதிநிதி என்று சிவாஜி கூறியதை உறுதிப்படுத்திவிட்டார்.

மாவீரர் -மகாராஷ்டிர ஜீவன்-சத்ரபதி பாரதத்தின் தவப்புதல்வர்களுள் ஒருவரான சிவாஜி தமது 53ஆம் வயதில் 1680 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி காலமானார். பாரததேசம், பாரத மாதாவும் கண்ணீரும் கம்பலையுமாகக் கதறி அழுதனர்.

(முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(12.06.2014 தொடக்கம் 18.06.2014 வரை)

## மேடம்

சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள் உத்தியோகத் துறையினர்களுக்கு பதவி யுயர்வுகள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு-கள் நிரம்ப உண்டாகும். நீண்டநாட்களாக தடைபட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றி அடைவீர்கள். ஒரு சிலருக்கு புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். விவசாயம் செய்வோர்களுக்கு நல்ல விளைச்சலும், இலாபமும் கிடைக்கும். புதிய வீடுகளை வாங்கப்போட்ட திட்டங்களுக்காக வங்கிகளில் எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் கிடைக்கக்கூடிய காலமாகும். திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். உறவினர்களின் வரவால் பொருள்வரவும் மனச்சந்தோசமும் உண்டாகும்.

## துலாம்

நெடுநாட்களாகப் பிரச்சினையில் இருந்த குடும்பச் சொத்துக்கள் கைக்கு வந்துசேரக் கூடிய காலமாகும். வேலை இல்லாதவர்களுக்கு வெகு நாட்களாக எதிர்பார்த்து இருந்த புதிய வேலைவாய்ப்புகள். கிடைக்கும் காலமாகும். உடம்பில் தோல் மற்றும் இரத்த சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். கண்களில் கவனமுடன் இருப்பது நல்லது. பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மிகுந்த பிரயாசையின் பேரில் சமாளித்துக் கொள்வீர்கள். விபரீதமான எண்ணங்களை விட்டுக் காரியத்தை கவனிக்கவும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. விவசாயத்தில் இலாபம் ஏற்படும்.

## இடபம்

கணவன் - மனைவி உறவில் விரிசல்களும் வீண் மனக்குழப்பங்களும் வந்துபோகும். அநாதைகளுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். புதிதாக வீடு, வாகனம் மற்றும் நில புலன்கள் வாங்க வாய்ப்பு உள்ள காலமாகும். நீண்டநாட்களாக வராத பணம் திரும்பக் கை வந்துசேரக்கூடிய காலமாகும். உடல்நிலையில் வாயு மற்றும் வாதம் ஆகிய தொல்லைகள் வந்துபோகும். திருமண விசயங்களுக்காக முயற்சிசெய்யலாம். பொருளாதாரத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். உறவினர்களால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். மற்றவர் களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். பிள்ளைகளுக்கு எதிர் பார்த்து வந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

## விருச்சிகம்

தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். உடல்நிலையில் கண், காதுகளில் மிகவும் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விட்டுப்போன கணவன் - மனைவி உறவுகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ளது. காதல் சம்பந்தமான விசயங்களில் பெண்களால் அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் பழகுதல் நல்லது. புதிய கடன் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் ஏற்படும். நண்பர்களால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்காக வங்கிகள்மூலம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.

## மிதுனம்

சம்பந்தம் இல்லாத அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக்கவலை அடையாதீர்கள். குலதெய்வ ஆலயங்களைத் திருத்தி கட்டப்போட்ட திட்டங்களில் சிறிய தடைகளின் பேரில் வெற்றி அடைவீர்கள். முன்கோபத்தை தவிர்த்து அண்டை அயலாருடன் கவனமாக பேசிப்பழகுதல் நல்லது. வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களால் சில ஆதாயங்கள் வந்து சேருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. உறவினர்கள் மற்றும் சொந்தபந்தங்களால் ஆதாவுகள் இல்லை. காதல் சம்பந்தமான விசயங்களில் நற்செய்திகள் கிடைக்கும். குலதெய்வ வழிபாடு செய்துவருதலால் கிரகதோசங்கள் நீங்க வாய்ப்பு உள்ளது.

## தனுசு

கணவன் - மனைவி உறவு-களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்த சுமூகமான உறவுகள் ஏற்படும். உடம்பில் மூளை நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். எதிர்பாராமல் வடதிசையில் இருந்து பொருள்வரவும், நல்ல செய்திகளும் வந்துசேரும். வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக பணச்செலவுகள் வந்துசேரும். புதிய கூட்டுத்தொழில் முயற்சிகளை சற்றுக் காலதாமதமாக தொடங்குவது நல்லது. ஆதாவற்ற ஏழைகளுக்காக உதவிசெய்து அதனால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். நண்பர்களால் வீண்விவாதங்களும் தொல்லைகளும் வந்து போகும்.

## கடகம்

காதல் விசயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கச் சற்று காலதாமதம் ஆகலாம். வீடு, நிலம் வாங்குவது போன்ற முயற்சிகளில் அரசு சம்பந்தமாக எதிர்பார்த்து வந்த உதவித்தொகைகள் கிடைக்கும். யாத்திரையில் மிகுந்த கவனமுடன் பயணம் செய்துவருவது நல்லதாகும். உற்றார், உறவினர்களின் வருகையால் பொருட்செலவுகள் உண்டாகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் செய்யாத குற்றங்களுக்காக காரணமற்ற வீண் பிரச்சினைகள் வந்துசேரும் என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

## மகரம்

பல காலமாகத் தீராத நோய்களுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும். புதிய பெரிய மனிதர்களையும் அரசியல்வாதிகளையும் சந்திக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கும். பொருளாதாரத்தில் இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காணப்படும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நல்ல சூழ்நிலைகள் காணப்படும். எதிர்பாராத நீண்டதூரப் பயணங்களின்மூலம் மனநிறைவடைய வாய்ப்பு உள்ளது. வெகு தூரப் பயணங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் சென்றுவருவது நல்லது.

## சிங்கம்

குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. உத்தியோகத்துறையினருக்கு பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் வரக்கூடும். நாட்பட்ட பழைய கடன்கள் மீண்டும் தொல்லைதர வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக புதிய கட்டடம் கட்டப்போட்ட திட்டங்கள் நிறைவேறும். பெண்கள் சம்பந்தமான காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். குலதெய்வ ஆலயங்களைப் புதுப்பிதலுக்கான முயற்சிகளில் நற்பெயர் பெறுவீர்கள். மூத்த சகோதார்களால் பொருட்செலவுகள் மற்றும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம்.

## கும்பம்

பண விசயங்களுக்கான நீண்ட தூரப் பயணங்களைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. நீண்டகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேரும் காலமாகும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்சிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். எதிர் பார்த்த பணஉதவிகள் உறவினர்களால் கிடைக்கும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்பு உள்ளது.

## கன்னி


தந்தை - மகன் உறவில் சிறிய கருத்துவேறுபாடுகள் வந்துநீங்கும். உடம்பில் வாயு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். பொதுநலக் காரியங்களுக்காக மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு நற்பெயர், புகழ் எடுப்பீர்கள். உடம்பில் உஷ்ணம், காய்ச்சல் போன்ற உபாதைகள் வந்துபோகும். வங்கிகளால் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். கொடுக்கவேண்டிய பழைய கடன்களைக்கொடுத்து புதிய கடன்களை வாங்கத் திட்டம் போடுவீர்கள். குடும்பச் சொத்துக்கள் போன்ற விசயத்தில் நல்ல தீர்ப்புக்களை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது.

## மீனம்

உடம்பில் முதுகு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளிநாடு செல்லுதல் போன்ற புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். விபரீதமான எண்ணங்களை விட்டொழித்து காரியத்தில் கவனமாய் இருங்கள். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயத்தில் சாதகமான நல்ல முடிவுகளை எதிர்பார்க்கலாம். தேவையற்ற நண்பர்களின் தொடர்புகளால் பிரச்சினைகள்வர இருப்பதால் கவன-முடன் பழகுதல் நல்லதாகும். பொருளா-தார நெருக்கடி கள் மாறித் தேவையான பொருளாதாரம் வந்துசேரும்.








போதை தலைக்கேறியதால் இளவரசி கேட் மிடில்டன் புகைப்படத்திற்கு வித்தியாசமாக போஸ் கொடுத்துள்ளார்.

இளவரசி கேட் மிடில்டன், தனது கணவரான வில்லியம்சுடன் ஸ்கொட்லாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

எப்போதும், இளவரசி கேட் சுற்றுப்பயணம் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது அழகான ஆடைகளை அணிவார். மேலும் தன்னை சந்திக்கும் மக்களி[illegible] சகஜமாக பேசுவார்.

இந்நிலையில், ஸ்கொட்லாந்தில் பள்ளி சிறுவர்களை சந்தித்த இவர், மூக்கு மற்றும் முகத்தை சுழித்தபடி பேசியுள்ளார்.

மேலும் புகைப்படத்திற்கு வித்தியாசமாகவும் போஸ் கொடுத்துள்ளார். சிறுவர்களை சந்திப்பதற்கு முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் அதிகமாக விஸ்கி குடித்ததால், போதை தலைக்கேறி இவ்வாறு நடந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.




எம்மில் பலருக்கும் ஸ்மார்ட்போனில் விரைவாக டைப் செய்வது குறித்து தங்களுக்குள்ளேயே பெருமை உண்டு. ஆனால் 16 வயதான சிறுவனொருவன் அதிவிரைவாக ஸ்மார்ட் போனில் டைப் செய்து உலகின் அதிவிரைவான தொலைபேசி டைப் செய்பவர் என்ற கின்னஸ் உலக சாதனை படைத்து பெருமை அடைந்துள்ளார்.

பிரேசிலைச் சேர்ந்த மார்செல் பெர்னாண்டஸ் என்ற சிறுவனே இப்புதிய சாதனையை அண்மையில் ஏற்படுத்தியுள்ளார். இச்சிறுவன் 25 சொற்களைக்கொண்ட பந்தியை ஒன்றை 18.19 விநாடிகளில் தொடுதிரையில் டைப் செய்துள்ளார். இவ்வருடம் ஜனவரியில் இதே பந்தியை 18.44 விநாடிகளில் மைக்ரோசொப்டின் புதிய விண்டோஸ் தொலைபேசியின் மென்பொருள் மூலம் டைப் செய்து கின்னஸ் சாதனை படைக்கப்பட்டது. இதனை புதிதாக பெல்ஸ்கி கீபோட் எனும் மென்பொருள் மூலம் பெர்னாண்டஸ் முறியடித்துள்ளார்.

இரு கைகளும் இல்லை என்பதையே மறக்கடிக்கச் செய்யும் விதமாக எகிப்தைச் சேர்ந்த நபரொருவர் மேசைப் பந்தாட்டத்தில் (டேபிள் டென்னிஸ்) கலக்குகிறார். எகிப்தைச் சேர்ந்த இப்றாஹிம் ஹமதோ என்பவர் 10 வயதில் விபத்தொன்றின்போது தனது இருகைகளையும் இழந்துள்ளார். ஆனாலும் தனது விருப்பத்துக்குரிய மேசைப் பந்தாட்டத்தினை கைவிடாமல் பயிற்சி மேற்கொண்டுள்ளார். முயற்சி இருந்தால் எதுவும் தடை இல்லை என்பதுபோல் தற்போது பந்தினை பரிமாற கால்களையும் துடுப்பினை வாயினால் பிடித்துக்கொண்டு அபாரமாக விளையாடுகிறார் இப்றாஹிம்.

“எனது வாழ்க்கையின் மிகச்சிறந்த விடயம் எனது மனைவி. எனக்கு எல்லாமே அவர்தான். இரண்டாவது பகுதி மேசைப் பந்தாட்டம். இதில் எனது வெற்றியைக் கண்டேன். நான் வெற்றிபெறும் ஒவ்வொரு புள்ளியும் எனக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளது” என இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.









தேனிலவு கொண்டாட்டம் ஒரு வாரம் ஒரு மாதம் நீடிக்கலாம். ஆனால் அமெரிக்காவைச் சேர்ந்த திருமணமான ஜோடி ஒன்று சுமார் 2 வருடங்கள் தேனிலவைக் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர். மைக் மற்றும் ஏன் ஹொவார்ட் ஆகிய இந்த ஜோடி தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா ஆகிய 6 கண்டங்களில் 33 நாடுகளிலுள்ள 302 இடங்களுக்கு பயணித்துள்ளனர்.

திருமணமானவுடன் தமது தொழிலை இராஜினாமா செய்துவிட்டு வீட்டையும் வாடகைக்கு கொடுத்துவிட்டு தமது பொருட்களுடன் திட்டமிடப்படாத தேனிலவு பயணத்துக்கு தயாராகியுள்ளனர். 675 நாட்கள் நீடித்த இந்த தேனிலவு கொண்டாட்ட சுற்றுலா பல வாழ்நாள் மறக்கமுடியாத மகிழ்ச்சியான அனுபங்களுடன் அண்மையில் முடிவுற்றுள்ளது. இதுவே உலகின் மிக நீண்ட தேனிலவு கொண்டாட்ட சுற்றுலா எனக் கூறப்படுகின்றது.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி எண்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜூன் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 29 வியாழக்கிழமை (12.06.2014) பக்கங்கள் IV ஓசை - 254

## சாத்திய வழியில் பயணம் அதுவே வெற்றியைத் தரும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(மானிப்பாய்)

சரியான திசை வழியில் அர்ப்பணிப்புடன் நாம் செல்லும் பாதையே சாத்தியமான வழிமுறையாகும். இவ்வழிமுறையே வெற்றி கொள்ளும் என்பது நிச்சயம் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி வளாகத்தில் நேற்றைய தினம் புதிய மகிந்தோதயம் தொழில்நுட்ப பீடக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம

IV ஆம் பக்கம் பார்க்க

## கவுணாவத்தை வேள்விக்கு தடைவிதித்தது நீதிமன்றம்

கீரிமலை, கருகம்பனை, கவுணாவத்தை ஆலயத்தில் இம்முறை நடைபெறவிருந்த மிருக பலி வேள்விக்கு தடைவிதித்து மல்லாகம் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

கடந்த பல வருடங்களாக நடைபெற்று வந்த வேள்வியைத் தடுத்து நிறுத்தக் கோரி மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

கடந்த மூன்று தினங்களாக மல்லாகம் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் நேற்றுப் பிற்பகல் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ்மகாதேவா இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். கடா வெட்டுவதாக இருந்

IV ஆம் பக்கம் பார்க்க

# நவிப்பிள்ளையின் விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கக் கூடாது

## நாடாளுமன்றில் பிரேரணை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமிக்கும் விசாரணைக் குழு இலங்கைக்கு வருகைதந்து விசாரணை மேற்கொள்ளக் கூடாதென பிரேரணையொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் 9 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவிடம், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அச்சல ஜாகொட, மாலினி பொன்சேக்கா, ஜானக்க பிரியந்த பண்டார, உதித்த லொக்குபண்டார, ஏ.எச்.எம் அஸ்வர், சாந்த பண்டார, ஜே.ஆர்.பீ சூரியப் பெரும, நிமல் விஜேசிங்க மற்றும் துமிந்த சில்வா ஆகியோர் இந்தப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர்.

## மயக்க மருந்து தெளித்து தங்கச்சங்கிலி அபேஸ்

### கொழும்பு - பளை இரவு நேர ரயிலில் சம்பவம்

(பளை)

கொழும்பில் இருந்து பளை நோக்கி வந்த இரவு ரயிலில் பயணம் செய்த ஒருவர் மயங்கிய நிலையில் ரயில்வே ஊழியர்களால் மீட்கப்பட்டார். அவர்கள் வழங்கிய முதலுதவி சிகிச்சையின் பின்னர் குறித்த நபரின் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி களவாடப்பட்டமை தெரியவந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து பளைக்கு கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த குருநாதபிள்ளை பகீரதன் (வயது-48) என்பவர் நேற்று முன்தினம் இரவு ரயிலில் பயணித்துள்ளார். இடையில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

நல்லவர்களைப்போல நடித்து அருகில் வந்திருந்த சிலர் மயக்க மருந்தை சூட்சுமமாக அவர் மீது வீசி தங்கச் சங்கிலியை திருடிக்கொண்டு மாயமாகிவிட்டனர்.

நடந்தது எதுவுமே தெரியாத பகீரதன் மயக்கம் தெளியாமலே நேற்றுக் காலை பளை ரயில் நிலையம் வரை வந்துள்ளார்.

IV ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவைச் சேர்ந்த மாணவன் தெஹிவளையில் சடலமாக மீட்பு

வவுனியாவைச் சேர்ந்த மாணவன் ஒருவர், தெஹிவளை அல்விஸ் வீதியிலுள்ள நான்கு மாடிக் கட்டடத்தின் கீழிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர், கணனி விஞ்ஞானம் துறையில் பயின்று கொண்டிருப்பவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களுடன் இரவு தூங்கிக் கொண்டிருந்த குறித்த நபர் கட்டடத்திலிருந்து கீழே விழுந்துவிட்டாரா அல்லது கொலைசெய்யப்பட்டு கீழே கொண்டுவந்து போடப்பட்டாரா என்பது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தில் கீறல் காயங்கள் சில இருப்பதாக தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## பளையில் கத்திக்குத்து; இளைஞன் உயிரிழப்பு

(பளை)

உறவினர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக் குத்தில் முடிவடைந்ததில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பளை தம்பகாமம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முத்தையா திலீபன் (வயது-27) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

உறவினர்களுக்கிடையில் நேற்று முன்தினம் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நேற்று அதிகாலை குறித்த இளைஞன் கோவிலுக்கு

IV ஆம் பக்கம் பார்க்க

## பெயானியின் கருத்து; அரசாங்கம் எதிர்ப்பு

ஐக்கிய நாடுகளின் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் இடம்பெயர்ந்தோர் தொடர்பாக விசேட பிரதிநிதி சலோகா பெயானியின் கருத்துக்கு அரசாங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும், 25 ஆவது மனித உரிமைகள் அமர்வில், ஐ.நா. விசேட பிரதிநிதி தனது இலங்கை விஜயம் தொடர்பான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

அவரது அறிக்கையில், கடந்த வருடம் பெயானி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது, அவரைச் சந்தித்தவர்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும், மிரட்டப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர் மக்கள் படையதிகாரிகளின் முன்னிலையில் தம்மிடம் கருத்துக்களை வெளியிட்டதாக முன்னர் பெயானி குறிப்பிட்டதாகவும், தற்போது

IV ஆம் பக்கம் பார்க்க

## ஒருதலைப்பட்ச தீர்மானங்களை அமுல்படுத்த மாட்டாது அரசு

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

ஒருதலைப்பட்சமாகவும் அநீதியான முறையிலும் ஐ.நா. ஊடாக நிறைவேற்றப்படும் எந்தத் தீர்மானங்களையும் அமுல்படுத்த அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். கண்டி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர், அடிப்படையற்ற குரோதமான முறையில் ஐ. நா. வால் இலங்கைக்கு எதிரான இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. சரியான தரவுகள் இதில் பரிசீலிக்கப்படவில்லை.

பல்வேறு நாடுகளின் வாக்குப் பலத்துடன் விவகாரங்களை விளக்க எத்தகைய தர்க்கங்கள் கொண்டு வரப்பட்டாலும் அது ஒரு தலைப்பட்சமான பிரேரணையாகும். இது அடிப்படையற்றது குரோதமானது. இலங்கை இறைமை கொண்ட நாடு. அந்த நாட்டை வழிநடத்தும் நாட்டின் தலைவருக்கும் மக்களின் சார்பில் தீர்மானங்களை எடுக்கும் கடமைப்பொறுப்பு உள்ளது.

நாட்டின் நலனுக்கு குரோதம் விளைவிக்கும் எந்த நடவடிக்

IV ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்
*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

★ ★ ★ ★ ★

### வேலைவாய்ப்பு

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர் பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000 ரூபா தொடக்கம் 35,000 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சியும் வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். உங்களுக்கு தேவையான தினமே தொழில். 077 596 42299 (C/3705)

★ ★ ★ ★ ★

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துக்கு 24,000 ரூபா தொடக்கம் 38,000 ரூபா வரை. வருகைதரும் தினமே சேர்த்துக் கொள்ளப்படுவார். (உற்பத்தி, பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். 077 085 4068

★ ★ ★ ★ ★

### காணி விற்பனை

முல்லைவீதி, வள்ளிபுனம் பழைய பாரதி இல்லத்திற்கு முன்பாகவுள்ள 1 3/4 ஏக்கர் தென்னங்காணி சிறிய வீடு. கிணறுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 077 6388611, 0777503918. (C/3709)


# “ஆனந்த சாரங்கம்” இசைவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சாரங்கா இசை மன்றம் நடாத்தும் 'ஆனந்த சாரங்கம்' இசைவிழாவும், மலர்வெளியீட்டு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கவுள்ளார்.

ஓய்வுநிலை நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகவும், ஓய்வுநிலை நுண்கலை விரிவுரையாளர் ஏ.கே.கருணாகரன் சிறப்பு விருந்தினராகவும், கலந்துகொள்ளவுள்ளனர்.

பிரதம விருந்தினர் மலரை வெளியீட்டுவைக்க கல்விக் காருண்யன் இ.ச.பே.நாகரத்தினம் முதல் பிரதியை பெற்றுக்கொள்வார். மலர் அறிமுகவுரையை விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்தவுள்ளார். (54)

# நூல் அறிமுக நிகழ்வு

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று வரும் புத்தகக் கண்காட்சியில் இன்று காலை 10 மணிக்கு முல்லை முஸ்ரிபாவின் கவிதை வழி பற்றிய கருத்தாடலும் நூல் அறிமுக நிகழ்வும் நடைபெறவுள்ளது.

கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப) தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கவிஞர் ந.சத்தியபாலன் “90 இற்கு பின்னரான ஈழத்து கவிதைகளின் சொல்நெறி” என்ற தலைப்பில் கருத்துரையும், திறனாய்வாளர் சி.ரமேஷ் 'முல்லை முஸ்ரிபாவின் கவிதைகளும் அதன் இயங்குதளமும்' என்ற தலைப்பில் கருத்துரையாற்றுவார்.

நூலின் அறிமுகவுரையை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் வழங்க, கவிஞர் ஐ.வரதராஜா திறனாய்வுரையையும், நூலாசிரியர் ஏற்புரையையும் நிகழ்த்துவார்கள்.

இலக்கிய ஆர்வலர்களின் வரவை எதிர்பார்க்கின்றனர் ஏற்பாட்டுக்குழுவினர். (105)


## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



### தங்கவேல் விஜயகுமார்

தோற்றம் - 12.03.1965
மறைவு - 19.07.2009

அன்புறவே நீர் மறைந்த நாள் முதலாய் ஆறாத்துயரில் வாடுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இந்நாளில் இறைவனை வேண்டுகின்றோம்.

வேலணை கிழக்கு
வேலணை

குடும்பத்தினர்

(C/3425)

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 263
திகதி - 2014.06.10
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

03 29 46 65 H

பரிசுத் தொகை ரூபா. 20,971,520/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 10 | 500,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 198 | 198,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 360 | 360,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9307 | 558,420/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5079 | 203,160/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 122536 | 2,450,720/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17519 | 350,380/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 20,971,520/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,620,680/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 21,211,320/-

2014.06.13ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

(C/3699)

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்ளேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3698)


# ஊர்காவற்றுறை பிரதேச சபை
# அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2014

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டு **2013.01.01**ஆம் திகதியில் உள்ளவாறான ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருடைய **2013.06.24**ஆம் திகதிய **NP/05/01/GE6/UNS/RQ** இலக்க கடிதத்திற்கு அமைவாகவும், கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின்கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவிகள் | | வெற்றிடம் |
|---|---|---|---|
| 01. | காரியாலய காரிய சகாயர் | தரம் III (இருபாலாரும்) | 02 |
| 02. | சுகாதாரத் தொழிலாளி | தரம் III (ஆண்கள்) | 07 |
| 03. | நூலக பரிசாரகர் | தரம் III (இருபாலாரும்) | 03 |

**சம்பளம்**
**2007.08.24**ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. **06/2006 (IV)** இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் **(11730-120x10-130x10-145x10-160x12-17600) PL-1-2006-A** ஆகும்.

**கல்வித்தகைமை**
கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது **ஆறு (06)** பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.அத்துடன் மேலதிக தகைமைகள்,அனுபவம் என்பன விசேட தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும்.

**குறிப்பு**
சுகாதார தொழிலாளர் பதவிக்கு ஆகக்குறைந்தது தரம் 8 சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும். ஆயினும் மேற்கூறிய கல்வித்தகைமையுடையோரிடம் இருந்து பொருத்தமான, போதுமான விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்திலேயே இவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

| இல | பதவி | | வெற்றிடம் |
|---|---|---|---|
| 04. | மின் இணைப்பாளர் | தரம் III (ஆண்கள்) | 01 |

**சம்பளம்**
2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. **06/2006 (IV)** இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் **(12210-130x10-145x10-160x10-170x12-18600) PL-2-2006-A** ஆகும்.

**கல்வித்தகைமை**
கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.அத்துடன் மேலதிக தகைமைகள்,அனுபவம் என்பன விசேட தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும்.

**தொழில்சார் தகைமை**
இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்கும் இறுதித்திகதியன்று ஆறு மாதங்களுக்கு குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.தேவையேற்படின் தொழில் தகைமை பரிசீலிக்கப்படும்.

| இல | பதவி | | வெற்றிடம் |
|---|---|---|---|
| 05 | சாரதி | தரம் III (ஆண்கள்) | 04 |

**சம்பளம்**
2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. **06/2006 (IV)** இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் **(12470-130x10-145x10-160x10-170x12-18860) PL-3-2006-A** ஆகும்.

**கல்வித்தகைமை**
கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.அத்துடன் மேலதிக தகைமைகள்,அனுபவம் என்பன விசேட தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும்.

**குறிப்பு**
சாரதி பதவிக்கு ஆகக்குறைந்தது தரம் 8 சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.ஆயினும் மேற்கூறிய கல்வித்தகைமையுடையோரிடம் இருந்து பொருத்தமான,போதுமான விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்திலேயே இவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

**ஏனையதகைமை**
1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை அல்லது தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பார வண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதி திகதிக்கு மூன்று(03) வருடத்திற்கு முன் பெற்றிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் வாகன சாரதியாக **மூன்று (03)** வருட அனுபவ சான்றிதழ்.
3. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2.5 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவு,பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியை கொண்டதுடன் சிறந்த கண்பார்வை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்.**
1. இப்பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள் / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்றுவருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

## தகைமைகள்

**அடிப்படைத் தகைமைகள்**
1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று **18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
5. தொழில்நுட்பம்சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**
அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**
1. ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் **ரூபா.100 +NBT** இனை செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக பூரணப்படுத்தப்பட்டு **செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை** என்ற முகவரிக்கு **பதிவுத்தபாலில்** அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
3. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
4. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான தகைமைகள் அனைத்தும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி**
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **2014.06.27** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என்பதுடன் காலதாமதமாகும் மற்றும் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நியமிக்கப்படுவோர் தொகையும் நியமனத்திகதியும் நியமன அலுவலரினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது ஏதேனுமொரு எண்ணிக்கையை நிரப்பாமலிருக்க நியமன அதிகாரிக்கு இடமுண்டு.

**2014.06.12**

**சு.சுதர்ஜன், செயலாளர்**
**ஊர்காவற்றுறை பிரதேசசபை, ஊர்காவற்றுறை.**

(C/3708)

# மக்களுக்கு சிறப்பான சேவையை செய்து வருபவர் அமைச்சர் டக்ளஸ்

## மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் புகழாரம்



(மானிப்பாய்)

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கிடைக்கின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி எமது மக்களுக்கான சிறப்பான சேவையை செய்து வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சிவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை அக்கல்லூரியில் மகிந்தோதயம் தொழில்நுட்பபீடக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்ற போது தலைமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர், வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதநேயப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சுற்றி எப்போதும் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் திரண்டிருப்பதைக் காணலாம்.

இவர்கள் எல்லோரும் தங்களது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே தினமும் அமைச்சரை நாடிச் செல்கின்றனர்.

தினமும் ஒய்வின்றி உழைத்துவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றிவரும் மனிதநேயப் பணிகள் தான் அவரை இன்னும் வாழ வைத்துள்ளது.

எமது இனம் பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் வாழ்ந்து வரும் நிலையில் அம் மக்களின் நடைமுறைச்சாத்தியமான வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகும்.

இந்த அரசு நாடளாவிய ரீதியில் கல்விமுறை மாற்றங்களைக் கொண்டு வருகிறது. பல்கலைக்கழகங்களுக்கு மாத்திரமே உரித்தாகவிருந்த பல வசதிகள் தற்போது பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் சந்திரராஜா, பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர், முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதன், பழைய மாணவர் சங்கத் தலைவர் கணேசமூர்த்தி, ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச அமைப்பாளரும், மானிப்பாய் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஜீவா (வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்) உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## காட்டு யானைகளால் தொல்லை

(நெடுங்கேணி)

நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியில் காட்டு யானைகள் தொல்லை அதிகரித்து வருவதினால் மக்கள் பெரும் கலக்கமடைந்துள்ளனர்.

நெடுங்கேணி ஒலுமடு அ.த.க. பாடசாலைக்கு முன்பாக உள்ள வீடு ஒன்றில் காட்டு யானை புகுந்து களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நெல்லினைச் சேதப்படுத்தியும், சாப்பிட்டும் உள்ளது.

காட்டு யானைகளின் தொல்லையால் ஒலுமடு அ.த.க. பாடசாலை விடுதியில் தங்கியிருக் கும் ஆசிரியர்களும் அச்சத்திலேயே மாணவர்களுக்கான கல்வியினைக் கற்பித்து வருகின்றனர். (40)

## தெய்வீக கான இசை மணிமாலை இறுவட்டு வெளியீட்டு விழா

தெய்வீக கான இசை மணிமாலை இறுவட்டு இன்று வெளியிடப்படவுள்ளது.

இசைத்தமிழ் வேந்தர் டாக்டர் வி.மு.நவரத்தினம் மற்றும் கானாமிர்த இசைக்குயில் தனசொரூபிநவரத்தினம் ஆகியோர் இதனைப் பாடியுள்ளனர்,

இந் நிகழ்வானது இன்று மாலை 2.00 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவை மகா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்துசமயப்பேரவை செயலாளர் சி.சக்திகிரீபன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தம்பதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஆளுனரின் செயலாளர் இ. இளங்கோவன் தம்பதிகளும், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், நயினாதீவு நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான தலைவர் ஆ. தியாகராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள்,

வரவேற்புரையினை இந்து சமயப்பேரவையைச் சேர்ந்த பாலஷண்முகன் வழங்குவார்.

ஆசியுரைகளை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், நயினை ஸ்ரீலஸ்ரீ கைலைவாம தேவக் குருக்கள், பொன்னாலை சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் ஆகியோர் வழங்குவார்கள். தொடக்கவுரையினை இந்து சமயப்பேரவையைச் சேர்ந்த பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வழங்குவார்.

வாழ்த்துரைகளை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன், பேராசிரியர் இரா.சிவச்சந் திரன், பேராசிரியர் வி.பி.சிவநாதன், பேராசிரியர் மா.வேதநாதன், கலாநிதி ஆறுதிருமுருகன், பேராசிரியர் கி.விசாகரூபன் ஆகியோர் வழங்குவர்.

இறுவட்டினை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இராஜலக்ஷ்மி தம்பதிகள் வெளியிட்டு வைக்க முதற்பிரதிகளை ஈ.எஸ்.பி.நாகரத்தினம், கங்கை வேணியன், தி.துவாரகேஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொள்வார்கள். (48)

## 100 வறிய மாணவர்களுக்கு மாதாந்த கல்வி நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர எல்லைப் பகுதியில் தந்தையை இழந்த வறுமைக் கோட்டிற்கு கிழ் வாழ்கின்ற சுமார் 100 மாணவர்களுக்கான மாதாந்தக் கல்வி நிதியுதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தியாகிகள் அறக்கொடை நிறுவனத்தில் நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற இந் நிகழ்வில் ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா 500 ரூபா வீதம் மாதாந்தம் அவர்களது கல்விக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியுதவி வழங்கும் ஆரம்ப நிகழ்வில் யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கராசா, தியாகி அறக்கொடை நிலையத்தின ஸ்தாபகர் வாமதேவா தியாகேஸ்வரனின் தயார் வாமதேவா சொர்ணாம்பிகை ஆகியோர் நிதியுதவியை வழங்கிவைத்தனர்.

இந்நிகழ்வில், பெருமளவு மாணவர்கள், பொதுமக்கள், தியாகி அறக் கொடை நிலையத்தின் பணியா ளர்கள், யாழ்.,நல்லூர் பிரதேச செயலக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (பா)

## கும்பாபிஷேகம்

கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேக நிகழ்வு இன்று காலை 7.15 மணி முதல் 8.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கலாநிதி சிவஸ்ரீ பு.கு.ஜெகதீஸ்வர குருக்கள் கும்பாபிஷேக நிகழ்வை தலைமை ஏற்று நடத்தவுள்ளதாக கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை நல்ன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது. (இ)

## வீதி விபத்தில் இருவர் படுகாயம்

நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலடி பருத்தித்துறை வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்டோ ஒன்று பருத்தித்துறை வீதியில் குறுக்கு வீதியொன்றினூடாகச் செல்வதற்கு திரும்பிய வேளை பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று ஆட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியதன் காரணமாகவே மோட்டார் சைக்கிளில் பயணித்த அச்சுவேலியைச் சேர்ந்த த.கோணேஸ்வரன் (வயது-27), சுப்பிரமணியம் யோகேஸ்வரி ஆகிய இருவருமே காயமடைந்தனர். (பா)


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### FACULTY OF ARTS

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mention posts.

Senior Professor / Professor of
Education / Economics / Fine Arts / Geography /Hindu Civilization/ Linguistics / Tamil / History

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Archeology / Christian Civilization / Economics / Linguistics / Education / Geography / Philosophy/ Tamil / Music (Vocal / Violin) / Dance (Bharathanatiyam / Drama &Theatre) / Art & Design (Computer Graphics) / Law/Translation Studies

Note :

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.61100 - 11x1425 - 82775/-p.m |
| Professor | Rs.56505 - 13x1310 - 73535/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.45545 – 7x1050 – 52895/- p.m |
| Senior Lecturer Gr.II | Rs.39755 – 11x790 – 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/-p.m |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid:

i. Academic allowance (65% to 90% of basic salary based on designation)
ii. Research allowance equal to 35% of basic salary based on their research activity
iii. Special allowance -20% of the basic salary
iv. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
iii) Gratuity payments
iv) Employees' Trust Fund benefits
v) Free Medical Services

**Closing date:**

**Post of Senior Professor/Professor - 12.09.2014**
**Other posts - 11.07.2014**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments. University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the Shroff's Counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for 100/- drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self–addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**11.06.2014**

C/3707)

# வலி.தெற்கு சந்தைகளில் சீட்டு, மீற்றர் வட்டிக்கு தடை

வலி. தெற்கு (உடுவில்) பிரதேச சபைக்குட்பட்ட சந்தைகளில் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் மற்றும் சீட்டுப் பிடிப்பவர்கள் நடமாடுவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா பிரகாஸ் நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் வலி. தெற்கிற்கு உட்பட்ட சந்தைகளில் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் கண்காணித்து . உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச சபையினால் ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மீற்றர் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் மற்றும் சீட்டுப் பிடிப்பவர்களின் நடவடிக்கைகள் காரணமாக சந்தை வியாபாரிகள பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சந்தையில் அதிகளவிலான பொதுமக்கள் கூடியிருக்கும் வேளையில், மீற்றர் வட்டிக்காரர்களும், சீட்டுப் பிடிப்பவர்களும் வியாபாரிகளை மரியாதைக் குறைவாகப் பேசுவதும் அதனால் வியாபாரிகள் தற்கொலை செய்தல் மற்றும் தொழிலில் இருந்து நீங்குதல் போன்ற சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அண்மையில் இத்தகைய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்மையினால் அதனைக் கருத்திற்கொண்டு இந்தக் கட்டுப்பாட்டை மேற்கொண்டுள்ளதாகவும் இந்தக் கட்டுப்பாட்டினால் பொதுமக்களும் வியாபாரிகளும் பாதிப்படையப் போவதில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

# கிளி.அனைத்து பகுதிகளுக்கும் வருட இறுதிக்குள் மின்சாரம்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு


(கிளிநொச்சி)

இவ்வருட இறுதிக்குள் கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்குவதை இலக்காக கொண்டு பணிகள் முன்னெடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி விடுதியில் இடம் பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

அனைவருக்கும் மின்சாரம் என்ற அரசின் கொள்கைக்கு அமைவாக இவ்வருட இறுதிக்குள் கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தற்போது இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்ட பொறியியலாளர்கள் பலர் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் ஏற்கெனவே மின்சாரம் வழங்கப்பட்ட கிராமங்களில் மின்சாரம் கிடைக்காமல் விடுபட்டிருக்கும் பிரதேசங்களுக்கும், புதிதாக மின்சாரம் வழங்கவேண்டிய பிரதேசங்களுக்குமான மதிப்பீட்டு பணிகள் நிறைவுற்று தொடர்ந்து பணிகள் முன்னெடுக்கப்படும்.



அதனடிப்படையில் இவ்வருட இறுதிக்குள் கிளிநொச்சியின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்குவதே இலக்கு எனவும் குறிப்பிட்ட அதனை நோக்கிய பணிகள் விரைந்து முன்னெடுக்கபட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதி பொது முகாமையாளர் குணதிலக, வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன், மின்சார சபையின் வர்த்தக பிரிவு பொறியியலாளர் திருமதி கோபிகா, மின்சார சபையின் கிளிநொச்சி பிரதேச பொறியியலாளர் நிரோஜன், வடக்கின் வசந்தம் மின் பொறியியலாளர் அமிலடயஸ், கிளிநொச்சி மின் அத்தியட்சர் குகராஜ, மற்றும் மின்சார சபையின் பொறியியலாளர்கள், பளை பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்புழகன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் மனோகரன், இராமச்சந்திரன், கிருஸ்ணசாமி, சபாநாயகம், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் இராசலிங்கம், பிரதேச மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# உழவு இயந்திரப்பெட்டியை மோதித்தள்ளியது ரயில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் மீது நேற்று இரவு 8.30 மணிக்கு பயணித்த புகையிரதம் மேதியதில் உழவு இயந்திரப்பெட்டி சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சி, விவேகானந்தநகர் பிரதான வீதியில் மிகவும் உயரமான புகையிரதக் கடவையூடாக உழவு இயந்திரம் சென்று கொண்டிருந்தபோது குறித்த ரயில் மோதியுள்ளது.

இதன்போது சாரதியும், அதில் பயணம் செய்தவரும் அதிர்ஷ்டவசமாக தப்பியுள்ளனர். பாதுகாப்பற்ற இந்த புகையிரதக் கடவையில் ஏற்கனவேயும் பல தடவைகள் விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

விவேகானந்த நகர், மலையாளபுரம், பாரதிபுரம், உதயநகர் உட்பட பல கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள இந்தப் புகையிரதக் கடவையில் பாதுகாப்பு பணியாளர்கள் எவரும் இல்லை. பெருமளவு பயணிகள் அடிக்கடி பயணம் செய்யும் பாதை இதுவாகும்.

எனவே இப்பாதையில் காவலாளியை நியமிப்பதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (77)

# மொஸ்கோவில் விபத்து; இலங்கையர் பலி

மொஸ்கோவில் உள்ள ரஷ்யத் தூதரகத்தில் பணியாற்றும் பணியாளர் ஒருவர் விபத்து ஒன்றில் பலியானார். அதேநேரம் இலங்கை இராஜதந்திரி ஒருவர் மோதல் ஒன்றின் போது துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சனல் லைப் நியுஷ் செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று ரஷ்யாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காக சென்ற எழுதுவினைஞரை கார் ஒன்று மோதியால் அவர் உயிரிழந்தார்.

அதேநேரம் ரஷ்ய தூதரகத்தில் பணியாற்றும் இரண்டாம் நிலைச்செயலாளர் தாம் பயணித்த வாகனத்தின் வாடகை தொடர்பில் வாகன சாரதியுடன் முரண்பட்டபோது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அவரின் இதயப்பகுதியில் காயம் ஏற்பட்டது. பல மணித்தியாலங்களின் பின்னர் குறித்த வாகன சாரதி கைது செய்யப்பட்டார்.


## விளம்பரம் சேகரிப்பாளர் தேவை

விளம்பரம் சேகரிப்பதில் முன் அனுபவமும், துடிப்புடன் பணியாற்றக்கூடிய செயற்திறனும் மிக்க இருபாலாரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அலுவலக நேரத்தில் சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
தினமுரசு,
இல. 373,பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (இ)


# பாதுகாப்பற்ற நிலையில் வடக்கு, கிழக்கு பெண்கள்

## கூறுகிறது ஐ.நா.

தமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், வடக்கு கிழக்கில் 40 வீதமான பெண்கள் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற நிலைமையை உணர்வதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் பிரதிநிதி அலியான் சிபினலே இதனைத் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடைபெறும் வன்முறைகளின்போது பாலியல் வன்முறைகளை கட்டுப்படுத்தும் மாநாட்டுக்கு இணையாக கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் சிபினாலே இதனைக் குறிப்பிட்டார்.

### சாத்திய...

அதிதியாகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கடந்த கால தவறான அரசியல் முன்னெடுப்புக்கள் பாரிய அழிவுகளையும், இழப்புக்களையும், துன்பங்களையும் எமக்கு தந்துள்ளன.

இந்நிலையை நாம் மீண்டும் உருவாக்கி விடக் கூடாது என்பதில் கவனமாக செயற்பட வேண்டும்.

நாம் செல்லும் பாதை நேரிய பாதையாகும். பல்வேறு அர்ப்பணிப்புக்கள், தியாகங்களுக்கு மத்தியில் நாம் தொடர்ந்தும் நடைமுறைச்சாத்தியமான பாதையிலேயே பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இப்பயணமே நிச்சயம் வெல்லும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எமது இந்த நடைமுறைச் சாத்தியமான வழிமுறையை அன்று எதிர்த்தவர்கள் இன்று அதே வழிக்கு வந்துள்ளதை நீங்களே கண்கூடாகக் காண்கிறீர்கள் எனத் தெரிவித்தார்.

30 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் மத்திய கல்வி அமைச்சின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறானதொரு வசதியை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு வழங்கியமைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவுக்கும், கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மக்கள் சார்பாக தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### கவுணாவத்தை...

தால் பிரிவு 4 இன் கீழ் பிரதேசசபையிடம் முன் அனுமதி பெற்று வர்த்தமானி மூலம் பொது அறிவித்தல் விடுத்து இதனை மேற்கொள்ள முடியும் எனவும் நீதிமன்றினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பளையில்...

சென்று திரும்பும்வரை காத்திருந்து அவரது வீட்டு வாசலில் வைத்து அவரை கத்தியால் குத்திக் கொலை செய்துள் ளார்கள்

உடனடியாக பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை

கொலைச் சந்தேகநபரை பளை பொலிசார் கைது செய்துள்ளார்கள். பிரேத பரிசோதனைக்காக சடலம் பளை வைத்திய சாலையில் உள்ளதுடன. மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (37)

### பெயானியின்...

வேறு குற்றச்சாட்டு ஒன்றை சுமத்தி வருவதாகவும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு உள்ளிட்ட சகல பிரதேசங்களுக்கும் சர்வதேச பிரதிநிதிகள் விஜயம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பெயானியின் இலங்கை விஜயம் பற்றிய தகவல்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனச் குறிப்பிட்டுள்ளது..

### மயக்க...

பயணிகள் அனைவரும் இறங்கியதும், ரயில்வே அதிகாரிகள் அடுத்த பயணத்துக்காக ரயிலை தயார் செய்த போது அங்கு ஒருவர் மயங்கிய நிலையில் கிடப்பதைக் கண்டு அவருக்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கினர். மயக்கம் தெளிந்து எழுந்த பகீரதன், கொழும்பில் இருந்து புறப்பட்ட சில மணித்தியாலயங்களின் பின்னர் தனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

### ஒருதலைப்பட்ச...

கையை எடுக்கவும் எவருக்கும் இடம் இல்லை. உலகமே அதிசயிக்கும் வகையில் இந்த அரசு பாரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. உலகில் மிகவும் குரோதமான பயங்கரவாத அமைப்பை இலங்கை அரசு ஒழித்தது. இத்தகைய அடிப்படையில் தடைகள் வருவது இயற்கையாகும். இப்படி தடைகள் வந்தாலும் நாம் அவற்றை எல்லாம் எப்போதும் தைரியத்துடன் வெற்றி கொண்டுள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.